Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

3 21

10 28

சந்திரதரிசனம்

17 5

நேற்று இரவு 10.10 முதல்
இன்று இரவு 7.57 வரை
நவமி

24

27, 28
கரிநாள் அன்று சுபகாரியங்கள்
எதுவும் செய்யக்கூடாது

இந்துக்கள் பண்டிகை

13. ஸ்ரீ மஹா சிவராத்திரி

முஸ்லீம் பண்டி...

11. சென்னை ஹஸ...
பத்தாஷா உரூ...

மார்ச் 2018

ஞாயி	திங்	செவ்	புதன்	வியா	வெள்	சனி
				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	31

குறிப்புகள்

கௌரி பஞ்சாங்கம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாஷ்யம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ:

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாஷ்யம்

॥ श्रीललिता - सहस्रनाम - भाष्यम् ॥

'ஸ்ரீராமகிருஷ்ண சந்திரிகை'
என்னும் உரையுடன் கூடியது

உரை ஆசிரியர்
"அண்ணா"

ஸ்ரீராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர், சென்னை-4

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வெளியிடுபவர்:
தலைவர்
ஸ்ரீராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர், சென்னை-4
© உரிமைப் பதிவு பெற்றது

முதல் பதிப்பு: 1955
26-ஆம் பதிப்பு: நவம்பர் 2014
2M 3C

ISBN 81-7823-344-4

இதுவரை அச்சான பிரதிகளின்
எண்ணிக்கை: 64,100

அச்சிட்டோர்:
ஸ்ரீராமகிருஷ்ண மடம் அச்சகம்
மயிலாப்பூர், சென்னை-4

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பொருளடக்கம்

குறிகளின் விளக்கம் viii

முகவுரை ix

ஸ்ரீ சக்கரம் xvii

ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்:

பூர்வபாகம் 1

நியாஸம் 17

ஸ்தோத்ரம் 24

உத்தர நியாஸம் 80

உத்தர பாகம்: பலசுருதி 83

நாமாவளி 105

நாமாவளியின் பாஷ்யம் 131

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

குறிகளின் விளக்கம்

அ.-அவயவப்பொருள்

ஒ.-ஒப்பிடுக

கீ.-ஸ்ரீமத் பகவத்கீதை

சு.-சுலோகம்:

சங்.-ஸ்ரீ ஆதிசங்கரர்

பா.-ஸ்ரீ பாஸ்கரராயர்

பா.- பாட பேதம்

ஸௌ. ல.-ஸௌந்தர்ய லஹரீ

ஈச.உப.-ஈசாவாஸ்ய உபநிஷத்து

கே.உப.-கேன உபநிஷத்து

கட. உப.-கட ,,

ப்ர. உப.-ப்ரச்ன ,,

மு. உப.-முண்டக ,,

மா. உப.-மாண்டூக்ய

தை. உப.-தைத்திரீய

ஐ. உப.-ஐதரேய ,,

சா. உப.-சாந்தோக்கிய ,,

ப்ரு.உப.-ப்ருஹதாரண்யக உபநிஷத்து

உச்சரிப்பு

க	ग	கங்கை என்பதில்	போல
ட	ड	குடம்	,,
த	द	பாதம்	,,
ப	ब	இன்பம்	,,
ரு	ऋ	எருது	,,
ச	श	பாசம்	,,
ऽ	अ	'அ' தொக்கு நிற்கும்.	

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முகவுரை

ஸ்ரீ வேதவியாஸர் உபநிஷத்ஸாரமான ஸ்ரீமத் பகவத் கீதையை மகாபாரதத்தின் நடுநாயகமாக அமைத் திருப்பதுபோல் மந்திர சாஸ்திரத்தின் ஸாரமான ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தைப் பிரம்மாண்ட புராணத்தின் நடுநாயகமாக அமைத்திருக்கிறார். வேதாந்தத்திற்குப் பகவத் கீதை ரத்தினச் சுருக்கமாகவும் ஒப்புயர்வற்ற தாகவும் உலகப் பிரசித்தமாகவும் விளங்குவது போல் மந்திர சாஸ்திரத்திற்கு லலிதாஸஹஸ்ரநாமம் விளங்கு கிறது. இது பிரம்மாண்ட புராணத்தில் லலிதோபாக்கி யானத்தில் ஸ்தோத்திர கண்டத்தில் பொக்கிஷத்தில் வைக்கப்பட்ட நிதி போல் வைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ லலிதாஸஹஸ்ரநாமத்திற்கு எழுதப்பட்ட பாஷ்யங்களுள் தலை சிறந்ததாய் விளங்குவது ஸ்ரீ பாஸுரானந்த நாதர் என்ற பாஸ்கரராயர் எழுதியது. பெரும்பாலும் அதைப் பின்பற்றியே ''ஸ்ரீ ராமகிருஷ்ண சந்திரிகை'' என்ற பெயரில் இந்நூலில் வெளியாகும் சுருக்கமான உரை எழுதப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ பாஸ்கரராயர் காலம் கலி ஆண்டு 4790 முதல் 4885 வரை (கி.பி. 1690–1785). அவர் எழுதிய நூல்கள் பல. அவற்றுள் ''ஸௌபாக்கிய பாஸ்கரம்'' என்று பெயர் பெற்ற ஸ்ரீ லலிதாஸஹஸ்ரநாம பாஷ்யமும் ''வரிவஸ்யா ரஹஸ்யம்'' என்ற பஞ்சதசாக்ஷரீ விளக்கமும், ''ஸேது பந்தம்'' என்ற நித்யா-ஷோடசிகார்ணவ பாஷ்யமும் ஸ்ரீவித்தையின் ப்ரஸ்தானத்ரயம் எனப் போற்றப் படுவன. பாஸ்கரராயர் பிறந்தது மஹாராஷ்டிர தேசம். தஞ்சை அரசரின் நன்மதிப்பைப் பெற்றுக்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

காவிரிக்கரையில் குடியேறித் தம் குருநாதராகிய கங்காதர வாஜபேயி வாசம் செய்த திருவாலங்காட்டுக்குச் சமீபத்தில் 95–வயது வரை வாழ்ந்தார். அவர் வசித்த இடமே இன்று பாஸ்கரராஜபுரம் என்று வழங்கும் ஸ்தலம்.

பிரம்மவித்தையும் ஸ்ரீவித்தையும் ஒன்றே. பிரம்ம வித்தையான வேதாந்தம் கூறும் உண்மைகளை எளிதில் அநுபவத்திற்குக் கொண்டுவருவதற்கு வழி காட்டுவது ஸ்ரீவித்தை. மந்திரமும் யந்திரமும் தந்திரமும் ஸ்ரீவித்தையில் அடக்கம். (ஸர்வ மந்த்ரஸ்வரூபிணீ – ஸர்வயந்த்ராத்மிகா – ஸர்வதந்த்ரரூபா, நாமம் 204-6.). மந்திரத்தின்லுள்ள கருத்தை உருவப்படுத்திக் காட்டுவது யந்திரம். அதில் சித்தத்தை நிறுத்துவதற்குப் பயன்படும் பாஹிய பூஜையும் மானஸிக பூஜையும் அஷ்டாங்க யோகமும் மற்ற ஸாதனங்களும் தந்திரத்தில் அடங்கும். ஸ்ரீவித்தையின் முக்கியமான மந்திரம் பஞ்சதசாக்ஷரி, முக்கியமான யந்திரம் ஸ்ரீசக்கரம், முக்கியமான தந்திரம் ஐக்கியானுஸந்தானம். மந்திரஸித்திக்கு யந்திரமும் தந்திரமும் பக்கத் துணைகள். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் தம் சரீரத்தையே சிறந்த யந்திரமாகக் கருதினார். அவர் அன்னை பராசக்தியிடம் (அமீ யந்த்ர, தும் யந்த்ரீ) 'நான் யந்திரம், நீ யந்த்ரீ எனக் கூறுவார்.

இமயமலை போன்ற ஸநாதன தர்மத்தினின்று உதித்துப் பல திசைகளில் பாய்ந்தோடும் நதிகள் போன்ற மதங்களின் ஸங்கமஸ்தானமாகிய ஸமுத்திரம் ஸ்ரீவித்தை. பிரிந்து போன மார்க்கங்களை ஒன்று படுத்தும் இடமாக அது விளங்குகிறது. காணபத்யம், ஸௌரம், வைஷ்ணவம், சைவம் என்ற எல்லா உபா ஸனா மார்க்கங்களும் இங்கே ஸமரஸம் அடைகின்றன. ('அந்த: சாக்தோ பஹி: சைவோ வ்யவஹாரேஷு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வைஷ்ணவ:') உள்ளே சாக்தன், வெளியே சைவன், வியவகாரத்தில் வைஷ்ணவன் என்ற படி ஒரே ஸாதகனும் கூட முரண்பாடின்றி வெவ்வேறு மார்கங்களைச் சமரஸப்படுத்திக் கையாளலாம். சக்தி வடிவான காயத்ரி உபாஸனையில் இந்தச் சமரஸம் அடங்கியிருப்பதை காயத்ரியை வழிபடுவோர் அறிவர். காயத்ரியும் பஞ்சதசாக்ஷரியும் ஒன்றே என்பதை வரிவஸ்யா ரஹஸ்யத்தில் பாஸ்கரராயர் தெளிவுற விளக்கியிருக்கிறார். பாரதப்போருக்கு முன் ஸ்ரீகிருஷ்ண பகவான் துர்க்கா தேவியைப் பிரார்த்திக்கும்படி அர்ஜுனனுக்குக் கூற அர்ஜுனன் பின்வருமாறு துதித்தான்.

'வேதச்ருதி – மஹாபுண்யே ப்ரஹ்மண்யே ஜாதவேதஸி। த்வம் ப்ரஹ்ம–வித்யா வித்யானாம் மஹாநித்ரா ச தேஹினாம் ॥ ஸாவித்ரீ வேதமாதா ச ததா வேதாந்த உச்யதே । ஸ்துதாஸி த்வம் மஹாதேவி விசுத்தே-னாந்தராத்மனா ॥ ஜயோ பவது மே நித்யம் த்வத் ப்ரஸாதாத் ரணாஜிரே ॥'

அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணனுடைய நண்பன், சிவபக்தன், தேவி உபாஸகன். இதனால் ஸமய ஸமரஸம் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஸ்ரீ ஆதிசங்கரர் காட்டிய ஸாதன மார்க்கத்தில் பஞ்சாயதன பூஜையும் அவர் ஏற்படுத்திய சிருங்ககிரி காமகோடி முதலிய பீடங்களில் தேவீ உபாஸனையும் அவரெழுதிய நூல்களில் பிரபஞ்சஸாரம், ஸௌந்தர்ய லஹரி, த்ரீசதீ பாஷ்யம் முதலியவையும் தேவீ புஜங்கம் போன்ற ஸ்தோத்திரங்களும் இச் சமரஸத்தையே நிலை நாட்டுகின்றன.

நவயுக அவதார புருஷராகிய ஸ்ரீ ராமகிருஷ்ணர் புறமதங்களையும் ஏற்று, எம்மதமும் அன்னைக்குச்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சம்மதமே என்பதைத் தம் வாழ்க்கையாலும் உபதேசத்தாலும் உலகுக்கு எடுத்துக்காட்டினார். அன்னை பராசக்தியின் அருளால் இந்நிலை கிட்டாத வரை வேதாந்தம் வெறுங் கேள்வியாக மட்டுந்தான் இருக்கும். அன்னையை உள்ளன்புடன் வழிபட்டால் அவளே எல்லாத் தேவதைகளையும் காட்டியருள்வாள். அவளே ஸர்வதேவ–தேவீ–ஸ்வரூபிணீ.

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தை இந்த அடிப்படையான ஸமரஸ பாவனையுடன் அணுகி அனுஸந்தானம் செய்பவர்க்கு நிர்க்குணமும் ஸகுணமும் கருமமும் பக்தியும் யோகமும் ஞானமும் வாமாசாரமும் தக்ஷிணாசாரமும் கோரமும் சாந்தமும் இல்லறமும் துறவறமும் எல்லாம் அன்னையின் உள்ளத்துக்கு உகந்ததாகவும் எல்லாமாயிருக்கும் அவளை அடையும் மார்க்கங்களாகவும் காட்சியளிக்கும். அவளே பிரம்மா, அவளே விஷ்ணு, அவளே சிவன் (ஸ்ருஷ்டி கர்த்ரீ ப்ரஹ்மரூபா, கோப்த்ரீ கோவிந்த ரூபிணீ । ஸம்ஹாரிணீ ருத்ரரூபா, திரோதானகரீச்வரீ ॥ ஸதாசிவானுக்ரஹதா பஞ்சக்ருத்ய–பராயணா ॥ சு.63–64) இங்ஙனம் தேவியை வழிபடுவதற்கு எல்லா வர்ணத்தாருக்கும் ஆடவருக்கும் பெண்டிருக்கும் சமஉரிமை உண்டு. (ஸர்வ வர்ணாதிகாரச்ச நாரீணாம் யோக்ய ஏவ ச). 'இது வித்தைகளுக்கு அரசு, ரகசியங்களில் சிறந்தது, உத்தமமானது, பரிசுத்தமளிப்பது, நேரில் கண்டு அநுபவிக்கக் கூடியது. தருமத்தினின்று பிறழாதது. அனுஷ்டிப்பதற்கு மிக எளியது, என்றும் அழியாதது' என்று பகவத் கீதையில் கூறியது (கீ. 9.2) ஸ்ரீவித்தைக்கும் முழுதும் பொருந்தும்.

கீதைக்கும் லலிதா ஸஹஸ்ரநாமத்திற்கும் ஒற்றுமையிருப்பதுபோல, கிருஷ்ணனுக்கும் லலிதாதேவிக்கும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உள்ள ஒற்றுமை உபாஸகர்களுக்கு விளங்காமல் இராது (கதாசித் லலிதேசானீ பும்–ரூபாக்ருஷ்ண–விக்ரஹா) புல்லாங்குழல் ஊதி வனமாலை அணிந்து கோபிகளுடன் விளையாடிய சுந்தரமூர்த்தியான கிருஷ்ணனே அர்ஜுனனுக்கு விசுவரூபம் காட்டியபோது தெற்றிப்பற்களும் அகன்று வாயும் உடையவனாய் உலகனைத்தையும் ஒரே கவளத்தில் உட்கொள்ளும் கோரவடிவினனாகத் தோன்றினான். (ஒ. காலோ஽ஸ்மி லோகக்ஷயக்ருத் ப்ரவருத்த: | தம்ஷ்ட்ராகராலானி ச தே முகானி, மா தே வ்யதா மா ச விமூடபாவோ த்ருஷ்ட்வா ரூபம் கோரமீத்ருங் மமேதம் –கீ.அத். 11). இங்ஙனம் கோரமும் சாந்தமுமாகும் இரண்டு வடிவுகளையும் ஒன்று சேர்த்துக் காணாதவரை, பயம் அகலாது; பூர்ண ஞானம் எய்த இயலாது. 'நான் என் அடியார்க்கும் கஷ்டம் கொடுக்க மாட்டேன்' என்று பகவான் கூறவில்லை. 'கஷ்டத்தைக் கொடுத்து அதைத் தாங்கும் சக்தியையும் கொடுத்து அவர்களை வீரராக்குவேன்' எனவே கூறுகிறார். அதனால்தான் குந்திதேவி 'உன் அருளைக் கூட்டி வைக்கும் விபத்துக்கள் அவ்வப்போது வந்துகொண்டே இருக்கட்டும்' என்று பிரார்த்திக்கிறாள். (விபத: ஸந்து தா: சச்வத் தத்ர தத்ர ஜகத்குரோ—பாகவதம் 1.8.26). கிருஷ்ணனுடைய அன்பைப் பெறுவோர் அளவிலாத சோதனைக்கு உள்ளாகின்றனர். தேவியின் பூர்ண அருளைப் பெறுவோருக்கும் தேவி தன் ஊழிக்கூத்தைக் காட்டுகிறாள். லலிதாதேவி (ஸுமங்கலீ ஸுக்கரீ ஸுவேஷாட்யா ஸுவாஸினீ) அழகும் அன்பும் அருளும் உருக்கொண்டவளாயினும் (பசுலோக–பயங்கரீ, வீர–கோஷ்டீப்ரியா, மஹாகாளீ, சண்ட முண்டாஸுர–நிஷூதினீ, தைத்ய ஹந்த்ரீ, தக்ஷயஜ்ஞ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விநாசினீ) மிருகங்களைப்போல வாழும் மக்களுக்குப் பயங்கரமானவள், ஞான வீரர்களுக்குப் பிரியமானவள், கொடியோரைக் கொல்லுபவள், டம்பத்துக்காகச் செய்யும் யாகங்களை நாசம் செய்பவள்.

'எத்திக் கினிலும் நின்விழி யனல்போய் எட்டித்தானே
எரியுங் கோலம் கண்டே சாகும் காலம் — அன்னை, அன்னை
ஆடுங் கூத்தைக் காணச் செய்தா யென்னை' (பாரதி)

அவள் கோபம் தீயோர்க்குக் கொடியதாகக் காணப் படினும் அடியார்க்கு அபயம் அளிப்பதாகவே திகழ் கின்றது. அவள் அளிக்குந் துன்பமும் மனத்தின் கோணலை நிமிர்த்தவும் குற்றங்களைக் களையவும் பாவக்குவியலைப் பொசுக்கவுமே பயன்படுகிறது. ஆயிரம் யுகங்களாக வளர்ந்த தீமை அவள் கோபத்தில் அரைநொடியில் பட்டுப் போகின்றது.

துர்க்கே ஸ்ம்ருதா ஹரஸி பீதி–மசேஷஜந்தோ:
ஸ்வஸ்தை: ஸம்ருதா மதி–மதீவ சுபாம் ததாஸி ।
தாரித்ர்ய–து: க்க–பயஹாரிணி கா த்வதன்யா
ஸர்வோபகாரகரணாய ஸதாऽऽர்த்ர-சித்தா ॥

—தேவீ மாஹாத்மியம் 4.16.

'இது எல்லாம் புராணக்கதை, இந்தக் காலத்திற்கு பயன்படாது' என்று எண்ணுவோர் உண்டு. அவர்களுக் குச் சங்கராசாரியர் கூறும் பதில் கவனிக்கத்தக்கது. 'இந்த யுகத்தில் உள்ளவர்களுக்கு வீரியக்குறைவால் ஞானசித்தி இயலாதென்று எவருக்காவது எண்ணம் ஏற்படலாம். மகா வீரியம் பொருந்திய வாமதேவர் முதலில் ரிஷிகளுக் கும் வீரியம் குறைந்த தற்கால மனிதர்க்கும் பரம் பொருளைப் பற்றியவரை வேற்றுமையோ பரஞானத் தில் வேற்றுமையோ இல்லை. எக்காலத்திலும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

எவராலும் சித்திபெற இயலும். ('ஸேயம் ப்ரஹ்ம வித்யயா ஸர்வ–பாவாபத்தி – ராஸீன் மஹதாம் தேவாதீ னாம் வீர்யாதிசயாத் । நேதானீ – மைதம்–யுகீனானாம் விசேஷதோ மனுஷ்யாணாம் அல்ப–வீர்யத்வாதிதி ஸ்யாத் கஸ்யசித் – புத்திஸ்–தத்–வயுத்தாபனாய ஆஹ, ந ஹி மஹாவீர்யேஷு வாமதேவாதிஷு ஹீனவீர்யேஷு வா வார்த்தமானிகேஷு மனுஷ்யேஷு ப்ரஹ்மணோ விசேஷஸ்–தத் விஜ்ஞானஸ்ய வா அஸ்தி' – ப்ரு. உப. பாஷ்யம் – 1. 4. 10. சங்.).

இவ்வுண்மையை நமது காலத்தில் தமது வாழ்க்கை யில் கண்கூடாகக் காட்டியருளியவர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர். குருவிடமிருந்து தீக்ஷை, தீக்ஷையால் மந்திரம், மந்திரத்தால் சித்தி என்பது அன்றுபோல் இன்றும் உண்மை. ஸ்ரீ லலிதாஸஹஸ்ரநாம பாராயணம் இவ்வுண்மை அநுபவத்தைப் பெறுவதற்கு அன்றுபோல் இன்றும் ஒப்புயர்வற்ற ஸாதனமாக விளங்குகிறது.

ஸ்ரீ ராமகிருஷ்ண் வித்யாலயம்,
தியாகராயநகர், சென்னை.
மன்மதஸு ஆனிமீ 20உ — உரையாசிரியர்.
பௌர்ணமி. 4—7—1955.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

॥ समर्पणम् ॥

प्रदीपज्वालाभि-र्दिवसकर-नीराजन-विधिः
सुधासूते-श्चन्द्रोपलजल-लवै-रर्घ्य-रचना ।
स्वकीयै-रंभोभिः सलिलनिधि-सौहित्यकरणं
त्वदीयाभि-र्वाग्भि-स्तव जननि वाचां स्तुतिरियम् ॥

ஆதவனுக் கவன்கிரணத் தங்கியைக் கொண்டாலாத்தி
சுழற்றல் என்கோ
சீதமதிக் கவன்நிலவின் ஒழுகுசிலை புனல்கொடுப
சரிப்ப தென்கோ
போதியமைக் கடல்வேந்தை அவன்புனலால்
முழுக்காட்டு முறைமை என்கோ
நீதருசொல் கவிகொடுனைப் பாடியுன தருள்பெறுமென்
நீதி யம்மே.

கர்ப்பூர தீப ஜ்வாலையால் சூரியனுக்கு நீராஜனம் செய்தாற்போலும் அமிருத கிரணங்களைப் பொழியும் சந்திரனுக்குச் சந்திரகாந்தக்கல்லில் கசியும் நீர்த்துளிகளால் அர்க்கியம் அளித்தாற்போலும் சமுத்திரத்திற்குச் சொந்தமான ஜலத்தாலேயே சமுத்திர ராஜனுக்குத் தர்ப்பணம் செய்தாற்போலும் உன்னுடையதேயான வாக்குகளால் அமைந்த இந்த ஸதோத்திரம் உளது.

—ஸௌந்தர்ய லஹரீ. 100.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

श्रीचक्रम्



ஶ்ரீ சக்கரம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

बिन्दु-त्रिकोण-वसुकोण-दशारयुग्म-
मन्वश्र-नागदल-संयुत-षोडशारम् ।
वृत्तत्रयं च धरणीसदनत्रयं च
श्रीचक्रमेत-दुदितं परदेवताया : ॥

பிந்து, முக்கோணம், எட்டுக்கோணம், இரண்டு பத்துக் கோணங்கள், பதினாலுகோணம், எட்டுத் தளம், பதினாறு தளம், மூன்று வட்டம், மூன்று கோட்டுப் பூபுரம் என்றவைகளாலாகிய இது பரதேவதையின் ஸ்ரீசக்கரம் எனப்படும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

॥ श्रीगुरुपादुकावन्दनम् ॥

ऐंकारह्रींकार-रहस्ययुक्त-श्रींकारगूढार्थ-महाविभूत्या ।
ओंकारमर्म-प्रतिपादिनीभ्यां नमो नमः श्रीगुरुपादुकाभ्याम् ॥

ஐங்கார-ஹ்ரீங்கார-ரஹஸ்யயுக்த-
ஸ்ரீங்கார-கூடார்த்த-மஹாவிபூத்யா
ஓங்கார-மர்ம-ப்ரதிபாதினீப்ப்யாம்
நமோ நம: ஸ்ரீகுருபாதுகாப்ப்யாம் ॥

ஐங்காரம் ஹ்ரீங்காரம் ஆகியவற்றின் ரகசியத்துடன் கூடிய ஸ்ரீங்காரத்தின் உட்கருத்தாகிய சிறந்த செல்வத்தால் ஓங்காரத்தின் மர்மத்தை விளங்க வைக்கும் ஸ்ரீகுருநாதரின் திருவடிகளுக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

श्रीः

॥ श्रीललिता-सहस्त्रनाम-रतोत्रम् ॥

पूर्वभागः

शुक्लाम्बरधरं विष्णुं शशिवर्णं चतुर्भुजम् ।
प्रसन्नवदनं ध्यायेत् सर्वविघ्नोपशान्तये ॥

प्राणानायम्य ॥

ममोपात्त - समस्त - दुरितक्षयद्वारा श्रीललिता-महात्रिपुर-सुन्दरी-प्रीत्यर्थं श्रीललितासहस्त्रनाम-पारायणं करिष्ये ॥

ऐंकार-ह्रींकार-रहस्य-युक्त-श्रींकार-गूढार्थ महाविभूत्या ।
ओंकारमर्म-प्रतिपादिनीभ्यां नमो नमः श्रीगुरुपादुकाभ्याम् ॥

ஶ்ரீ:

ஶ்ரீ லலிதா-ஸஹஸ்ரநாம-ஸ்தோத்ரம்

பூர்வ*பாக*:

சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்ப்புஜம் ।
ப்ரஸன்ன-வதனம் த்யாயேத் ஸர்வவிக்னோபசாந்தயே ॥

ப்ராணானாயம்ய ॥

மமோபாத்த - ஸமஸ்த-துரித - க்ஷயத்வாரா ஶ்ரீலலிதா - மஹாத்ரிபுரஸுந்தரீ - ப்ரீத்யர்த்தம் ஶ்ரீலலிதா - ஸஹஸ்ர நாம-பாராயணம் கரிஷ்யே ॥

ஐங்கார-ஹ்ரீங்கார-ரஹஸ்ய-யுக்த-ஶ்ரீங்கார-கூடார்த்த-மஹா - விபூத்யா । ஓங்கார - மர்ம - ப்ரதிபாதினீப்யாம் நமோ நம: ஶ்ரீகுருபாதுகாப்யாம் ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

अगस्त्य उवाच—

अश्वानन महाबुद्धे सर्व-शास्त्र-विशारद ।
कथितं ललिता-देव्या-श्चरितं परमाद्भुतम् ॥ १ ॥

पूर्वं प्रादुर्भवो मातु-स्ततः पट्टाभिषेचनम् ।
भण्डासुरवधश्चैव विस्तरेण त्वयोदितः ॥ २ ॥

वर्णितं श्रीपुरं चापि महाविभव-विस्तरम् ।
श्रीमत्पञ्चदशाक्षर्या महिमा वर्णित-स्तथा ॥ ३ ॥

அகஸ்த்ய உவாச—

அச்வானன மஹாபுத்தே ஸர்வ-சாஸ்த்ர-விசாரத ।
கதிதம் லலிதா-தேவ்யா-ச்சரிதம் பரமாத்புதம் ॥ 1 ॥

பூர்வம் ப்ராதுர்ப்பவோ மாதுஸ்-தத: பட்டாபிஷேசனம் ।
பண்டாஸுரவதச்சைவ விஸ்தரேண த்வயோதித: ॥ 2 ॥

வர்ணிதம் ஸ்ரீபுரஞ்சாபி மஹாவிபவ-விஸ்தரம் ।
ஸ்ரீமத்பஞ்சதசாக்ஷர்யா மஹிமா வர்ணிதஸ்-ததா ॥ 3 ॥

---

1. அகஸ்திய மஹரிஷி—ஸ்ரீவித்யா உபாஸகர்களுள் முக்கியமானவர். ஸ்ரீஹயக்ரீவரிடமிருந்து உபதேசம் பெற்றவர்.

ஸ்ரீஹயக்ரீவர் *(அச்வானனர்)* மஹாவிஷ்ணுவின் அவதாரம். ஓ. 'ஜ்ஞானானந்தமயந் தேவம் நிர்மல-ஸ்படிகாக்ருதிம் । ஆதாரம் ஸர்வ வித்யானாம் ஹயக்ரீவ-முபாஸ்மஹே ।'

லலிதா— 'லோகா-னதீத்ய லலதே லலிதா தேன சோச்யதே' -பத்ம புராணம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

षोढान्यासादयो न्यासा न्यासखण्डे समीरिता: ।
अन्तर्याग-क्रमश्चैव बहिर्याग-क्रमस्तथा ॥ ४ ॥

महायाग-क्रमश्चैव पूजाखण्डे प्रकीर्तित: ।
पुरश्चरणखण्डे तु जपलक्षणमीरितम् ॥ ५ ॥

होमखण्डे त्वया प्रोक्तो होमद्रव्य-विधिक्रम: ।
चक्रराजस्य विद्याया: श्रीदेव्या देशिकात्मनो: ॥ ६ ॥

रहस्यखण्डे तादात्म्यं परस्पर-मुदीरितम् ।
स्तोत्रखण्डे बहुविधा: स्तुतय: परिकीर्तिता: ॥ ७ ॥

ஷோடாந்யாஸாதயோ ந்யாஸா ந்யாஸகண்டே ஸமீரிதா: ।
அந்தர்-யாக-க்ரமச்சைவ பஹிர்-யாக-க்ரமஸ்-ததா ॥ 4 ॥

மஹா-யாக-க்ரமச்சைவ பூஜாகண்டே ப்ரகீர்த்தித: ।
புரச்சரண-கண்டே து ஜபலக்ஷண-மீரிதம் ॥ 5 ॥

ஹோமகண்டே த்வயா ப்ரோக்தோ ஹோமத்ரவ்ய-விதிக்ரம: ।
சக்ரராஜஸ்ய வித்யாயா: ஸ்ரீதேவ்யா தேசிகாத்மனோ: ॥ 6 ॥

ரஹஸ்ய-கண்டே தாதாத்ம்யம் பரஸ்பர-முதீரிதம் ।
ஸ்தோத்ர-கண்டே பஹுவிதா: ஸ்துதய: பரிகீர்த்திதா: ॥ 7 ॥

---

4. **ஷோடாந்யாஸ: —**ஷோடாந்யாஸம் இருவகைத்து; 51 கணேசர், 9 கிரகங்கள், 27 நக்ஷத்ரங்கள், 7 யோகினிகள், 12 ராசிகள், 51 பீடங்கள் ஆகிய உறுப்புக்களைக் கொண்டது லகுஷோடாந்யாஸம்; ப்ரபஞ்சம், புவனம், மூர்த்தி, மந்த்ரம், தேவதை, மாத்ருகை ஆகிய ஆறு உறுப்புக்களைக் கொண்டது மஹா ஷோடாந்யாஸம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

मन्त्रिणी-दण्डिनी-देव्योः प्रोक्ते नाम-सहस्रके ।
न तु श्रीललिता-देव्याः प्रोक्तं नाम-सहस्रकम् ॥ ८ ॥

तत्र मे संशयो जातो हयग्रीव दयानिधे ।
किं वा त्वया विस्मृतं तज्ज्ञात्वा वा समुपेक्षितम् ॥ ९ ॥

मम वा योग्यता नास्ति श्रोतुं नाम-सहस्रकम्
किमर्थं भवता नोक्तं तत्र मे कारणं वद ॥ १० ॥

सूत उवाच—
इति पृष्टो हयग्रीवो मुनिना कुम्भ-जन्मना ।
प्रहृष्टो वचनं प्राह तापसं कुम्भसंभवम् ॥ ११ ॥

மந்த்ரிணீ-தண்டினீ-தேவ்யோ; ப்ரோக்தே நாமஸஹஸ்ரகே ।
ந து ஸ்ரீலலிதா-தேவ்யா: ப்ரோக்தம் நாம-ஸஹஸ்ரகம் ॥ 8 ॥

தத்ர மே ஸம்சயோ ஜாதோ ஹயக்ரீவ தயாநிதே ।
கிம் வா த்வயா விஸ்ம்ருதம் தஜ்-ஜ்ஞாத்வா வா
ஸமுபேக்ஷிதம் ॥ 9 ॥

மம வா யோக்யதா நாஸ்தி ச்ரோதும் நாம-ஸஹஸ்ரகம் ।
கிமர்த்தம் பவதா நோக்தம் தத்ர மே காரணம் வத ॥ 10 ॥

ஸூத உவாச—
இதி ப்ருஷ்டோ ஹயக்ரீவோ முனினா கும்பஜன்மனா ।
ப்ரஹ்ருஷ்டோ வசனம் ப்ராஹ தாபஸம் கும்பஸம்பவம் ॥ 11 ॥

---

11. கும்பஸம்பவர்—அகஸ்தியர். அ. 'கும்பஸ்ய கும்பகஸ்ய ஸம்யக் சிரகாலம் பவ:'

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

श्रीहयग्रीव उवाच—

लोपामुद्रा-पतेऽगस्त्य सावधानमना: शृणु ।
नाम्नां सहस्रं यन्नोक्तं कारणं तद्वदामि ते ॥ १२ ॥

रहस्यमिति मत्वाहं नोक्तवांस्ते न चान्यथा ।
पुनश्च पृच्छसे भक्त्या तस्मात् तत् ते वदाम्यहम् ॥ १३ ॥

ब्रूयाच्छिष्याय भक्ताय रहस्यमपि देशिक: ।
भवता न प्रदेयं स्यादभक्ताय कदाचन ॥ १४ ॥

ஸ்ரீ ஹயக்ரீவ உவாச—

லோபாமுத்ராபதே ऽகஸ்த்ய ஸாவதானமனா: ச்ருணு ।
நாம்னாம்-ஸஹஸ்ரம் யந்நோக்தம் காரணம் தத்-வதாமி தே ॥ 12 ॥

ரஹஸ்யமிதி மத்வாஹம் நோக்தவாம்-ஸ்தே ந சான்யதா ।
புனச்ச ப்ருச்சஸே பக்த்யா தஸ்மாத் தத் தே வதாம்யஹம் ॥ 13 ॥

ப்ரூயாச்-சிஷ்யாய பக்தாய ரஹஸ்ய-மபி தேசிக: ।
பவதா ந ப்ரதேயம் ஸ்யா-தபக்தாய கதாசன ॥ 14 ॥

---

12. லோபாமுத்ரையின் பதி—ஒ. 'பத்ன்யஸ்ய லோபாமுத்ராக்யா மா-முபாஸ்தே ऽதி-பக்தித: அயஞ்ச நிதராம் பக்தஸ்-தஸ்மா-தஸ்ய வதஸ்வ தத்'-த்ரிசதீ பூர்வபாகம்.

13. 'புனச்ச ப்ருச்சஸே'— 'ப்ருச்சதே' என்றும் பாடம். ஒ.-'நாப்ருஷ்ட: கஸ்யசித்-ப்ரூயாதிதி வேதானுசாஸனம்.' ம.பா.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

न शठाय न दुष्टाय नाविश्वासाय कर्हिचित् ।
श्रीमातृभक्तियुक्ताय श्रीविद्याराजवेदिने ॥ १५ ॥

उपासकाय शुद्धाय देयं नामसहस्रकम् ।
यानि नाम-सहस्राणि सद्यः सिद्धिप्रदानि वै ॥ १६ ॥

तन्त्रेषु ललितादेव्यास्तेषु मुख्यमिदं मुने ।
श्रीविद्यैव तु मन्त्राणां तत्र कादिर्यथा परा ॥ १७ ॥

पुराणां श्रीपुरमिव शक्तीनां ललिता यथा ।
श्रीविद्योपासकानां च यथा देवो वरः शिवः ॥ १८ ॥

तथा नाम-सहस्रेषु वरमेतत् प्रकीर्तितम् ॥ १९ ॥

ந சடாய ந துஷ்டாய நாவிச்வாஸாய கர்ஹிசித் ।
ஸ்ரீமாத்ரு-பக்தியுக்தாய ஸ்ரீவித்யா-ராஜவேதினே ॥ 15 ॥

உபாஸகாய சுத்தாய தேயம் நாமஸஹஸ்ரகம் ।
யானி நாம-ஸஹஸ்ராணி ஸத்ய: ஸித்திப்ரதானி வை ॥ 16 ॥

தந்த்ரேஷு லலிதா-தேவ்யாஸ் தேஷு முக்யமிதம் முனே ।
ஸ்ரீவித்யைவ து மந்த்ராணாம் தத்ர காதிர்யதா பரா ॥ 17 ॥

புராணாம் ஸ்ரீபுர-மிவ சக்தீனாம் லலிதா யதா ।
ஸ்ரீவித்யோபாஸகானாஞ்ச யதா தேவோ வர: சிவ: ॥ 18 ॥

ததா நாம-ஸஹஸ்ரேஷு வரமேதத் ப்ரகீர்த்திதம் ॥ 19 ॥

---

18. பர : சிவ: (பா. பே.)
19. பரமேதத். (பா. பே.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

यथास्य पठनाद्देवी प्रीयते ललिताम्बिका ।
अन्य-नामसहस्रस्य पाठान्न प्रीयते तथा ।
श्रीमातुः प्रीतये तस्मादनिशं कीर्तयेदिदम् ॥ २० ॥

बिल्वपत्रैश्चक्रराजे योऽर्चये-ल्ललिताम्बिकाम् ।
पद्मैर्वा तुलसीपुष्पै-रेभि-र्नाम-सहस्रकैः ॥ २१ ॥

सद्यः प्रसादं कुरुते तत्र सिंहासनेश्वरी ।
चक्राधिराज-मभ्यर्च्य जप्त्वा पञ्चदशाक्षरीम् ॥ २२ ॥

जपान्ते कीर्तये-न्नित्यमिदं नाम-सहस्रकम् ।
जपपूजाद्यशक्तोऽपि पठेन्नाम-सहस्रकम् ॥ २३ ॥

யதாஸ்ய படனாத்தேவீ ப்ரீயதே லலிதாம்பிகா ।
அன்ய-நாம-ஸஹஸ்ரஸ்ய பாடாந்ந ப்ரீயதே ததா ।
ஸ்ரீமாது: ப்ரீதயே தஸ்மா-தனிசம் கீர்த்தயே-திதம் ॥ 20 ॥

பில்வபத்ரைச் சக்ரராஜே யோऽர்ச்சயேல்-லலிதாம்பிகாம் ।
பத்மைர்வா துலஸீ-புஷ்பை-ரேபிர்-நாம-ஸஹஸ்ரகை: ॥

ஸத்ய: ப்ரஸாதம் குருதே தத்ர ஸிம்ஹாஸனேச்வரீ ।
சக்ராதிராஜ-மப்யர்ச்ய ஜப்த்வா பஞ்சதசாக்ஷரீம் ॥ 22 ॥

ஜபாந்தே கீர்த்தயேந்-நித்ய-மிதம் நாம-ஸஹஸ்ரகம் ।
ஜப-பூஜாத்-யசக்தோऽபி படேந்-நாம-ஸஹஸ்ரகம் ॥ 23 ॥

---

21. துலஸீ-பத்ரை : (பா. பே.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

साङ्गार्चने साङ्गजपे यत्फलं तदवाप्नुयात् ।
उपासने स्तुती-रन्याः पठे-दभ्युदयो हि सः ॥ २४ ॥

इदं नाम-सहस्रं तु कीर्तये-न्नित्यकर्मवत् ।
चक्रराजार्चनं देव्या जपो नाम्नां च कीर्तनम् ॥ २५ ॥

भक्तस्य कृत्यमेताव-दन्यदभ्युदयं विदुः ।
भक्तस्यावश्यकमिदं नामसाहस्रकीर्तनम् ॥ २६ ॥

तत्र हेतुं प्रवक्ष्यामि शृणु त्वं कुंभसंभव ।
पुरा श्रीललिता-देवी भक्तानां हितकाम्यया ॥ २७ ॥

वाग्देवी-र्वशिनी-मुख्याः समाहूयेद-मब्रवीत् ।
वाग्देवता वशिन्याद्याः शृणुध्वं वचनं मम ॥ २८ ॥

ஸாங்கார்ச்சனே ஸாங்க-ஜபே யத்பலம் ததவாப்னுயாத் ।
உபாஸனே ஸ்துதீ-ரன்யா: படே-தப்யுதயோ ஹி ஸ: ॥ 24 ॥

இதம் நாம-ஸஹஸ்ரந்து கீர்த்தயேந்-நித்யகர்மவத் ।
சக்ரராஜார்ச்சனம் தேவ்யா ஜபோ நாம்னாஞ்ச கீர்த்தனம் ॥ 25 ॥

பக்தஸ்ய க்ருத்ய-மேதாவ-தன்ய-தப்யுதயம் விது: ।
பக்தஸ்யாவச்யக-மிதம் நாமஸாஹஸ்ர-கீர்த்தனம் ॥ 26 ॥

தத்ர ஹேதும் ப்ரவக்ஷ்யாமி ச்ருணு த்வம் கும்பஸம்பவ ।
புரா ஸ்ரீலலிதாதேவீ பக்தானாம் ஹித-காம்யயா ॥ 27 ॥

வாக்தேவீர்-வசினீ-முக்யா: ஸமாஹூயேத-மப்ரவீத் ।
வாக்தேவதா வசின்யாத்யா: ச்ருணுத்வம் வசனம் மம ॥ 28 ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

भवत्यो मत्प्रसादेन प्रोल्लसद्वाग्विभूतयः ।
मद्भक्तानां वाग्विभूतिप्रदाने विनियोजिताः ॥ २९ ॥

मच्चक्रस्य रहस्यज्ञा मम नाम-परायणाः ।
मम स्तोत्रविधानाय तस्मादाज्ञापयामि वः ॥ ३० ॥

कुरुध्व-मङ्कितं स्तोत्रं मम नाम-सहस्रकैः ।
येन भक्तैः स्तुताया मे सद्यः प्रीतिः परा भवेत् ॥ ३१ ॥

हयग्रीव उवाच—

इत्याज्ञप्ता वचोदेव्यः श्रीदेव्या ललिताम्बया ।
रहस्यै-र्नामभि-र्दिव्यै-श्चक्रुः स्तोत्र-मनुत्तमम् ॥ ३२ ॥

रहस्यनामसाहस्र-मिति तद्विश्रुतं परम् ।
ततः कदाचित्सदसि स्थित्वा सिंहासनेऽम्बिका ॥ ३३ ॥

பவத்யோ மத்ப்ரஸாதேன ப்ரோல்லஸத்-வாக்விபூதய: ।
மத்பக்தானாம் வாக்விபூதி-ப்ரதானே விநியோஜிதா: ॥ 29 ॥

மச்சக்ரஸ்ய ரஹஸ்யஜ்ஞா மம நாமபராயணா: ।
மம ஸ்தோத்ர-விதானாய தஸ்மா-தாஜ்ஞாபயாமி வ: ॥ 30 ॥

குருத்வ-மங்கிதம் ஸ்தோத்ரம் மம நாம-ஸஹஸ்ரகை: ।
யேந பக்தை: ஸ்துதாயா மே ஸத்ய: ப்ரீதி: பரா பவேத் ॥ 31 ॥

ஹயக்ரீவ உவாச—

இத்யாஜ்ஞப்தா வசோதேவ்ய: ஸ்ரீதேவ்யாலலிதாம்பயா ।
ரஹஸ்யைர்-நாமபிர்-திவ்யைச்-சக்ரு: ஸ்தோத்ர-
மனுத்தமம் ॥ 32 ॥

ரஹஸ்யநாம ஸாஹஸ்ர-மிதி தத்-விச்ருதம்-பரம் ।
தத: கதாசித் ஸதஸி ஸ்திதித்வா ஸிம்ஹாஸனேऽம்பிகா ॥ 33 ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

स्वसेवावसरं प्रादात्सर्वेषां कुंभसंभव ।
सेवार्थ-मागतास्तत्र ब्रह्माणी-ब्रह्मकोटय: ।। ३४ ।।

लक्ष्मीनारायणानां च कोटय: समुपागता: ।
गौरीकोटिसमेतानां रुद्राणामपि कोटय: ।। ३५ ।।

मन्त्रिणी-दण्डिनी-मुख्या: सेवार्थं या: समागता: ।
शक्तयो विविधाकारास्तासां संख्या न विद्यते ।। ३६ ।।

दिव्यौघा मानवौघाश्च सिद्धौघाश्च समागता: ।
तत्र श्री ललितादेवी सर्वेषां दर्शनं ददौ ।। ३७ ।।

तेषु दृष्ट्वोपविष्टेषु स्वे स्वे स्थाने यथाक्रमम् ।
तत्र श्रीललितादेवी-कटाक्षाक्षेप-नोदिता: ।। ३८ ।।

ஸ்வஸேவாவஸரம் ப்ராதாத் ஸர்வேஷாம் கும்பஸம்பவ ।
ஸேவார்த்த-மாகதாஸ்தத்ர ப்ரஹ்மாணீ-ப்ரஹ்மகோடய: ॥

லக்ஷ்மீநாராயணானாஞ்ச கோடய: ஸமுபாகதா: ।
கௌரீ-கோடிஸமேதானாம் ருத்ராணாமபிகோடய: ॥ 35 ॥

மந்த்ரிணீ-தண்டினீ-முக்ய்யா: ஸேவார்த்தம் யா: ஸமாகதா: ।
சக்தயோ விவிதாகாராஸ்-தாஸாம் ஸங்க்யா ந வித்யதே ॥

திவ்யௌகா மானவௌகாச்ச ஸித்தௌகாச்ச ஸமாகதா: ।
தத்ர ஸ்ரீலலிதாதேவீ ஸர்வேஷாம் தர்சனம் ததௌ ॥ 37 ॥

தேஷு த்ருஷ்ட்வோபவிஷ்டேஷு ஸ்வே ஸ்வே
ஸ்த்தானே யதாக்ரமம் ।
தத்ர ஸ்ரீலலிதாதேவீ-கடாக்ஷாக்ஷேப-நோதிதா: ॥ 38 ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

उत्थाय वशिनीमुख्या बद्धांजलिपुटास्तदा ।
अस्तुवन्नामसाहस्रैः स्वकृतै-र्ललिताम्बिकाम् ॥ ३९ ॥

श्रुत्वा स्तवं प्रसन्नाभूल्ललिता परमेश्वरी ।
सर्वे ते विस्मयं जग्मु-र्ये तत्र सदसि स्थिताः ॥ ४० ॥

ततः प्रोवाच ललिता सदस्यान् देवता-गणान् ।
ममाज्ञयैव वाग्देव्य-श्चक्रुः स्तोत्र-मनुत्तमम् ॥ ४१ ॥

अङ्कितं नामभिर्दिव्यै-र्मम प्रीतिविधायकैः ॥ ४२ ॥

तत्पठध्वं सदा यूयं स्तोत्रं मत्प्रीतिवृद्धये ।
प्रवर्तयध्वं भक्तेषु मम नाम-सहस्रकम् ॥ ४३ ॥

உத்தாய வசினீ முக்க்யா பத்தாஞ்ஜலி-புடாஸ்ததா ।
அஸ்துவந் நாமஸாஹஸ்ரை: ஸ்வக்ருதைர்
லலிதாம்பிகாம் ॥ 39 ॥

ச்ருத்வா ஸ்தவம் ப்ரஸந்நாபூல்லலிதா பரமேச்வரீ ।
ஸர்வே தே விஸ்மயம் ஜக்முர்-யே தத்ர ஸதஸி ஸ்த்திதா: ॥

தத: ப்ரோவாச லலிதா ஸதஸ்யான் தேவதா-கணான் ।
மமாஜ்ஞயைவ வாக்தேவ்யச்-சக்ரு: ஸ்தோத்ர-
மனுத்தமம் ॥ 41 ॥

அங்கிதம் நாமபிர்-திவ்யைர்-மம ப்ரீதிவிதாயகை: ॥ 42 ॥

தத்-படத்வம் ஸதா யூயம் ஸ்தோத்ரம் மத்ப்ரீதி-வ்ருத்தயே ।
ப்ரவர்த்தயத்வம் பக்தேஷு மம நாம-ஸஹஸ்ரகம் ॥ 43 ॥

---

41. மமாஜ்ஞயைவ— 'ந து ஸ்வப்ரதிபா -மாத்ரேண' (பா.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

इदं नामसहस्रं मे यो भक्तः पठते सकृत् ।
मम प्रियतमो ज्ञेयस्तस्मै कामान् ददाम्यहम् ॥ ४४ ॥

श्रीचक्रे मां समभ्यर्च्य जप्त्वा पंचदशाक्षरीम् ।
पश्चान्नामसहस्रं मे कीर्तयेन्मम तुष्टये ॥ ४५ ॥

मामर्चयतु वा मा वा विद्यां जपतु वा न वा ।
कीर्तये-न्नामसाहस्र-मिदं मत्प्रीतये सदा ॥ ४६ ॥

मत्प्रीत्या सकलान् कामाँल्लभते नात्र संशयः ।
तस्मान्नामसहस्रं मे कीर्तयध्वं सदादरात् ॥ ४७ ॥

हयग्रीव उवाच—
इति श्रीललितेशानी शास्ति देवान् सहानुगान् ॥ ४८ ॥

இதம் நாம ஸஹஸ்ரம் மே யோ பக்த: படதே ஸக்ருத் ।
மம ப்ரியதமோ ஜ்ஞேயஸ்-தஸ்மை காமான்
ததாம்யஹம் ॥ 44 ॥

ஸ்ரீசக்ரே மாம் ஸமப்யர்ச்ய ஜப்த்வா பஞ்சதசாக்ஷரீம் ।
பச்சாந்நாமஸஹஸ்ரம் மே கீர்த்தயேன் மம துஷ்டயே ॥

மாமர்ச்சயது வா மா வா வித்யாஞ் ஜபது வா ந வா ।
கீர்த்தயேந்-நாமஸாஹஸ்ர-மிதம் மத்-ப்ரீதயே ஸதா ॥ 46 ॥

மத்ப்ரீத்யா ஸகலான் காமான் லபதே நாத்ர ஸம்சய: ।
தஸ்மாந் நாமஸஹஸ்ரம் மே கீர்த்தயத்த்வம் ஸதாதராத் ॥

ஹயக்ரீவ உவாச—
இதி ஸ்ரீலலிதேசானீ சாஸ்தி தேவான் ஸஹானுகான் ॥ 48 ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

तदाज्ञया तदारभ्य ब्रह्म-विष्णु-महेश्वराः ।
शक्तयो मन्त्रिणीमुख्या इदं नामसहस्रकम् ॥ ४९ ॥

पठन्ति भक्त्या सततं ललिता-परितुष्टये ।
तस्मा-दवश्यं भक्तेन कीर्तनीयमिदं मुने ॥ ५० ॥

आवश्यकत्वे हेतुस्ते मया प्रोक्तो मुनीश्वर ।
इदानीं नाम-साहस्रं वक्ष्यामि श्रद्धया शृणु ॥ ५१ ॥

इति श्रीब्रह्माण्डपुराणे श्रीहयग्रीवागस्त्यसंवादे
श्रीललिता-सहस्रनाम-स्तोत्र-पूर्वभागः ॥

ததாஜ்ஞயா ததாரப்ப்ய ப்ரஹ்மவிஷ்ணுமஹேச்வரா: ।
சக்தயோ மந்த்ரிணீ முக்க்யா இதம் நாமஸஹஸ்ரகம் ॥

படந்தி பக்த்யா ஸததம் லலிதா-பரிதுஷ்டயே ।
தஸ்மா-தவச்யம் பக்தேன கீர்த்தனீய-மிதம் முனே ॥ 50 ॥

ஆவச்யகத்வே ஹேதுஸ்தே மயா ப்ரோக்தோ முனீச்வர ।
இதானீம் நாம-ஸாஹஸ்ரம் வக்ஷ்யாமி ச்ரத்தயா ச்ருணு ॥

இதி ஸ்ரீ ப்ரஹ்மாண்ட-புராணே ஸ்ரீஹயக்ரீவாகஸ்த்ய-ஸம்வாதே
ஸ்ரீ லலிதா-ஸஹஸ்ரநாம-ஸ்தோத்ர-பூர்வ**பாக:** ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரத்தின்

பூர்வபாகமான

அவதாரிகையின் ஸாரம்

அகஸ்தியர் கூறியது:

ஸ்ரீ ஹயக்கிரீவரே! ஸ்ரீலலிதா தேவியின் அற்புதமான சரித்திரத்தைக் கூறியருளினீர். முதலில் அவதாரமும் பட்டாபிஷேகமும் பண்டாசுர வதமும், பின்பு ஸ்ரீபுரத்தின் பெருமையும் பஞ்சதசாக்ஷரீ மந்திரத்தின் மகிமையும் அதன் நியாஸங்களும் கூறப்பட்டன. அந்தர்யாகம், பஹிர்யாகம், மஹாயாகம் முதலியவை பூஜாகண்டத்திலும், ஜபலக்ஷணம் புரச்சரண கண்டத்திலும், ஹோமம் செய்யும் முறை ஹோம கண்டத்திலும் விளக்கப்பட்டன. இரகசிய கண்டத்தில் ஸ்ரீசக்ரமும் ஸ்ரீவித்யையும் ஸ்ரீ தேவியும் ஸ்ரீ குருவும் ஒன்றேயென்ற தத்துவம் விளக்கப்பட்டது. ஸ்தோத்திர கண்டத்தில் பலவிதமான ஸ்துதிகளும் மந்த்ரிணீ தண்டினீ தேவதைகளின் ஸஹஸ்ரநாமங்களும் கூறப்பட்டன. ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் மட்டும் கூறப்படவில்லை. தயா நிதியே! அதை மறந்தீரா? அல்லது எனக்குக் கேட்கத் தகுதியில்லை என்று விடுத்தீரா? இச்சந்தேகத்தைத் தெளிவித்தருளப் பிரார்த்திக்கிறேன்.

ஹயக்ரீவர் கூறியது:

லோபாமுத்திரையின் பதியான அகஸ்தியரே! அது அதிரகசியமானதால் கேட்காமல் கூறுவது ஸம்பிரதாயம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அன்று என்று கூறவில்லை. இப்போது நீர் பக்தியுடன் கேட்கிறீர்; ஆகையால் இனிக் கூறுகிறேன். பக்தனான பிரிய சிஷ்யனுக்கு ஆசாரியர் இரகசியத்தையும் கூறுவர். தேவியின் பக்தனாகவும் ஸ்ரீவித்யையை அறிந்து பரிசுத்த மான உபாஸகனாகவும் இருப்பவனுக்கே சொல்லத் தகும். புரங்களில் ஸ்ரீபுரம் போலும், சக்திகளில் ஸ்ரீலலிதை போலும், ஸ்ரீவித்யோபாஸகர்களில் பரமசிவன் போலும், ஸஹஸ்ர நாமங்களில் ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் மிகச் சிறப்பு வாய்ந்தது. ஸ்ரீமாதா வின் பிரீதிக்காக எப்போதும் இதைக் கீர்த்தனம் செய்ய வேண்டும். இந்த ஸஹஸ்ரநாமத்தால் ஸ்ரீசக்ரத்தில் பில்வ பத்திரத்தாலோ, தாமரைப்பூவாலோ, துளஸீபுஷ்ப மஞ்ஜரியாலோ அர்ச்சனை செய்தால் ஸிம்மாஸனே-சுவரியான தேவி உடனே அருள் புரிவாள். ஸ்ரீசக்ரத்தைப் பூஜித்துப் பஞ்சதசாக்ஷரீமந்திரத்தை ஜபித்து தினந் தோறும் இதைப் பாராயணம் செய்ய வேண்டும். பூஜையும் ஜபமும் செய்யச் சக்தியில்லாதவர்களும் இதைப் படித்தால் ஸாங்கமாகப் பூஜையும் ஜபமும் செய்த பயனையடைவர். மற்ற ஸ்தோத்திரங்களைச் சொல்லுவதால் சிறந்த பயன் உண்டு என்பதில் ஐயமில்லை. ஆனால் ஸஹஸ்ரநாம பாராயணத்தையோ பயனையும் கருதாமல் நித்திய கர்மாவைப் போல் செய்ய வேண்டும்.

முன்னர் ஸ்ரீலலிதாதேவீ பக்தர்களின் நன்மையை நாடி வசினீ முதலிய வாக்கு தேவதைகளை அழைத்து, ''நீங்கள் என் கட்டளைப்படி என் தத்துவம் விளங்க என்னுடைய ஸஹஸ்ரநாமத்தைச் செய்யுங்கள். அதைக்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கொண்டு என் பக்தர்கள் என்னைத் துதிப்பதால் எனக்குப் பரம பிரீதி ஏற்படப் போகின்றது'' என்று கூறியருளினாள். இங்ஙனம் கட்டளையிடப்பட்ட வாக்கு தேவதைகள் 'ரஹஸ்ய-நாம-ஸாஹஸ்ரம்' என்று பிரசித்தி பெற்ற இச்சிறந்த ஸ்தோத்திரத்தை இயற்றினார்கள்.

எல்லா தேவதைகளும் சூழ ஸ்ரீலலிதா தேவீ கொலு இருக்கையில் வாக்கு தேவதைகள் இந்த ஸ்தோத்திரத் தால் தேவியைத் துதித்தனர். அப்போது தேவியானவள் தேவதைகள் அனைவரையும் நோக்கி, ''என் கட்டளை யாலேயே இந்த ஒப்புயர்வற்ற ஸ்தோத்திரத்தை வாக்கு தேவிகள் செய்துள்ளார்கள், இதை நீங்கள் எப்போதும் என்னுடைய பிரீதியின் வளர்ச்சிக்காகப் படிப்பதுடன் என் பக்தர்களிடமும் பரவும்படி செய்யுங்கள். பூஜையும் ஜபமும் செய்தாலும் செய்யாவிட்டாலும், இந்த ஸஹஸ்ரநாமத்தை எனது பிரீதிக்காக எப்போதும் பாராயணம் செய்ய வேண்டும்,'' என்று ஆசி கூறினாள். ஆகையால் முனிசிரேஷ்டரே! பக்தனால் ஏன் இது அவசியம் படிக்கப்பட வேண்டும் என்பது நிரூபிக்கப் பட்டது. இனி ஸஹஸ்ரநாமத்தைக் கூறுகிறேன், கேட்பீராக!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

न्यासः

अस्य श्रीललिता - सहस्रनाम - स्तोत्र-माला - महामन्त्रस्य । वशिन्यादि वाग्देवता ऋषयः । अनुष्टुप् छन्दः । श्रीललिता-महात्रिपुरसुन्दरी देवता । ऐं बीजम् । सौः शक्तिः । क्लीं कीलकम् ।। श्रीललिता-महा-त्रिपुरसुन्दरी-प्रसाद-सिद्ध्यर्थे जपे विनियोगः ।।

ऐं अङ्गुष्ठाभ्यां नमः । क्लीं तर्जनीभ्यां नमः ।
सौः मध्यमाभ्यां नमः । ऐं अनामिकाभ्यां नमः ।
क्लीं कनिष्ठिकाभ्यां नमः । सौःकरतल-करपृष्ठाभ्यां नमः।।

ந்யாஸ:

அஸ்ய ஸ்ரீலலிதா - ஸஹஸ்ரநாம-ஸ்தோத்ர-மாலா மஹா மந்த்ரஸ்ய | வசின்யாதி-வாக்-தேவதா ருஷய: | அனுஷ்டுப் சந்த: | ஸ்ரீ - லலிதா - மஹாத்ரிபுரஸுந்தரீ தேவதா | ஐம் பீஜம் (நாபௌ) | ஸௌ:சக்தி: | க்லீம் கீலகம் | ஸ்ரீ-லலிதா-மஹாத்ரிபுர ஸுந்தரீ- ப்ரஸாத - ஸித்த்யர்த்தே ஜபே விநியோக: (ஸர்வாங்கே) ||

ஐம்-அங்குஷ்ட்டாப்யாம் நம: | க்லீம்-தர்ஜநீப்யாம் நம: |
ஸௌ: மத்யமாப்யாம் நம: | ஐம்-அநாமிகாப்யாம் நம: |
க்லீம்-கனிஷ்டிகாப்யாம் நம: | ஸௌ: கரதலகரப்ருஷ்டாப்-யாம் நம: ||

'மாலா' **மந்த்ரம்**—ஓ. *'மந்த்ரா ஏகாக்ஷரா: பிண்டா: கர்த்தர்யோ த்வயக்ஷரா மதா: | வர்ணத்ரயம் ஸமாரப்ய நவார்ணாவாதி பீஜகா: | ததோ தசார்ண-மாரப்ய யாவத்-விம்சதி மந்த்ரகா: | தத ஊர்த்வங்கதா மாலாஸ்-தாஸு பேதோ ந வித்யதே' || —நித்யா தந்த்ரம்.*

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ऐं हृदयाय नमः । क्लीं शिरसे स्वाहा ।
सौः शिखायै वषट् । ऐं कवचाय हुं ।
क्लीं नेत्रत्रयाय वौषट् । सौः अस्त्राय फट् ॥
भूर्भूवस्सुवरों इति दिग्बन्धः ।

ध्यानम् ॥

सिन्दूरारुण-विग्रहां त्रिनयनां माणिक्य-मौलिस्फुरत्
तारानायक-शेखरां स्मितमुखी-मापीन-वक्षोरुहाम् ।

ஐம்-ஹ்ருதயாய நம: । க்லீம் சிரஸே ஸ்வாஹா ।
ஸௌ: -சிகாயை வஷட் । ஐம்-கவசாய ஹும் ।
க்லீம்-நேத்ரத்ரயாய வௌஷட் । ஸௌ:-அஸ்த்ராய பட் ॥
பூர்ப்புவஸ்ஸுவரோம் இதி திக்பந்த: ।

த்யானம் ॥
ஸிந்தூராருணா-விக்ரஹாம் த்ரிநயனாம் மாணிக்ய-மௌளிஸ்புரத்
தாராநாயக-சேகராம் ஸ்மிதமுகீ-மாபீந-வக்ஷோருஹாம் ।

நியாஸம்—மந்த்ரஜபத்திற்கு அங்கங்கள் இருபத்து நான்கு. ரிஷி-சந்தஸ்-தேவதை-பீஜம்-சக்தி-கீலகம் 6; கர நியாஸம் 6; அங்க நியாஸம் 6; தியானம், பஞ்சபூஜை 6.

1. தியானம்—ஸிந்தூரம்போல் சிவந்த உடலும், முக்கண்ணும், சந்திரன் பிரகாசிக்கும் மாணிக்கக் கிரீடமும், சிரித்த முகமும், பெருத்த மார்பும், மது நிறைந்த இரத்தினக் கோப்பையும் செங்குவளைப்பூவும் ஏந்திய கைகளும், இரத்தின கலசத்தில் பொருந்திய செவ்விய திருவடிகளும் உடைய அழகுத் தெய்வமாகப் பரதேவதையை தியானம் செய்ய வேண்டும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

पाणिभ्या-मलिपूर्ण-रत्नचषकं रक्तोत्पलं बिभ्रतीं
सौम्यां रत्नघटस्थ-रक्तचरणां ध्यायेत् परामंबिकाम् ॥ १ ॥

अरुणां करुणातरंगिताक्षीं धृत-पाशांकुश-पुष्पबाण-चापाम् ।
अणिमादिभि-रावृतां मयूखै-रहमित्येव विभावये भवानीम् ॥ २ ॥

ध्यायेत् पद्मासनस्थां विकसितवदनां पद्मपत्रायताक्षीं
हेमाभां पीतवस्त्रां करकलित-लसद्धेमपद्मां वरांगीम् ।

பாணிப்யா-மளிபூர்ண-ரத்ன-சஷகம் ரக்தோத்பலம் பிப்ரதீம்
ஸௌம்யாம் ரத்ன-கடஸ்த-ரக்தசரணாம் த்யாயேத் பராமம்பிகாம் ||

அருணாம் கருணாதரங்கிதாக்ஷீம் த்ருத-பாசாங்குச-புஷ்ப-பாண சாபாம் |
அணிமாதிபி-ராவ்ருதாம் மயூகை-ரஹமித்யேவ விபாவயே பவானீம் || 2 ||

த்யாயேத் பத்மாஸனஸ்தாம் விகஸிதவதனாம் பத்ம-பத்ராயதாக்ஷீம்,
ஹேமாபாம் பீதவஸ்த்ராம் கரகலித-லஸத்ஹேம - பத்மாம் வராங்கீம் | ஸர்வாலங்கார -யுக்தாம் ஸதத -

---

2. உதயகால சூரியனைப்போல் சிவந்த உடலும், கருணையலைகள் பாயும் கடல்போன்ற கண்களும், பாசமும் அங்குசமும் புஷ்ப பாணமும் கரும்புவில்லும் ஏந்திய கைகளும் உடையவளாய் அணிமாதி சக்திக் குழாம் சூழ விளங்கும் பவானியை 'அஹம்' எனும் தத்துவமாக (பராஹந்தை வடிவினளாக) பாவிக்கிறேன்.

3. தாமரையில் வீற்றிருப்பவளும், மலர்ந்த முக முடையவளும், தாமரையிதழ் போன்ற நீண்ட

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

सर्वालंकारयुक्तां सततमभयदां भक्तनम्रां भवानीं
श्रीविद्यां शान्तमूर्तिं सकलसुरनुतां सर्वसंपत्प्रदात्रीम् ॥ ३ ॥

सकुंकुमविलेपना-मलिकचुंबि-कस्तूरिकां
समन्द-हसितेक्षणां सशरचापपाशांकुशाम् ।
अशेषजनमोहिनी-मरुणमाल्यभूषांबरां
जपाकुसुम-भासुरां जपविधौ स्मरेदंबिकाम् ॥ ४ ॥

மபயதாம் - பக்த - நம்ராம் பவானீம், ஸ்ரீவித்யாம் சாந்த - மூர்த்திம் ஸகல ஸுரநுதாம் ஸர்வ ஸம்பத்-ப்ரதாத்ரீம் ||

ஸகுங்கும-விலேபனா-மளிகசும்பி-கஸ்தூரிகாம்
ஸமந்த-ஹஸிதேக்ஷணாம் ஸசரசாபபாசாங்குசாம் |
அசேஷஜனமோஹினீ-மருணா-மால்ய-பூஷாம்பராம்
ஜபாகுஸுமபாஸுராம் ஜபவிதௌ ஸ்மரே-தம்பிகாம் ||

கண்களுடையவளும், பொன்னொளி பொருந்தியவளும், பொன்னாடையணிந்தவளும், பொற்றாமரையைக் கையில் கொண்டவளும், சிறந்த அங்கங்களைப் படைத்தவளும், எல்லா அலங்காரங்களும் பொருந்தியவளும், அபயமளிப்பவளும், பக்தர்களிடம் இரங்குபவளும், ஸ்ரீவித்யா ரூபிணியும், சாந்த மூர்த்தியும், தேவர்களனைவராலும் துதிக்கப்பட்டவளும், எல்லாச் செல்வத்தையும் அளிப்பவளுமான பவானி தேவியை எப்போதும் வணங்க வேண்டும்.

4. குங்குமப் பூச்சுள்ளவளும், வண்டுகள் நாடும் கஸ்தூரி பூசியவளும், புன்னகைபூத்த பார்வையுடையவளும், அம்பு, வில், பாசம், அங்குசம் ஆகியவற்றைத்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

लं-पृथिव्यात्मिकायै गन्धं समर्पयामि ।
हं-आकाशात्मिकायै पुष्पाणि समर्पयामि ।
यं-वाय्वात्मिकायै धूपमाघ्रापयामि ।
रं-अग्न्यात्मिकायै दीपं दर्शयामि ।
वं-अमृतात्मिकायै अमृतं महानैवेद्यं निवेदयामि ।
सं-सर्वात्मिकायै सर्वोपचार-पूजां समर्पयामि ॥

லம்-ப்ருதிவ்யாத்மிகாயை கந்தம் ஸமர்ப்பயாமி ।
ஹம்-ஆகாசாத்மிகாயை புஷ்பாணி ஸமர்ப்பயாமி ।
யம்-வாய்வாத்மிகாயை தூப-மாக்ராபயாமி ।
ரம்-அக்ன்யாத்மிகாயை தீபம் தர்சயாமி ।
வம்-அம்ருதாத்மிகாயை அம்ருதம் மஹாநைவேத்யம் நிவேதயாமி ।
ஸம்-ஸர்வாத்மிகாயை ஸர்வோபசார-பூஜாம் ஸமர்பயாமி ॥

தரித்தவளும், எல்லா ஜனங்களையும் மோகிக்கச் செய்பவளும், சிகப்பு மாலையும் ஆபரணமும் ஆடையும் அணிந்தவளும், செம்பருத்திப்பூவின் நிறைமுடைய வளுமான அம்பிகையை ஜப காலத்தில் சிந்திக்க வேண்டும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

(ஒ.) பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
பராந்தகி த்ரியம்பகி யெழில்
புங்கவி விளங்குசிவ சங்கரி ஸஹஸ்ரதள
புஷ்பமிசை வீற்றிருக்கும்
நாரணி மனாதீத நாயகி குணாதீத
நாதாந்தசக்தி என்றுன்
நாமமே உச்சரித்திடுமடியர் நாமமே
நானுச்சரிக்க வசமோ
ஆறணி சடைக்கடவுள் ஆரணி எனப்புகழ
அகிலாண்டகோடி யீன்ற
அன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசும்
ஆனந்த ரூபமயிலே
வாரணியும் இருகொங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ்
வளமருவுதேவை யரசே
வரை ராசனுக்கிருகண் மணியாயுதித்த மலைவளர்
காதலிப்பெண் உமையே.

—தாயுமானவர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸஹஸ்ரநாமத்தின் விஷய விபாகம்

சுலோகங்கள்		நாமங்கள்	விஷயம்
1	1- 3	1-12	ஸ்ரீமாதாவின் அவதாரம்
2	4-21	13-54	கேசாதி-பாத வர்ணனை (ஸ்தூலம்)
3	22-23	55-63	ஸ்ரீநகரவர்ணனை
4	24-33½	64-84	பண்டாசுரவதம்
5	34-35½	85-89	மந்த்ர ரூபம் (ஸூக்ஷ்மம்)
6	36-40	90-111	குண்டலினீ ரூபம்
7	41-42½	112-131	பக்த அனுக்ரஹம்
8	43-45½	132-155	நிர்க்குண உபாஸனை
9	46-50½	156-195	நிர்க்குண உபாஸனையின் பலன்
10	51-60	196-248	ஸகுண உபாஸனை
11	61-75	249-340	பஞ்ச ப்ரம்மரூபம்
12	76-80	341-365	க்ஷேத்ர-க்ஷேத்ரஜ்ஞ ரூபம்
13	81-97	366-474	பீடங்களும் அங்கதேவதைகளும்
14	98-100	475-534	யோகினி நியாஸம்
15	110-180	535-989	விபூதி விஸ்தாரமும் மார்க்க-பேதங்களின் ஸாமரஸ்யமும்
16	181-182½	990-1000	சிவ-சக்தி-ஐக்யம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

स्तोत्रम्

॥ ॐ ॥ श्रीमाता श्रीमहाराज्ञी श्रीमत्सिंहासनेश्वरी ।
चिदग्नि-कुण्ड-संभूता देवकार्य-समुद्यता ॥ १ ॥

उद्यद्भानु-सहस्राभा चतुर्बाहु-समन्विता ।
रागस्वरूप-पाशाढ्या क्रोधाकारांकुशोज्ज्वला ॥ २ ॥

ஸ்தோத்ரம்

(1) ஸ்ரீ மாதாவின் அவதாரம்

॥ ஓம் ॥ ஸ்ரீ மாதா ஸ்ரீமஹாராஜ்ஞீ ஸ்ரீமத்ஸிம்ஹாஸனேச்வரீ
சிதக்னி-குண்ட-ஸம்பூதா தேவகார்ய-ஸமுத்யதா ॥ 1 ॥

உத்யத்பானு-ஸஹஸ்ராபா சதுர்பாஹு-ஸமன்விதா ।
ராகஸ்வரூப-பாசாட்யா க்ரோதாகாராங்குசோஜ்ஜ்வலா ॥

---

1. ஸ்ரீ மாதாவின் அவதாரம் (1-3): பரமசிவனுடைய நெற்றிக் கண்ணிலிருந்து போந்த கோபாக்கினியால் காம தேவன் சாம்பலானபின் தேவர்கள் அவனுக்காக இரங்கி அவனுடைய சாம்பலை மனித உருவாகக் கூட்டி வைத்து அவனை மீண்டும் பிழைப்பிக்க வேண்டும் என்று கருதிப் பரமசிவனை அணுகப் பரமசிவன் அச்சாம்பல் வடிவைப் பார்த்தார். அப்போது அவ்வடிவு உயிர்த்தெழுந்தது. ஆனால் பழைய மன்மதனல்லாமல் பண்டாசுரன் என்ற கொடிய அரக்க வடிவாக அது ஆயிற்று. அவ்வசுரன் மண்ணிலும் விண்ணிலும் உள்ள அனைவரையும் வீரியத்தை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

मनोरूपेक्षु-कोदण्डा पञ्चतन्मात्र-सायका ।

निजारुण-प्रभापूर-मज्जद्ब्रह्माण्ड-मण्डला ॥ ३ ॥

மனோரூபேக்ஷு-கோதண்டா பஞ்ச-தன்மாத்ர-ஸாயகா ।
நிஜாருண-ப்ரபாபூர-மஜ்ஜத்-ப்ரஹ்மாண்ட-மண்டலா ॥ 3 ॥

இழக்கச் செய்தான். சோணிதபுரத்தைத் தன் தலைநகராய்க் கொண்டு அவன் தேவர்களைப் படாதபாடு படுத்திய போது, நாரதர் பராசக்தியைக் குறித்துத் தவம் செய்யும்படி தேவேந்திரனுக்கு உபதேசித்தார். இந்திரன் தவமிருந்து முடிவில் ஒரு யாகம் செய்தான். அந்த யாக குண்டத்தி லிருந்து ஸ்ரீலலிதா மஹாத்ரிபுரஸுந்தரீ தேவி தோன்றி னாள். தேவர்கள் கூடி அவளைத் துதிசெய்துப் பண்டாசுர வதத்தை வரமாக வேண்டினர். தேவியையே தங்களை யாளும் இராணியாகப் பட்டாபிஷேகம் செய்யவும் விரும் பினர். விவாகமில்லாமல் பட்டாபிஷேகம் செய்வது முறையல்லவென்று பிரம்மா சொல்ல, அவர்கள் பிரார்த் தனைக்கிணங்கி, தேவி பரமசிவனுக்கு மாலையிட்டாள். அதி சுந்தரமான வடிவங்கொண்டு காமேசுவரன் என்ற சிறப்புப் பெயருடன் பரமசிவன் மஹா த்ரிபுரசுந்தரியை நாயகியாக ஏற்றார். பிரம்மாதி தேவர்கள் அவர்கள் திருமணத்தை நடத்தி மகிழ்ந்தனர். அவர்களுக்கு ஸாம்ராஜ்ய பட்டாபிஷேகமும் செய்வித்து அளவிலா மகிழ்வெய்தினர். அவர்களுக்கு வாசஸ்தானமாக மேருவின் உச்சியில் ஸ்ரீநகரம் என்னும் இராஜதானியை யும் நிர்மாணித்தனர்.

பின்னர் தேவியானவள் தேவர்கள் வேண்டுகோளைப் பூர்த்தி செய்விக்கத் தன் பரிவார சக்திகளுடன் கிளம்பிப் பண்டாசுரனுடனும் அவன் பரிவாரங்களுடனும் போர் செய்து அவனை வதம் செய்து முடித்தாள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

चंपकाशोक-पुन्नाग-सौगन्धिक-लसत्कचा ।
कुरुविन्दमणि-श्रेणी-कनत्कोटीर-मण्डिता ॥ ४ ॥

अष्टमीचन्द्र-विभ्राज-दलिकस्थल-शोभिता ।
मुखचन्द्र-कलंकाभ-मृगनाभि-विशेषका ॥ ५ ॥

वदनस्मर-मांगल्य-गृहतोरण-चिल्लिका ।
वक्त्रलक्ष्मी-परीवाह-चलन्मीनाभ-लोचना ॥ ६ ॥

(2) கேசாதிபாத வர்ணனை

சம்பகாசோக-புந்நாக-ஸௌகந்திக-லஸத்-கசா ।
குருவிந்தமணி-ச்ரேணீ-கனத்-கோடீர-மண்டிதா ॥ 4 ॥

அஷ்டமீசந்த்ர-விப்ராஜ-தளிகஸ்தல-சோபிதா ।
முகசந்த்ர-களங்காப-ம்ருகநாபி-விசேஷகா ॥ 5 ॥

வதனஸ்மர-மாங்கல்ய-க்ருஹதோரண-சில்லிகா ।
வக்த்ர-லக்ஷ்மீ-பரீவாஹ-சலன்-மீனாப-லோசனா ॥ 6 ॥

2. கேசாதி பாதவர்ணனை (4-21): தேவதைகளை தியானம் செய்வதில் கேசாதி பாதாந்தமும், பாதாதி கேசாந்தமும் என இரண்டு முறை உண்டு. ஆனால் புருஷ ரூபமானால் பாதாதி கேசாந்தமே ஸம்பிரதாயம், சிவசக்தி ஐக்கிய ஸ்வரூபம் இரண்டு விதமாகவும் தியானிக்கப் படும். விஷ்ணுவுக்குப் பாதாதி கேசாந்த ஸ்தோத்திரம் மட்டும் இயற்றிய பகவத்பாதர் சிவனுக்குப் பாதாதி கேசாந்தம், கேசாதி பாதாந்தம் என இரண்டு ஸ்தோத் திரங்கள் இயற்றியிருப்பதின் உட்கிடக்கை இதுவே. ஸ்ரீலலிதா மஹாத்ரிபுரஸுந்தரி உபாஸனைக்குக் கேசாதி பாதாந்தமான தியானமே விசேஷமாய்க் கூறப்படுகிறது.

5. பிப்ராஜத் (பா. பே.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

नवचंपक-पुष्पाभ-नासादण्ड-विराजिता ।
ताराकान्ति-तिरस्कारि-नासाभरण-भासुरा ॥ ७ ॥

कदंबमंजरी-क्लृप्त-कर्णपूर-मनोहरा ।
ताटंक-युगली-भूत-तपनोडुप-मण्डला ॥ ८ ॥

पद्मरागशिलादर्श-परिभावि-कपोलभूः ।
नवविद्रुम-बिंबश्री-न्यक्कारि-रदनच्छदा ॥ ९ ॥

शुद्धविद्यांकुराकार-द्विजपंक्ति-द्वयोज्ज्वला ।
कर्पूरवीटिकामोद-समाकर्षि-दिगन्तरा ॥ १० ॥

நவசம்பக-புஷ்பாப-நாஸாதண்ட-விராஜிதா |
தாராகாந்தி-திரஸ்காரி-நாஸாபரண-பாஸுரா || 7 ||

கதம்ப-மஞ்ஜரீ-க்லுப்த-கர்ணபூர-மனோஹரா |
தாடங்க-யுகளீ பூத-தபநோடுப-மண்டலா || 8 ||

பத்மராக-சிலாதர்ச-பரிபாவி-கபோலபூ: |
நவ-வித்ரும-பிம்பஸ்ரீ-ந்யக்காரி-ரதனச்சதா || 9 ||

சுத்த-வித்யாங்குராகார-த்விஜபங்க்தி-த்வயோஜ்ஜ்வலா |
கர்ப்பூர-வீடிகாமோத-ஸமாகர்ஷி-திகந்தரா || 10 ||

மஹாத்ரிபுரஸுந்தரி எல்லையில்லாத அழகின் உருவம், சுகந்தம் வீசும் சம்பக அசோக புன்னாக புஷ்பங்களின் நறுமணத்தையெல்லாம் இயற்கையிலேயே தன்னகத்தே கொண்ட கூந்தல் கற்றை; நெற்றியில் கஸ்தூரி திலகம்; மன்மதனுடைய கிருகத்தின் தோரணம் போன்ற புருவங்கள்; முகத்தின் அழகு வெள்ளத்தில் துள்ளி

---

9. *தசனச்சதா (பா. பே.)*
10. *ஸமாகர்ஷத்திகந்தரா (பா. பே.)*

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

निज-सल्लाप-माधुर्य-विनिर्भत्सित-कच्छपी ।
मन्दस्मित प्रभापूर-मज्जत्कामेश-मानसा ॥ ११ ॥

अनाकलित-सादृश्य-चिबुकश्री-विराजिता ।
कामेश-बद्ध-मांगल्य-सूत्र-शोभित-कन्धरा ॥ १२ ॥

कनकांगद-केयूर-कमनीय-भुजान्विता ।
रत्नग्रैवेय-चिन्ताक-लोल-मुक्ता-फलान्विता ॥ १३ ॥

कामेश्वर-प्रेमरत्न-मणि-प्रतिपण-स्तनी ।
नाभ्यालवाल-रोमालि-लता-फल-कुचद्वयी ॥ १४ ॥

நிஜ-ஸல்லாப-மாதுர்ய-விநிர்பர்த்ஸித-கச்சபீ ।
மந்த-ஸ்மித-ப்ரபாபூர-மஜ்ஜத்-காமேச-மானஸா ॥ 11 ॥

அநாகலித-ஸாத்ருச்ய-சிபுகஸ்ரீ-விராஜிதா ।
காமேச-பத்த-மாங்கல்ய-ஸூத்ர-சோபித-கந்தரா ॥ 12 ॥

கனகாங்கத-கேயூர-கமனீய-புஜான்விதா ।
ரத்னக்ரைவேய-சிந்தாக-லோல-முக்தா-பலான்விதா ॥ 13 ॥

காமேச்வர-ப்ரேமரத்ன-மணி-ப்ரதிபண-ஸ்தனீ ।
நாப்யாலவால-ரோமாலி-லதா-பல-குசத்வயீ ॥ 14 ॥

விளையாடும் மீன்களைப் போன்ற கண்கள்; நக்ஷத்திரத்தின் பொலிவைப் பழிக்கும் மூக்குத்தியுடன் கூடிய நாசி; சூரிய சந்திரர்கள் தோடுகளாக விளங்கும் செவிகள்; பத்மராகக் கண்ணாடியைப் பழிக்கும் கன்னங்கள்; பவழ வாய்; சுத்த வித்யையே முளைத்தாற்போன்ற அழகிய பல் வரிசை; பச்சைக் கற்பூரம் மணக்கும் தாம்பூலம்; ஸரஸ்வதியின் வீணா நாதத்தினுமினிய குரல்; சொக்கனையும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

लक्ष्यरोम-लताधारता समुन्नेय-मध्यमा ।
स्तनभार-दलन्मध्य-पट्टबन्ध-वलित्रया ॥ १५ ॥

अरुणारुणकौसुंभ-वस्त्र-भास्वत्-कटीतटी ।
रत्न-किंकिणिका-रम्य-रशना-दाम-भूषिता ॥ १६ ॥

कामेश-ज्ञात-सौभाग्य-मार्दवोरु-द्वयान्विता ।
माणिक्य-मुकुटाकार-जानुद्वय-विराजिता ॥ १७ ॥

इन्द्रगोप-परिक्षिप्त-स्मरतूणाभ-जंघिका ।
गूढगुल्फा कूर्मपृष्ठ-जयिष्णु प्रपदान्विता ॥ १८ ॥

லக்ஷ்யரோம-லதாதாரதா-ஸமுன்னேய-மத்யமா ।
ஸ்தனபார-தலன்-மத்ய-பட்டபந்த-வலித்ரயா ॥ 15 ॥

அருணாருண-கௌஸும்ப-வஸ்த்ர-பாஸ்வத்-கடீதடீ ।
ரத்ன-கிங்கிணிகாரம்ய-ரசநா-தாம-பூஷிதா ॥ 16 ॥

காமேசஜ்ஞாத-ஸௌபாக்ய-மார்தவோரு-த்வயான்விதா ।
மாணிக்ய-முகுடாகார-ஜானுத்வய-விராஜிதா ॥ 17 ॥

இந்த்ரகோப-பரிக்ஷிப்த-ஸ்மரதூணாப-ஜங்கிகா ।
கூடகுல்பா கூர்மப்ருஷ்ட-ஜயிஷ்ணு-ப்ரபதான்விதா ॥ 18 ॥

சொக்கவைக்கும் புன்புறுவல்; மங்கல சூத்திரமும் அட்டிகையும் பதக்கமும் விளங்கும் கழுத்து; காமேசுவரனுடைய விலையற்ற பிரேமையை விலைக்கு வாங்குவது போன்ற ஸ்தனங்கள்; நாபியாகிற பாத்தியிலிருந்து மெல்லிய கொடிபோலெழும் ரோமவரிசை; மூன்று மடிப்புக்களாலழகிய வயிறு; சிவப்புப் பட்டாடை; சிறு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

नख-दीधिति-संछन्न-नमज्जन-तमोगुणा ।
पदद्वय-प्रभाजाल-पराकृत-सरोरुहा ॥ १९ ॥

सिंजान-मणिमंजीर- मण्डित श्री पदांबुजा ।
मराली-मन्दगमना महालावण्य-शेवधिः ॥ २० ॥

सर्वारुणाऽनवद्यांगी सर्वाभरण-भूषिता ।
शिव-कामेश्वरांकस्था शिवा स्वाधीनवल्लभा ॥ २१ ॥

நக-தீதிதி-ஸஞ்சன்ன-நமஜ்ஜன-தமோகுணா ।
பதத்வய-ப்ரபாஜால-பராக்ருத-ஸரோருஹா ॥ 19 ॥

ஸிஞ்ஜான-மணிமஞ்ஜீர-மண்டித-ஸ்ரீ-பதாம்புஜா ।
மராளீ-மந்தகமனா மஹாலாவண்ய-சேவதி: ॥ 20 ॥

ஸர்வாருணா ऽநவத்யாங்கீ ஸர்வாபரணபூஷிதா ।
சிவ-காமேச்வராங்கஸ்தா சிவா ஸ்வாதீனவல்லபா ॥ 21 ॥

கிங்கிணிகளுடன் கூடிய அரைஞாண்; காமேசுவரன் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுந் துடைகள்; இரத்தினக் கிரீடங்கள் போன்ற முழங்கால்கள்; திரண்ட கணுக்கால்; ஆமை முதுகுபோன்ற புறங்கால்; வணங்குவோர் அகத் திருளைப் போக்கும் இரத்தின தீபங்களைப்போன்ற நகங்கள் பொருந்திய திருவடித் தாமரைகள்; அன்பி னால் சிவந்த உள்ளம் போல் அழகினால் சிவந்த திரு மேனி; அழகுமிகுந்த ஆபரணங்களுக்கு அழகு செய்யும் அவயவங்கள்; அழகின் பொக்கிஷம்; இணைபிரியா நாயகனாகிய காமேசுவரனுடைய இடது துடை யில் இன்புற்றமர்ந்து கண்கொள்ளாக் காட்சியளிக்கும் திருவுருவம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

सुमेरु-मध्यशृङ्गस्था श्रीमन्नगर-नायिका ।
चिन्तामणि-गृहान्तस्था पञ्च-ब्रह्मासन-स्थिता ॥ २२ ॥

(3) ஸ்ரீநகர வர்ணனை

ஸுமேரு-மத்யச்ருங்கஸ்தா ஸ்ரீமந்நகர-நாயிகா |
சிந்தாமணி-க்ருஹாந்தஸ்தா பஞ்ச-
ப்ரஹ்மாஸனஸ்திதா || 22 ||

3. ஸ்ரீநகர வர்ணனை *(22-23)*: ஸ்ரீநகரங்கள் இரண்டு; ஒன்று தேவர்களால் மேருமலையின் நடுச்சிகரத்தில் நிர்மாணம் செய்யப்பட்டது; மற்றொன்று ஸகலப் பிரம்மாண்டங்களுக்கும் அப்பால் அமிருத ஸாகரத்தின் மத்தியில் இரத்தினத்துவீபத்தில் உள்ளது.

ஸ்ரீநகரத்தின் வெளிப்பிராகாரங்கள் இருபத்தைந்து. அவை வரிசையாக, இரும்பு, எஃகு, செம்பு, வெள்ளீயம், பித்தளை, பஞ்சலோஹம், வெள்ளி, தங்கம், புஷ்பராகம், பத்மராகம், கோமேதகம், வஜ்ரம், வைடூரியம், இந்திர நீலம், முத்து, மரகதம், பவழம், நவரத்தினம், நானாரத் தினம், இவற்றாலும் மனம் புத்தி அஹங்காரம் முதலிய தத்துவங்களாலும், சூரியன், சந்திரன், மன்மதன் இவர் களுடைய தேஜஸ்ஸாலும் அமைந்தவை. எட்டாவது பிராகாரத்தில் உள்ளது கதம்பவனம். அங்கு பரதேவதை யின் மந்த்ரிணியான சியாமளாதேவி வசிப்பாள். பதினைந் தாவது பிராகாரத்தில் அஷ்ட திக்பாலகர்கள் வசிப்பர். பதினாறாவதில் ஸேனாநாயகி தண்டினீ அல்லது வாராஹியின் இருப்பிடம். இங்கும் சியாமளாதேவிக்கு ஒரு கிருகம் உண்டு. பதினேழாவதில் யோகினிகள் வசிப்பர்; பதினெட்டில் மஹாவிஷ்ணு; பத்தொன்பதில் ஈசானன்; இருபதில் தாராதேவி; இருபத்தொன்றில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

महापद्माटवी-संस्था कदंबवन-वासिनी ।
सुधासागर-मध्यस्था कामाक्षी कामदायिनी ॥ २३ ॥

மஹாபத்மாடவீ-ஸம்ஸ்தா கதம்பவன-வாஸிநீ ।
ஸுதாஸாகர-மத்யஸ்தா காமாக்ஷீ காமதாயினீ ॥ 23 ॥

வாருணீ; இருபத்திரண்டாவது அஹங்காரக் கோட்டையில் குருகுல்லாதேவி; இருபத்து மூன்றாவது சூரியப் பிராகாரத்தில் மார்த்தண்ட பைரவர்; இருபத்துநான்கில் சந்திரன்; இருபத்தைந்தாவது சிருங்காராவரணத்தில் மன்மதன். இதற்குள் மஹாபத்மவனம்; அதன் நடுவில் சிந்தாமணிக்கிருகம். அதன் அக்கினி மூலையில் சிதக்கினி குண்டமும் கிழக்குத் துவாரத்தின் இருபுறமும் மந்த்ரிணீ தண்டினீ தேவிகளின் கிருகங்களும் உள்ளன.

நான்கு துவாரங்களிலும் சதுராம்னாய தேவதைகள் காவலிருப்பர். இதனுள் நவாவரணங்களுடன் கூடின ஸ்ரீசக்ரம். ஸ்ரீசக்ரத்தின் நடுவில் பஞ்ச ப்ரம்மாஸனத்தின் மேல் மகா சிம்மாசனத்தில் ஸர்வானந்த மயம் எனும் பிந்து பீடத்தில் மஹாத்ரிபுரஸுந்தரீ எழுந்தருளியிருப்பாள். ஸ்ரீசக்ரத்தின் ஆவரணங்கள் சதுரவடிவான த்ரைலோக்ய மோஹனம், பதினாறுதள ஸர்வாசாபரி பூரகம், எட்டுதள ஸர்வஸம்க்ஷோபணம், பதினான்கு கோண ஸர்வஸௌபாக்கியம், வெளிப்பத்துக்கோண ஸர்வார்த்த-ஸாதகம், உட்பத்துக்கோண ஸர்வரக்ஷாகரம், எட்டுக்கோண ஸர்வரோகஹரம், முக்கோண ஸர்வ ஸித்திப்ரதம், பிந்துவடிவ ஸர்வாநந்தமயம் என்பன.

ஓ. 'பிந்து-த்ரிகோண-வஸுகோண-தசாரயுக்ம-மன்வச்ர - நாகதள - ஸம்யுத - ஷோடசாரம் । வ்ருத்த-த்ரயஞ்ச தரணீ-ஸதன-த்ரயஞ்ச ஸ்ரீசக்ரமேத-துதிதம் பரதேவதாயா:' ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

देवर्षि-गण-सङ्घात-स्तूयमानात्म-वैभवा ।
भण्डासुर-वधोद्युक्त-शक्तिसेना-समन्विता । २४ ॥

संपत्करी-समारूढ-सिंधुर-व्रज-सेविता ।
अश्वारूढाधिष्ठिताश्व-कोटि-कोटिभि-रावृता ॥ २५ ॥

चक्रराज-रथारूढ-सर्वायुध-परिष्कृता ।
गेयचक्र-रथारूढ-मंत्रिणी-परिसेविता ॥ २६ ॥

(4) பண்டாசுர வதம்

தேவர்ஷி-கண-ஸங்காத-ஸ்தூயமாநாத்ம-வைபவா |
பண்டாஸுர-வதோத்யுக்த-சக்திஸேநா-ஸமன்விதா || 24 ||

ஸம்பத்கரீ-ஸமாரூட-ஸிந்துர-வ்ரஜ-ஸேவிதா |
அச்வாருடாதிஷ்டிதாச்வ-கோடி-கோடிபி-ராவ்ருதா || 25 ||

சக்ரராஜ-ரதாருட-ஸர்வாயுத-பரிஷ்க்ருதா |
கேயசக்ர-ரதாருட-மந்த்ரிணீ-பரிஸேவிதா || 26 ||

4. பண்டாசுரவதம் ***(24-33½):*** பண்டாசுரவதம் செய்யத் தேவி புறப்பட்டபோது அணிமாதி சக்திகளும், ப்ராஹ்மீ, மாஹேச்வரீ, கௌமாரீ, வைஷ்ணவீ, வாராஹீ, மாஹேந்த்ரீ, சாமுண்டீ, மஹாலக்ஷ்மீ முதலிய சக்திகளும் நித்யா தேவதைகளும் மற்ற ஆவரண தேவதைகளும் சூழ்ந்து சென்றனர். ஸம்பத்கரீ தேவி யானைப்படைக்கும், அசுவாருடா தேவி குதிரைப்படைக்கும் தலைமை வகித்தனர். கேய சக்ரம் என்ற இரதத்தில் மந்த்ரிணீ தேவியும், கிரிசக்ரம் என்ற இரதத்தில் சேனாபதியான தண்டினீ தேவியும் முன் சென்றனர். எதிரிகள் அணுகாவண்ணம் ஜ்வாலாமாலினீ சக்தி அக்கினிப்பிழம்பால் இரக்ஷை செய்யப் பராசக்தியானவள் ஸ்ரீசக்ர இரதத்தின்மேல்

सम्प्रदायेश्वर्यै ७१०
साधुने
यै नमः
गुरुमण्डल-रूपिण्यै
कुलोत्तीर्णायै
भगाराध्यायै
मायायै
मधुमत्यै
मह्यै
गणाम्बायै
गुह्यकाराध्यायै ७२०
कोमलाङ्ग्यै
गुरुप्रियायै
स्वतन्त्रायै
सर्वतन्त्रेश्यै
दक्षिणामूर्ति-रूपिण्यै
सनकादि-समाराध्यायै
शिवज्ञान-प्रदायिन्यै

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ॐ चित्कलायै नमः
आनन्द-कलिकायै
प्रेमरूपायै ७३०
प्रियंकर्यै
नामपारायण-प्रीतायै
नन्दिविद्यायै
नटेश्वर्यै
मिथ्याजग-दधिष्ठानायै
मुक्तिदायै
मुक्तिरूपिण्यै
लास्यप्रियायै
लयकर्यै
लज्जायै ७४०
रम्भादि-वन्दितायै
भवदाव-सुधावृष्ट्यै
पापारण्य-दवानलायै
दौर्भाग्यतूल-वातूलायै
जराध्वान्त-रविप्रभायै
भाग्याब्धि-चन्द्रिकायै
भक्तचित्तकेकि-घनाघनायै
रोगपर्वत-दम्भोलये
मृत्युदारु-कुठारिकायै
महेश्वर्यै ७५०
महाकाल्यै
महाग्रासायै
महाशनायै
अपर्णायै
चण्डिकायै
चण्डमुण्डासुर-निषूदिन्यै
क्षराक्षरात्मिकायै
सर्वलोकेश्यै
विश्वधारिण्यै
त्रिवर्गदात्र्यै ७६०
सुभगायै
त्र्यंबकायै
त्रिगुणात्मिकायै
स्वर्गापवर्गदायै
शुद्धायै
जपापुष्प-निभाकृतये
ओजोवत्यै
द्युतिधरायै
यज्ञरूपायै
प्रियव्रतायै ७७०

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ॐ दुराराध्यायै नमः
दुराधर्षायै
पाठलीकुसुम-प्रियायै
महत्यै
मेरुनिलयायै
मन्दारकुसुमप्रियायै
वीराराध्यायै
विराड्रूपायै
विरजसे
विश्वतोमुख्यै ७८०
प्रत्यग्रूपायै
पराकाशायै
प्राणदायै
प्राणरूपिण्यै
मार्तण्ड-भैरवाराध्यायै
मन्त्रिणी-न्यस्त-राज्यधुरे
त्रिपुरेश्यै
जयत्सेनायै
निस्त्रैगुण्यायै
परापरायै ७९०
सत्यज्ञानानन्द-रूपायै
सामरस्य-परायणायै

कपर्दिन्यै
कलामालायै
कामदुघे
काम-रूपिण्यै
कलानिधये
काव्यकलायै
रसज्ञायै
रसशेवधये ८००
पुष्टायै
पुरातनायै
पूज्यायै
पुष्करायै
पुष्करेक्षणायै
परस्मै ज्योतिषे
परस्मै धाम्ने
परमाणवे
परात्परायै
पाशहस्तायै ८१०
पाशहन्त्र्यै
परमन्त्र-विभेदिन्यै
मूर्तायै
अमूर्तायै

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ॐ अनित्यतृप्तायै नमः
मुनिमानस-हंसिकायै
सत्यव्रतायै
सत्यरूपायै
सर्वान्तर्यामिन्यै
सत्यै ८२०
ब्रह्माण्यै
ब्रह्मणे
जनन्यै
बहुरूपायै
बुधार्चितायै
प्रसवित्र्यै
प्रचण्डायै
आज्ञायै
प्रतिष्ठायै
प्रकटाकृतये ८३०
प्राणेश्वर्यै
प्राणदात्र्यै
पञ्चाशत्पीठ-रूपिण्यै
विशृङ्खलायै
विविक्तस्थायै
वीरमात्रे
वियत्प्रसुवे
मुकुन्दायै
मुक्ति-निलयायै
मूलविग्रह-रूपिण्यै ८४०
भावज्ञायै
भवरोगघ्न्यै
भवचक्र-प्रवर्तिन्यै
छन्दःसारायै
शास्त्रसारायै
मन्त्रसारायै
तलोदर्यै
उदारकीर्तये
उद्दामवैभवायै
वर्णरूपिण्यै ८५०
जन्म-मृत्यु-जरा-तप्त-जन-
विश्रान्ति-दायिन्यै
सर्वोपनिष-दुद्घुष्टायै
शान्त्यतीत-कलात्मिकायै
गम्भीरायै
गगनान्तस्थायै
गर्वितायै
गानलोलुपायै

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ॐ कल्पना-रहितायै नमः
काष्ठायै
अकान्तायै ८६०
कान्तार्ध-विग्रहायै
कार्यकारण-निर्मुक्तायै
कामकेलि-तरङ्गितायै
कनत्कनक-ताटङ्कायै
लीला-विग्रह-धारिण्यै
अजायै
क्षयविनिर्मुक्तायै
मुग्धायै
क्षिप्र-प्रसादिन्यै
अन्तर्मुख-समाराध्यायै ८७०
बहिर्मुख-सुदुर्लभायै
त्रय्यै
त्रिवर्ग-निलयायै
त्रिस्थायै
त्रिपुर-मालिन्यै
निरामयायै
निरालम्बायै
स्वात्मारामायै
सुधासृत्यै
संसारपंक-निर्मग्न-समुद्धरण-पण्डितायै ८८०
यज्ञप्रियायै
यज्ञकर्त्र्यै
यजमान-स्वरूपिण्यै
धर्माधारायै
धनाध्यक्षायै
धनधान्य-विवर्धिन्यै
विप्रप्रियायै
विप्ररूपायै
विश्वभ्रमण-कारिण्यै
विश्वग्रासायै ८९०
विद्रुमाभायै
वैष्णव्यै
विष्णुरूपिण्यै
अयोन्यै
योनि-निलयायै
कूटस्थायै
कुलरूपिण्यै नमः
वीरगोष्ठी-प्रियायै
वीरायै

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ॐ नैष्कर्म्यायै नमः ९००
नादरूपिण्यै
विज्ञानकलनायै
कल्यायै
विदग्धायै
बैन्दवासनायै
तत्त्वाधिकायै
तत्त्वमय्यै
तत्त्वमर्थ-स्वरूपिण्यै
सामगान-प्रियायै
सोम्यायै ९१०
सदाशिव-कुटुम्बिन्यै
सव्यापसव्य-मार्गस्थायै
सर्वापद्विनिवारिण्यै
स्वस्थायै
स्वभावमधुरायै
धीरायै
धीरसमर्चितायै
चैतन्यार्घ्य-समाराध्यायै
चैतन्य-कुसुम-प्रियायै
सदोदितायै ९२०
सदातुष्टायै
तरुणादित्य-पाटलायै
दक्षिणा-दक्षिणाराध्यायै
दरस्मेर-मुखाम्बुजायै
कौलिनी-केवलायै
अनर्घ्य-कैवल्य-पद-दायिन्यै
स्तोत्र-प्रियायै
स्तुतिमत्यै
श्रुति-संस्तुत-वैभवायै
मनस्विन्यै ९३०
मानवत्यै
महेश्यै
मङ्गलाकृतये
विश्वमात्रे
जगद्धात्र्यै
विशालाक्ष्यै
विरागिण्यै
प्रगल्भायै
परमोदारायै
परामोदायै ९४०
मनोमय्यै
व्योमकेश्यै

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ॐ विमानस्थायै नमः
वज्रिण्यै
वामकेश्वर्यै
पञ्चयज्ञ-प्रियायै
पञ्चप्रेत-मञ्चाधिशायिन्यै
पञ्चम्यै
पञ्चभूतेश्यै
पञ्चसङ्ख्योपचारिण्यै ९५०
शाश्वत्यै
शाश्वतैश्वर्यायै
शर्मदायै
शम्भुमोहिन्यै
धरायै
धरसुतायै
धन्यायै
धर्मिण्यै
धर्मवर्धिन्यै
लोकातीतायै ९६०
गुणातीतायै
सर्वातीतायै
शमात्मिकायै
बन्धूक-कुसुम-प्रख्यायै
बालायै
लीला-विनोदिन्यै
सुमङ्गल्यै
सुखकर्यै
सुवेषाढ्यायै
सुवासिन्यै ९७०
सुवासिन्यर्चन-प्रीतायै
आशोभनायै
शुद्ध-मानसायै
बिन्दु-तर्पण-सन्तुष्टायै
पूर्वजायै
त्रिपुरांम्बिकायै
दशमुद्रा-समाराध्यायै
त्रिपुराश्रीवशंकर्यै
ज्ञानमुद्रायै
ज्ञानगम्यायै ९८०
ज्ञान-ज्ञेय-स्वरूपिण्यै
योनिमुद्रायै
त्रिखण्डेश्यै
त्रिगुणायै
अम्बायै

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ॐ त्रिकोणगायै नमः
अनघायै
अद्भुत-चारित्रायै
वांछितार्थ-प्रदायिन्यै
अभ्यासातिशय-ज्ञातायै
९९०
षडध्वातीत-रूपिण्यै
अव्याज-करुणा-मूर्तये
अज्ञानध्वान्त-दीपिकायै
आबाल-गोप-विदितायै
सर्वानुल्लंघ्य-शासनायै
श्रीचक्रराज-निलयायै
श्रीमत्-त्रिपुरसुन्दर्यै
श्रीशिवायै
शिव-शक्त्यैक्य-रूपिण्यै
ललितांबिकायै नमः
१०००

इति श्रीललितासहस्रनामवलिः संपूर्णम् ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நாமாவளியின் பாஷ்யம்

ஓம்-ஐம்-ஹ்ரீம்-ஸ்ரீம்

1. ஓம் ஸ்ரீமாத்ரே நம:
2. ஓம் ஸ்ரீமஹாராஜ்ஞ்யை
3. ஸ்ரீமத் ஸிம்ஹாஸனேச்வர்யை
4. சிதக்னிகுண்ட-ஸம்பூதாயை

---

1. (உயர்வற உயர்நலமாகிய) திருவே வடிவான தாய்க்கு நமஸ்காரம். 'ஸ்ரீ' யென்றது அழியாத பேரின்பச் செல்வத்தைச் குறிக்கும்.

ஒ. 'ஸா ஹி ஸ்ரீ-ரம்ருதா ஸதாம்'—சுருதி.

ஸ்ரீமாதா—எல்லாத் துன்பங்களையுந் துடைத்து அழியாத இன்பத்தை ஊட்டுவிக்கும் பரிவுடைய பரதேவதையாகிய லோகமாதா. (ஒ. 'பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்பரிந்து நீ பாவியேனுடைய ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து புறம்புறந்திரிந்த செல்வமே.' —திருவாசகம்.)

2. ஒப்புயர்வற்ற லோகரக்ஷகி.

3. சிறந்த சிம்மாஸனத்தில் எழுந்தருளியிருக்கும் ஈசுவரி. (தேவிக்கு சிங்கமே ஆஸனமும் வாகனமும்.)

இம்மூன்று நாமங்களால், ஆக்கியளித்துத் துடைக்கும் முத்தொழில் குறிக்கப்படும்.

4. அறிவாகிய அக்கினி குண்டத்திலிருந்து தோன்றிய பரப்பிரம்ம ஸ்வரூபிணீ.

(ஒ. 'அந்தர்-நிரந்தர-நிரிந்தன-மேதமானே, மோஹாந்தகார பரிபந்தினி ஸம்விதக்நௌ.')

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

5. தேவகார்ய-ஸமுத்யதாயை
6. உத்யத்பானு-ஸஹஸ்ராபாயை
7. சதுர்பாஹு-ஸமன்விதாயை
8. ராகஸ்வரூப-பாசாட்யாயை
9. க்ரோதாகாராங்குசோஜ்ஜ்வலாயை
10. மனோரூபேக்ஷு-கோதண்டாயை

---

5. (பண்டன், மஹிஷன், சும்பன், நிசும்பன், முதலிய அசுரர்களைக் கொன்று) தேவர்களுக்கு நன்மை புரிவதில் ஊக்கமுடையவள்.

6. ஆயிரம் சூரியர்கள் உதித்தாற் போன்ற பிரகாசம் பொருந்தியவள்.

(ஒ. திவி ஸூர்ய-ஸஹஸ்ரஸ்ய பவேத் யுகபதுத்திதா —கீ. 11.12)

7. (தேவியின் வடிவம்—(i) ஸ்தூலம்; கை கால் முதலிய அங்கங்களுடன்; (ii) ஸூக்ஷ்மம்; மந்திரமயம் (iii) ஸூக்ஷ்மதரம்: காமகலா ரூபம் (iv) ஸூக்ஷ்மதமம்: குண்டலினீ ரூபம் (v) சுத்தப்ரஹ்ம ரூபம். இனி ஸ்தூலரூப வர்ணனை.) நான்கு கைகளையுடையவள்.

8. ஆசை வடிவான (இச்சா சக்தியாகிய) பாசம் (இடது பின் கையில்) உடையவள்.

9. (தீமையைப்பொசுக்கும்) கோபமாகிய அங்குசம் (ஞானசக்தி வலது பின் கையில்) தரித்துப் பிரகாசிப்பவள்.

10. மனமாகிய கரும்பு வில் (இடது முன் கையில்) உடையவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

11. பஞ்சதன்மாத்ர-ஸாயகாயை
12. நிஜாருண-ப்ரபா-பூர-மஜ்ஜத்-ப்ரஹ்மாண்ட-மண்டலாயை
13. சம்பகாசோக-புந்நாக-ஸௌகந்திக-லஸத்-கசாயை
14. குருவிந்த-மணி-ச்ரேணீ-கநத்-கோடீர-மண்டிதாயை
15. அஷ்டமீசந்த்ர-விப்ராஜ-தலிக-ஸ்தல-சோபிதாயை
16. முகசந்த்ர-கலங்காப-ம்ருகநாபி-விசேஷகாயை

---

11. (சப்த-ஸ்பர்ச-ரூப-ரஸ-கந்தம் என்ற) ஐந்து தன் மாத்திரைகளாகிய பாணங்கள் (வலது முன் கையில்) உடையவள். வில்லும் அம்பும் கிரியா சக்தியைக் குறிப்பன. 8-11 நாமங்களின் உட்கருத்தை உள்ளபடி உணர்ந்த ஞானியின் செயல் யாவுமே நியதியின் வயப்பட்ட நிலையில் பராசக்தியின் செயலாகவே விளங்கும். ஒ. த்ரிபுரா ரஹஸ்யம் அத். 21.)

12. தனது சிவந்த திருமேனியின் காந்தி வெள்ளத்தில் உலகனைத்தையும் மூழ்கச் செய்பவள்.

13. சம்பகம், அசோகம், புந்நாகம், ஸௌகந்திகம் என்ற புஷ்பங்களைக் கூந்தலில் அணிந்து விளங்குபவள். (ஒ. துநோது த்வாந்தம் ந:—ஸௌ.ல. 43.)

14. பத்மராக மணிகள் வரிசையாய்ப் பதிக்கப்பெற்று ஒளி வீசும் அழகிய கிரீடத்தை அணிந்தவள். (ஒ. கதைர் மாணிக்யத்வம்—ஸௌ. ல. 42.)

15. (அரைவட்ட வடிவான) அஷ்டமிச் சந்திரன்போல் விளங்கும் நெற்றியுடையவள். (ஒ. லலாடம் லாவண்ய—ஸௌ. ல. 46.)

16. சந்திரனிடம் தோன்றும் களங்கம் போன்று முகமண்டலத்தில் விளங்கும் கஸ்தூரிப் பொட்டுடையவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

17. வதனஸ்மர-மாங்கல்ய-க்ருஹ-தோரண-சில்லிகாயை
18. வக்த்ர-லக்ஷ்மீ-பரீவாஹ-சலன்-மீனாப-லோசனாயை
19. நவசம்பக-புஷ்பாப-நாஸாதண்ட-விராஜிதாயை
20. தாராகாந்தி-திரஸ்காரி-நாஸாபரண-பாஸுராயை
21. கதம்ப-மஞ்ஜரீ-க்லுப்த-கர்ணபூர-மனோஹராயை
22. தாடங்க-யுகலீ-பூத-தபனோடுப-மண்டலாயை
23. பத்மராக-சிலாதர்ச-பரிபாவி-கபோல-புவே
24. நவவித்ரும-பிம்பஸ்ரீ-ந்யக்காரி-ரதனச்சதாயை

---

17. மன்மதன் வசிக்கும் மங்கல வீடாகிய முகத்திற்குத் தோரணங்கள் போன்ற புருவங்களை உடையவள்.

18. முகத்தின் அழகு வெள்ளத்தில் சலிக்கும் மீன்களைப் போன்ற கண்களை உடையவள்.

19. அன்றலர்ந்த சம்பகம் போன்ற அழகிய மூக்குடையவள்.

20. நக்ஷத்திரத்தினும் மிகுந்த ஒளிவீசும் மூக்குத்தியணிந்தவள்.

21. மனோஹரமாகக் கதம்பப் பூவைச் செவிப்பூவாகவுடையவள்.

22. சூரிய சந்திரர்களைத் தோடுகளாக அணிந்தவள். (ஒ. ஸுதாமப்-யாஸ்வாத்ய —ஸௌ. ல. 28.)

23. பத்மராகச் சிலைக்கண்ணாடியினும் மிகுந்த பிரகாசமான கன்னங்களை உடையவள். (ஒ. ஸ்புரத் கண்டாபோக—ஸௌ. ல. 59.)

24. புதிதான பவழத்தினும் கோவைப்பழத்தினும் சிறந்த காந்தி பொருந்திய உதடுகளை யுடையவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

25. சுத்த-வித்யாங்குராகார-த்விஜபங்க்தி-
த்வயோஜ்ஜ்வலாயை
26. கர்ப்பூரவீடிகாமோத-ஸமாகர்ஷி-திகந்தராயை
27. நிஜ ஸல்லாப-மாதுர்ய-விநிர்பர்த்ஸித-கச்சப்யை
28. மந்தஸ்மித-ப்ரபாபூர-மஜ்ஜத்காமேச-மானஸாயை
29. அநாகலித-ஸாத்ருச்ய-சிபுக-ஸ்ரீ-விராஜிதாயை
30. காமேச-பத்த-மாங்கல்ய-ஸூத்ர-சோபித-கந்தராயை
31. கநகாங்கத-கேயூர-கமனீய புஜான்விதாயை

---

25. *(ஷோடசாக்ஷரீ)* சுத்த வித்தையே முளைத்தாற் போன்று விளங்கும் இரு பல்வரிசைகளை யுடையவள்.

26. *(ஏலம், லவங்கம், பச்சைக் கற்பூரம், கஸ்தூரி, கேஸரி, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி முதலியவை கலந்த தாம் பூலம் கர்ப்பூரவீடிகா.)* எத்திக்கிலுள்ளவரையும் நறு மணத்தால் கவரும் கர்ப்பூர வீடிகையென்ற தாம் பூலந் தரித்தவள். *(ஒ. ப்ரக்ருத்யா மூகானாமபி—ஸௌ. ல. 98.)*

27. *(ஸரஸ்வதியின் வீணை கச்சபீ.)* கச்சபியென்ற சிறந்த வீணை நாதத்திலும் இனிய மொழியாள். *(ஒ. விபஞ்ச்யா—ஸௌ. ல. 66.)*

28. காமேசுவரனுடைய மனது மூழ்கி விளையாடும் பிரவாகம் போன்ற புன் சிரிப்பினள்.

29. உவமையற்ற அழகு வாய்ந்த முகவாய்க் கட்டின் அழகுடன் விளங்குபவள். *(ஒ. கராக்ரேணஸ்ப்ருஷ் டம்-ஸௌ. ல. 67.)*

30. காமேசுவரர் கட்டிய மங்கல நாணுடன் பிரகாசிக்கும் கழுத்தினள். *(ஒ. களே ரேகா:—ஸௌ. ல. 69.)*

31. பொன்னாலாகிய தோள்வளைகளை யணிந்தவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

32. ரத்ன-க்ரைவேய-சிந்தாக-லோல-முக்தா-
பலான்விதாயை

33. காமேச்வர-ப்ரேமரத்ன-மணிப்ரதிபண-ஸ்தன்யை

34. நாப்யாலவால-ரோமாலி-லதாபல-குசத்வய்யை

35. லக்ஷ்ய-ரோம-லதாதாரதா-ஸமுன்னேய-மத்யமாயை

36. ஸ்தன-பார-தலன்-மத்ய-பட்ட-பந்த-வலித்ரயாயை

37. அருணாருண-கௌஸும்ப-வஸ்த்ர-பாஸ்வத்-
கடீதட்யை

---

32. அசைகின்ற முத்துக்களுடன் கூடிய ரத்தினப் பதக்கம் பொருந்திய அட்டிகை அணிந்தவள்.

33. இரத்தின கலசம் போன்ற தனது ஸ்தனங்களையே கொடுத்துக் காமேசருடைய பிரேமையை விலைக்கு வாங்கியவள்.

34. நாபி எனும் பாத்தியிலிருந்து முளைத்தெழுந்த கொடி போன்ற மெல்லிய உரோம வரிசையின் உச்சியில் பழுத்த பழங்களை யொத்த இரு ஸ்தனங்களையுடையவள். (ஒ. ஹரக்ரோதஜ்வாலா—ஸௌ. ல. 76.)

35. உரோம வரிசையாகிற கொடி காணப்படுவதால் அதற்கு ஆதாரமாக ஒரு இடம் இருக்கவேண்டும் என்று ஊகிக்கும்படி (காணப்படாமல்) இருக்கும் இடையுடையவள்.

36. ஸ்தனபாரத்தினால் இடைக்கு ஊனமேற்படாது காப்பதற்காக அணியப் பெற்ற முப்பட்டையோ என விளங்கும் மூன்று மடிப்புக்களை வயிற்றில் உடையவள். (ஒ. குசௌ ஸத்ய: -ஸௌ. ல. 80.)

37. சிவப்புப் பட்டாடையால் பிரகாசிக்கின்ற இடையுடையவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

38. ரத்ன-கிங்கிணிகா-ரம்ய-ரசனா-தாம-பூஷிதாயை
39. காமேச-ஜ்ஞாத-ஸௌபாக்ய-மார்தவோரு-
த்வயான்விதாயை
40. மாணிக்ய-முகுடாகார-ஜானுத்வய-விராஜிதாயை
41. இந்த்ரகோப-பரிக்ஷிப்த-ஸ்மரதூணாப-ஜங்கிகாயை
42. கூட-குல்பாயை
43. கூர்ம-ப்ருஷ்ட-ஜயிஷ்ணு-ப்ரபதான்விதாயை
44. நகதீதிதி-ஸஞ்ச்சன்ன-நமஜ்ஜன-தமோகுணாயை
45. பத-த்வய-ப்ரபா-ஜால-பராக்ருத-ஸரோருஹாயை

---

38. இரத்தினச் சதங்கைகளுடன் விளங்கும் அழகிய அரைஞாண் பூண்டவள்.

39. காமேசனால் மட்டும் அறியப்பெற்ற அழகும் மென்மையும் கொண்ட துடைகளை யுடையவள்.

40. மாணிக்க முகுடம் போன்ற முழந்தாள் சில்லுகளை யுடையவள்.

41. இந்திரகோபங்கள் என்ற கார்காலத்துப் பூச்சிகள் மொய்க்கப் பெற்ற மதனவேளின் அம்பறாத் தூணி களோ எனத் தோன்றுபவையான பசலை படர்ந்த முன்னங்கால்களைக் கொண்டவள். (ஒ. பராஜேதும் ருத்ரம்—ஸௌ. ல. 83.)

42. உருண்டு அழகிய கணைக் கால்களை யுடையவள்.

43. ஆமையின் முதுகுபோல் வளைந்த புறங்கால் உள்ளவள்.

44. தன் பாதங்களில் வணங்குவோர் அகத்திலுள்ள இருளை நகத்தின் காந்தியால் போக்குபவள்.

45. தாமரையினும் மிக்க அழகு வாய்ந்த பாதங்களை யுடையவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

46. ஸிஞ்ஜான-மணி-மஞ்ஜீர-மண்டித-ஸ்ரீபதாம்புஜாயை
47. மராலீ-மந்த-கமனாயை
48. மஹா-லாவண்ய-சேவதயே
49. ஸர்வாருணாயை
50. அநவத்யாங்க்யை
51. ஸர்வாபரண-பூஷிதாயை
52. சிவ-காமேச்வராங்கஸ்தாயை
53. சிவாயை

46. ஒலிக்கும் இரத்தினப் பரல்கள் கொண்ட சிலம்புகளால் விளக்கமுறும் அழகிய பாதங்களை யுடையவள்.

47. ஹம்ஸம் போன்ற மெதுவான நடை யுடையவள்.

48. பேரழகின் பொக்கிஷமானவள். *(ஒ. த்வதீயம் ஸௌந்தர்யம்—ஸௌ. ல. 12.)*

49. (ஆடை, ஆபரணம், உருவம்) எல்லாவற்றிலும் சிகப்பு வர்ணமானவள். *(ஒ. அராலா கேசேஷு—ஸௌ. ல. 93.)*

50. குறைவற்ற அழகு வாய்ந்த அங்கங்களையுடையவள்.

51. ஸர்வாபரணபூஷிதை. *(இதுவரை தேவியின் அவதாரமும் கேசம் முதல் பாதம் வரை ஸ்தூலரூபவர்ணனையும்).*

52. (உலகைப் படைக்க இச்சைகொண்ட சிவன் காமேசுவரன்.) காமேசுவரனான சிவனுடைய துடைமேல் அமர்ந்தவள்.

53. சிவவடிவானவள். *(ஒ. 'யதா சிவஸ்-ததா தேவீ யதா தேவீ ததா சிவ: । தஸ்மா-தபேத-புத்த்யைவ சிவேதி கதயந்த்-யுமாம்' ॥ (லிங்கபுராணம்)*

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

54. ஸ்வாதீன-வல்லபாயை
55. ஸுமேரு-மத்ய-ச்ருங்கஸ்தாயை
56. ஸ்ரீமந்நகர-நாயிகாயை
57. சிந்தாமணிக்ருஹாந்தஸ்தாயை
58. பஞ்ச-ப்ரஹ்மாஸன-ஸ்திதாயை
59. மஹாபத்மாடவீ-ஸம்ஸ்தாயை

---

54. தன்வயப்பட்ட பர்த்தாவையுடைவள். (ஒ. சிவ: சக்த்யா யுக்தோ யதி பவதி சக்த: ப்ரபவிதும்.—. ஸௌ.ல. 1)

55. (மேருமலையின் மூன்று சிகரங்களில் மும்மூர்த்திகள் வசிக்கின்றனர்.) மேருவின் நடுவிலுள்ள (நாலாவது) சிகரத்தில் இருப்பவள்.

56. ஸ்ரீநகரத்தின் நாயகி. (ஒ. யோ வை தாம் ப்ரஹ்மணோ வேத அம்ருதேநாவ்ருதாம் புரீம். —ஆருணம் 115.)

57. சிந்தாமணி கிருகத்திலிருப்பவள். ('ஸர்வேஷாம் சிந்தித அர்த்த-ப்ரத மந்த்ராணாம் நிர்மாணஸ்தானம்.' சிந்தித்த பொருளை எல்லோருக்கும் அருளும் மந்திரங்களிள் உறைவிடம்.)

58. (பிரம்மா - விஷ்ணு - ருத்ரன் - ஈசானன் - ஸதாசிவன் என்ற) பஞ்சப் பிரம்மத்தை ஆஸனமாக உடையவள். (ஒ. கதாஸ்தே மஞ்சத்வம்—ஸௌ. ல. 92.)

59. தாமரைக்காட்டில் உறைபவள். (அல்லது மஹா பத்மம் சிறந்த ஜாதி யானை. அத்தகைய யானைகள் செறிந்த (அடவீ) காடு திருவானைக்கா; அங்கு உறை பவள்; அகிலாண்டேசுவரீ, தண்டினீ என்ற மஹா வாராஹியின் ஸ்வரூபம்.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

60. கதம்பவந-வாஸின்யை
61. ஸுதா-ஸாகர-மத்யஸ்தாயை
62. காமாக்ஷ்யை
63. காமதாயின்யை
64. தேவர்ஷி-கண-ஸங்காத-ஸ்தூயமானாத்ம வைபவாயை
65. பண்டாஸுர-வதோத்யுக்த-சக்தி-ஸேனா-ஸமன்விதாயை

---

60. கதம்பவனத்தில் வசிப்பவள். (சிந்தாமணிக்கிருகத்தைச் சுற்றி மணிமண்டபம்; அதைச் சுற்றிக் கதம்ப வனம். கதம்பவனம் என்று மதுரைக்கும் பெயர். அங்கு மீனாக்ஷியாக உறைபவள் மந்த்ரீணீ என்ற மஹா சியாமளா.)

61. அமிருதக்கடலின் நடுவிலுள்ளவள். (ஒ. 'ஸுதா ஸிந்தோர் மத்யே'—ஸௌ. ல. 8. ஸுதாஸாகரம் என்று காஞ்சிக்கும் பெயர். அங்கு ஏகாம்ரநாதரும் வரதராஜரும் தன்னைச் சுற்றி பவனிவரும் வகையில் காமாக்ஷியாய் உறைபவள்.)

62. கடாக்ஷத்தால் காமங்களைப் பூர்த்திசெய்பவள். (பராஹந்தா ரூபிணியான தண்டினியும், புத்திரூபிணியான மந்த்ரிணியும் ஆத்மஸ்வரூபிணியான மஹாத்ரிபுரஸுந்தரியும் இந்நாமங்களால் குறிக்கப்படுகின்றனர்.)

63. விரும்பியதைத் தருபவள். (ஒ. த்வதன்ய:—ஸௌ. ல. 5.)

64. (இதுவரை ஸ்ரீநகரவர்ணனை. இனி பண்டாசுரவதம் கூறப்படும்.) தேவரிஷிகணங்களால் துதிக்கப்படும் ஆத்மவைபவம் உடையவள்.

65. பண்டாசுர வதத்திற்கு ஆயத்தமாயிருக்கும் சக்தி ஸேனையால் சூழப்பெற்றவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

66. ஸம்பத்கரீ-ஸமாரூட-ஸிந்துர-வ்ரஜ-ஸேவிதாயை
67. அச்வாரூடாதிஷ்டிதாச்வ-கோடி-கோடிபி-
ராவ்ருதாயை
68. சக்ரராஜ-ரதாரூட-ஸர்வாயுத-பரிஷ்க்ருதாயை
69. கேயசக்ர-ரதாரூட-மந்த்ரிணீ-பரிஸேவிதாயை
70. கிரிசக்ர-ரதாரூட-தண்டநாதா-புரஸ்க்ருதாயை
71. ஜ்வாலாமாலினிகாக்ஷிப்த-வஹ்நிப்ராகார-மத்யகாயை

---

66. (அங்குசத்திலிருந்து தோன்றிய) 'ஸம்பத்கரீ' சக்தியின் யானைப் படையால் சூழப்பெற்றவள். (யானைப் படை சப்தாதி விஷயக் கூட்டம்.)

67. (பாசத்திலிருந்து தோன்றிய) 'அச்வாரூடா' குதிரைப் படையால் சூழப்பெற்றவள். (குதிரைப்படை இந்திரியங்கள். ஒ. 'இந்த்ரியாணி ஹயாநாஹு:— கட. உப. 3.4.)

68. ஒன்பது தட்டுள்ள ஸ்ரீசக்ரமாகிய தேரின்மேல் எல்லா ஆயுதங்களும் புடைசூழ விளங்குபவள். (ஆத்மஞான ஸாதனங்களே ஆயுதங்கள்.)

69. (கரும்பு வில்லினின்று தோன்றிய) கேயசக்ர மென்னும் (ஏழுதட்டுத்) தேரில் வீற்றிருக்கும் (ஸங்கீத தேவதை யான) மந்த்ரிணீ சக்தியால் சேவிக்கப்பட்டவள்.

70. (பஞ்சபாணத்திலிருந்து தோன்றிய) கிரிசக்ரமெனும் (ஐந்து தட்டுத்) தேரில் வீற்றிருக்கும் 'தண்டநாதா' அல்லது 'வாராஹி' யால் வழி காட்டப்பட்டவள்.

71. (திதி தேவதைகளில் பதினான்காமவளான) ஜ்வாலா மாலினீ சக்தியால் அமைக்கப்பட்ட அக்கினிக் கோட்டை நடுவிலிருப்பவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

72. பண்டஸைன்ய-வதோத்யுக்த-சக்திவிக்ரம-ஹர்ஷிதாயை
73. நித்யா-பராக்ரமாடோப-நிரீக்ஷண-ஸமுத்ஸுகாயை
74. பண்டபுத்ர-வதோத்யுக்த-பாலா-விக்ரம-நந்திதாயை
75. மந்த்ரிண்யம்பா-விரசித-விஷங்கவத-தோஷிதாயை
76. விசுக்ர-ப்ராணஹரண-வாராஹீ-வீர்ய நந்திதாயை
77. காமேச்வர-முகாலோக-கல்பித-ஸ்ரீகணேச்வராயை

---

72. பண்டாசுரனது சேனைகளை அழிப்பதில் பராக்கிரமம் காட்டிய சக்திகளிடம் ஸந்தோஷித்தவள். (பண்டா சுரன் அகங்காரம் மிகுந்த ஜீவன்.)

73. நித்யா தேவதைகளின் பராக்கிரமத்தைப் பார்ப்பதில் உத்ஸாகமுள்ளவள். (அனாதி ஸித்தமான ஆத்ம சக்தி களே நித்யா தேவதைகள்.)

74. (தனது குழந்தையான) பாலாதேவி பண்டபுத்திரர் களை அழிப்பதில் காட்டிய பராக்கிரமத்தைக் கண்டு மகிழ்ந்தவள். (பண்டபுத்திரர்கள் ஆணவம் முதலிய மலங்கள்.)

75. மந்த்ரிணீதேவி முடித்த விஷங்கவதத்தால் ஸந்தோஷ மடைந்தவள். (விஷய ஆசையே விஷங்கன். ஓ. 'விருத்த: ஸங்கோ விஷங்க:')

76. விசுக்ரனைக் கொன்ற வாராஹியின் வீரியத்தை மெச்சு பவள். (பண்டாசுரனுடைய சகோதரர்கள் விஷங்க னும் விசுக்ரனும். விசுக்ரன் மக்களையெல்லாம் அறி வாகிய வீரியத்தை இழக்கச் செய்யும் அஜ்ஞான வடிவினன்.)

77. காமேசுவரனது முக தரிசனத்தால் கணேசனைப் பெற்றவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

78. மஹாகணேச-நிர்ப்பின்ன-விக்னயந்த்ர-
ப்ரஹர்ஷிதாயை
79. பண்டாஸுரேந்த்ர-நிர்முக்த-சஸ்த்ர-ப்ரத்யஸ்த்ர-
வர்ஷிண்யை
80. கராங்குலி-நகோத்பன்ன நாராயண-தசாக்ருத்யை
81. மஹா-பாசுபதாஸ்த்ராக்னி-நிர்தக்தாஸுரஸைனிகாயை
82. காமேச்வராஸ்த்ர-நிர்தக்த-ஸபண்டாஸுர-
சூன்யகாயை
83. ப்ரஹ்மோபேந்த்ர-மஹேந்த்ராதி-தேவஸம்ஸ்துத-
வைபவாயை

---

78. (விசுக்ரன் நாட்டிய) விக்ன யந்திரத்தைப் பொடி யாக்கிய கணேசரைக் கண்டு மகிழ்ந்தவள்.

79. பண்டாசுரன் விட்ட பாணங்களுக்குப் பிரதியான பாணங்களைப் பொழிந்தவள்.

80. கைவிரல் நக நுனிகளால் நாராயணனது தசாவ தாரங்களைத் தோற்றுவித்தவள். (பண்டன் ஸர்வா ஸுர அஸ்திரம் விட்டபோது ஹிரண்யன், ராவணன், சிசுபாலன் முதலிய அசுர வடிவங்கள் தோன்றின. அவற்றை வராஹம் முதலிய விஷ்ணு மூர்த்திகளைத் தோற்றுவித்து அழித்தாள் தேவி.)

81. மஹா பாசுபத அஸ்திரத்தின் தீயால் அசுரப் படை களைப் பொசுக்கியவள்.

82. காமேசுவராஸ்திரத்தால் பண்டாசுரனையும் சூன்யகம் எனும் அவன் நகரத்தையும் எரித்தவள். (காமேசுவர அஸ்திரம் சிதக்கினி.)

83. பிரம்மா விஷ்ணு இந்திரன் முதலிய தேவர்களால் துதிக்கப்பட்டவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

84. ஹரநேத்ராக்னி-ஸந்தக்த-காமஸஞ்ஜீவ-னௌஷத்யை
85. ஸ்ரீமத்வாக்பவ-கூடைக-ஸ்வரூப-முக-பங்கஜாயை
86. கண்டாத:-கடிபர்யந்த-மத்ய-கூட-ஸ்வரூபிண்யை
87. சக்தி-கூடைகதாபன்ன-கட்யதோபாக-தாரிண்யை
88. மூலமந்த்ராத்மிகாயை
89. மூலகூடத்ரய-கலேபராயை

---

84. சிவனது நெற்றிக்கண் தீயால் எரிக்கப்பட்ட மன் மதனைப் பிழைப்பூட்டிய ஸஞ்ஜீவினி மருந்து. (விஷயகாமம் எரிந்தபின் தான் ஆத்மகாமம் பிறக்கும்.)

85. (இனி தேவியின் ஸூக்ஷ்மமான மந்திர ரூபம் வர்ணிக்கப்படும்). ஸ்ரீமத் வாக்பவ கூடமே தேவியின் திருமுகத் தாமரை. (பஞ்ச தசாக்ஷரீ மந்திரத்தில் மூன்று பாகம்; முதல் ஐந்து அக்ஷரங்கள் சேர்ந்து வாக்பவ கூடம், ஞானசக்தி; நடுவிலுள்ள ஆறு அக்ஷரங்கள் மத்ய கூடம் அல்லது காமராஜகூடம், இச்சாசக்தி; இறுதியிலுள்ள நாலு அக்ஷரங்கள் சக்தி கூடம், க்ரியாசக்தி.)

86. மத்திய கூடமே கழுத்திற்குக் கீழ் இடுப்பு வரை உள்ள வடிவம்.

87. சக்தி கூடமே இடுப்பிற்குக் கீழுள்ள பாகமாகியவள்.

88. மூல மந்திரத்தின் உட்பொருளே தானாகி நிற்பவள் (காரணம்).

89. மூல மந்திரத்தின் முக்கூடங்களின் பொருளே தனது காரண வடிவின் மூன்று கூறுகளாக உடையவள். (ஊர்த்வ பிந்து ஒன்று; அதன்கீழ் இரட்டை பிந்து; அதற்குங் கீழ் ஒரு பிந்து; இவை ஈசுவர, ஜகத், ஜீவர் களை முறையே குறிப்பன. மூன்றிற்கும் அதிஷ் டானம் சுத்த சைதன்யம். இம்மூன்றுமே மந்திரத்தின்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

90. குலாம்ருதைக-ரஸிகாயை
91. குலஸங்கேத-பாலின்யை
92. குலாங்கனாயை

முக்கூடங்களாயும் ஸ்தூல ரூபத்தின் அவயங்களாயும் பரிணமித்தன என்பதும் காமகலா ரஹஸ்யம். இங்ஙனம் பரவெளியிலே கூறப்பட்ட 'பிரம்மாண்ட தத்துவம்' இனிப் 'பிண்டாண்டத்தில்' ஒவ்வொரு ஜீவனுடைய (பிண்டமாகிய) உடலிலும் காணக் கிடப்பது விளக்கப்படும்.

90. (குண்டலினீ வர்ணனை.) குலாமிருதத்தில் இரமிப்பவள். (பார்ப்பவன், பார்வை, பார்க்கப்படுவது என்ற த்ரிபுடி குலம்; இது உள்ள நிலையிலுள்ள ஆனந்தம் குலாம்ருதம். குலம் எனும் பிருதிவீ தத்துவம் லயிக்குமிடமாகிய ஆதார சக்ரமும், அதனுடைய ஸம்பந்தம் பெற்ற ஸுஷும்னா மார்க்கமும், ஸஹஸ்ராரத்திலிருந்து பெருகும் அம்ருதமும் குலாம்ருதம். அதைப் பருகுவதில் தனி இன்பத்தைப் பெறுபவள்.)

91. குல ஸம்பந்தமான ரகசியங்களைக் காப்பவள். (குண்டலினீ யோகரகசியம், வேதரகசியம், பூஜா ரகசியம், சக்ர ரகசியம், மந்திர ரகசியம் முதலியவைகளைத் தீயோர் கண் படாமல் காப்பவள்.)

92. குலஸ்திரீ போன்றவள், (மற்றவித்தைகள் பகிரங்கமாய்ப் பலரிடம் பழகுபவர்களைப் போன்றவை; பரதேவதையின் வடிவான ஸ்ரீவித்தையோ தன் குலத்தைச் சேர்ந்தவருடன் மட்டுமே பழகும் குலஸ்த்ரீ போன்றது என்று குலார்ணவ தந்திரம் கூறுகிறது. ஸஹஸ்ராரத்திலுள்ள பரமசிவத்தை மட்டுமே நோக்கிச் செல்லும் மஹா பதிவிரதை. ஒ. ஸஹஸ்ராரே பத்மே ஸஹ ரஹஸி பத்யா விஹரஸே—ஸௌ. ல. 9.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

93. குலாந்தஸ்தாயை
94. கௌலின்யை
95. குலயோகின்யை
96. அகுலாயை
97. ஸமயாந்தஸ்தாயை
98. ஸமயாசார-தத்பராயை

93. குலம் என்னும் த்ரிபுடியினுள் (ஜ்ஞேயம்) அறியத் தக்கதாக இருப்பவள், (ஒவ்வொரு போதத்திலும் மறைந்திருப்பவள். ஒ. ப்ரதிபோதவிதிதம் (கேன. உப. 2.4.) ஒவ்வொரு இடத்தினுள்ளும் பூஜிக்கத் தகுந்தவள். ஒ. 'பூஜனீயா ஜனைர்-தேவீ ஸ்தானே ஸ்தானே புரே புரே। க்ருஹேக்ருஹே சக்தி-பரைர்-க்ராமே க்ராமே வனே வனே' —பவிஷ்யத் புராணம். அத: ஸஹஸ்ராரம் குலம்; அதன் க்ர்ணிகையிலிருக்கும் குலதேவீ.)

94. கௌலினீ வடிவினள். (குலம் என்றால் சக்தி; அகுலம் என்றால் சிவன், இரண்டும் சேர்ந்த வடிவம் கௌலினீ.)

95. குலத்துடன் ஸம்பந்தமுடையவள். (உடலிலுள்ள ஷட்சக்ரமும் குலம்.)

96. குலத்துக்கப்பாலிருப்பவள், (ஷட் சக்ரங்களுக்கு மேலுள்ளது அகுல ஸஹஸ்ராரம், அதில் இருப்பவள். 'அதச்-சோர்த்வம் ஸு॒ஷு॒ம்னாயாம் ஸஹஸ்ர-தள-ஸம்யுதம்', கீழுள்ளது குல ஸஹஸ்ராரம் எனப்படும்.)

97. (இருதயாகாசத்தில் சிவனையும் சக்தியையும் ஸமரஸமாக உபாசிப்பது 'ஸமய' மதம் எனப்படும். இம்மதத்தில் புறப்பூஜை இல்லை). ஸமயத்தினுள் விளங்குபவள். (அதிஷ்டானம், அனுஷ்டானம், அவஸ்தானம், நாமம், ரூபம் இவைகளில் சிவ சக்திகளுக்கு ஸாம்யம் ஐந்து வகை.)

98. (மூலாதாரத்திலிருந்து படிப்படியாக தேவியை ஆறு ஆதாரங்களிலும் மானஸிக பூஜை செய்வது ஸமயாசாரம்). ஸமயாசாரத்தில் பிரியமுள்ளவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

99. மூலாதாரைக-நிலயாயை
100. ப்ரஹ்மக்ரந்தி-விபேதின்யை
101. மணிபூராந்த-ருதிதாயை
102. விஷ்ணுக்ரந்தி-விபேதின்யை
103. ஆஜ்ஞாசக்ராந்த-ராலஸ்தாயை

99. மூலாதாரத்தில் முக்கியமாய் உறைபவள். (மூலாதாரத்தின் வடிவம் நாலிதழ்க்கமலம். அதில் நடுவில் குல குண்டம் எனுமிடத்தை வாயால் கௌவிக்கொண்டு ஸாதாரணமாய்க் குண்டலினீ சக்தி உறங்குகிறாள்.)

100. (மூலாதாரமும் ஸ்வாதிஷ்டானமும் ப்ருதிவி-அப்பு மயம், அக்னி கண்டம், பிரம்ம கிரந்தி; மணிபூரகமும் அநாஹதமும் தேஜஸ்-வாயுமயம், சூரியகண்டம், விஷ்ணுகிரந்தி; விசுத்தியும் ஆஜ்ஞையும், ஆகாச-மனோமயம், ஸோமகண்டம், ருத்திர கிரந்தி; அக்கினி கண்டத்தில் விஷ்ணுக்கிரந்தியின் பிளவும், ஸோம கண்டத்தைக் கடப்பதில் பிரம்மக் கிரந்தியின் பிளவும், சூரிய கண்டத்தில் ருத்திரக்கிரந்தியின் பிளவும் ஏற்படுகின்றன. கிரந்தி என்பது நாடிகளின் முடிச்சையும் நாடியினுள் பாயும் எண்ணங்களில் பூர்வ வாஸனையால் ஏற்படும் சிக்கல்களையும் குறிக்கும்.) பிரம்ம முடிச்சைப் பிளப்பவள் (ஸ்ருஷ்டி வாஸனையைக் கடத்துவிப்பவள்; பிரம்ம ஸ்வரூபியாக தேவி விளங்கும் ஸ்தானம் ஸ்வாதிஷ்டானம்).

101. மணிபூரக சக்ரத்தில் (ஸர்வாபரண பூஷிதையாக) காட்சியளிப்பவள். (ஒ. 'தடித்வந்தம் சக்த்யா' ஸௌ. ல. 40.)

102. விஷ்ணு முடிச்சைப் பிளப்பவள் (ஸ்திதி வாஸனையைக் கடத்துவிப்பவள். விஷ்ணுமூர்த்தியாக தேவீ விளங்கும் ஸ்தானம் மணிபூரகம்).

103. புருவமத்தியில் ஆஜ்ஞா சக்ரத்தின் நடுவிலுள்ளவள். (ஒ. தவாஜ்ஞா-சக்ரஸ்தம்—ஸௌ. ல. 36.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

104. ருத்ரக்ரந்தி-
விபேதின்யை
105. ஸஹஸ்ராராம்புஜா-
ரூடாயை
106. ஸுதாஸாராபி-
வர்ஷிண்யை
107. தடில்லதா-
ஸமருச்யை
108. ஷட்சக்ரோபரி-
ஸம்ஸ்திதாயை
109. மஹாஸக்த்யை

---

104. ருத்திரக்கிரந்தியைப் பிளப்பவள். (ஸம்ஹார வாஸனையைக் கடத்துவிப்பவள். ருத்ர மூர்த்தியாக, குரு மூர்த்தியாக, தேவி விளங்கும் ஸ்தானம் ஆஜ்ஞா சக்ரம். ருத்திரக் கிரந்தியையுங் கடந்தபின் பரமசிவத்துடன் இரண்டறக் கலக்கும் உத்தம பதமான ஸஹஸ்ராரம் உளது. ஜீவன் இங்ஙனம் படிப்படியாக ஏறுவது ஆரோஹணக்கிரமம். ஸஹஸ்ராரத்திலிருந்து படிப்படியாக இறங்கி வருவது அவரோஹணக் கிரமம்.)

105. ஸஹஸ்ரார சக்கரத்தில் ஏறியிருப்பவள்.

106. 'ஸுதா' எனும் அமிருதத்தை (ஸஹஸ்ராரத்திலிருந்து எல்லா நாடிகளிலும்) பெருகும்படி செய்பவள். (ஒ. 'அம்ருதஸ்ய-தாராபஹுதா தோஹமானம் சரணம் நோ லோகே ஸுதிதான் ததாது'.)

107. மின்னல் கொடிபோல் பிரகாசிப்பவள், (ஒ. வித்யுல் லேகேவ பாஸ்வரா—நாராயண ஸூக்தம்.)

108. ஆறு சக்கரங்களுக்கும் மேலிருப்பவள்.

109. (பக்தர்கள் செய்யும் ஆராதனையில்) மிகுந்த பிரியமுள்ளவள். (ஆராதனை, பாஹ்ய பூஜை, மானஸ பூஜை என இருவகை. ஒ. 'மஹீம் மூலாதாரே'—ஸௌ. ல. 9.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

110. குண்டலின்யை
111. பிஸதந்து-தநீயஸ்யை
112. பவான்யை
113. பாவனாகம்யாயை
114. பவாரண்ய-குடாரிகாயை
115. பத்ரப்ரியாயை

110. குண்டலினீ ரூபமாக உள்ளவள். (மூலாதாரத்தில் மூன்றரைச் சுற்றுக் குண்டலமிட்டுப் பாம்புபோல் மூச்சு விட்டுக் கொண்டிருப்பவள். இந்த மூச்சுத்தான் ஜீவசக்தியான பிராணன். இதை எழுப்பத்தான் சித்தர்கள் 'ஆடு பாம்பே' எனப் பாடுகின்றனர். ஒ. 'உத்திஷ்டத மா ஸ்வப்த'—ஆருணம் 115.)

111. தாமரை நூல் போல் மெல்லியவள். (ஒ. 'நீவார சூகவத்தன்வீ', நாராயண ஸூக்தம். 90 முதல் இதுவரை குண்டலினி வர்ணனை. மூலாதாரத்தில் குண்டலினிக்குக் குமாரி எனவும், அனாஹதத்திற்கு மேல் தருணீ எனவும், ஸஹஸ்ராரத்தில் ஸதாசிவ பதிவிரதை எனவும் பெயர்.)

112. (இனி பக்தானுக்ரஹவர்ணனை.) 'பவன்' என்ற பரம சிவனுடைய பத்னி. ('பவ:' என்பது ஸம்ஸார ஸாகரம். அதற்குப் பிராணனைக் கொடுப்பவள். ஒ.—பவனாத் பாவனாச்சைவ பூதானாம் ஸ பவ: ஸ்ம்ருத: ஒ. 'பவானி த்வம் தாஸே' —ஸௌ. ல. 22.)

113. பாவனையால் அடையத்தக்கவள். (ஒ. 'ஜ்ஞான மர்க்யம் ஜ்ஞேயம் ஹவிர் ஜ்ஞாதா ஹோதா, ஜ்ஞாத்ரு-ஜ்ஞான-ஜ்ஞேயானா-மபேதபாவனம் ஸ்ரீசக்ரபூஜனம்'—பாவனோபநிஷத். 10.)

114. ஸம்ஸாரமாகிய காட்டையழிக்கும் கோடரி போன்றவள்.

115. (பக்தர்களுக்கு) மங்களத்தைச் செய்வதில் பிரியமுள்ளவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

116. பத்ரமூர்த்யை
117. பக்த-ஸௌபாக்ய-தாயின்யை
118. பக்தி-ப்ரியாயை
119. பக்தி-கம்யாயை
120. பக்தி-வச்யாயை
121. பயாபஹாயை
122. சாம்பவ்யை
123. சாரதாராத்யாயை

116. மங்களமே வடிவானவள். (ஒ. 'மங்கலானாஞ்ச மங்கலம்.)

117. பக்தர்களுக்கு ஸௌபாக்கியத்தை அளிப்பவள். (பக: ஸ்ரீ-காம-மாஹாத்ம்ய-வீர்ய-யத்ன-அர்க்க-கீர்த்திஷு.)

118. பக்தியில் பிரியமுள்ளவள். (ஒ. ச்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ: ஸ்மரணம் பாதஸேவனம் । அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் ஸக்யம் ஆத்மநிவேதனம் ॥ (பாகவதம்) ஒ. அங்கோலம் நிஜபீஜ-ஸந்ததி:—சிவானந்தலஹரீ 61.)

119. பக்தியால் அடையத்தக்கவள். (ஒ. பக்த்யா த்வனன்யயா லப்ய:—கீ. 11.54.)

120. பக்திக்குக் கட்டுப்பட்டவள்.

121. பயத்தைப் போக்குபவள். (ஒ. ஆனந்தம் ப்ரஹ்மணோ வித்வான் ந பிபேதி குதச்சன । தை. உப. 2.9.)

122. சம்புவின் பத்னி. (நவ கன்னிகைகளில் எட்டு வயதுள்ளவள் சாம்பவீ. அல்லது யோகிகள் கூறும் சாம்பவீ முத்திரையாக இருப்பவள். ஒ. அந்தர்-லக்ஷ்யம் பஹிர்-த்ருஷ்டிர்-நிமேஷோன்மேஷ-வர்ஜிதா । ஏஷா ஸா சாம்பவீ முத்ரா ஸர்வ தந்த்ரேஷு கோபிதா ॥ சாம்பவர்களுக்குத்தாய்.)

123. சரத்கால நவராத்திரியில் பூஜிக்கத்தக்கவள். (ஒ. சரத்காலே புரா யஸ்மாந்-நவம்யாம் போதிதா ஸுரை: । காளிகா புராணம்.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

124. சர்வாண்யை
125. சர்மதாயின்யை
126. சாங்கர்யை
127. ஸ்ரீகர்யை
128. ஸாத்வ்யை
129. சரச்சந்த்ர-நிபானனாயை
130. சாதோதர்யை
131. சாந்திமத்யை
132. நிராதாராயை
133. நிரஞ்ஜனாயை
134. நிர்லேபாயை
135. நிர்மலாயை
136. நித்யாயை

---

124. 'சர்வர்' என்ற சிவமூர்த்தியின் பத்னி.

125. சுகத்தைக் கொடுப்பவள்.

126. சங்கரர் பத்னி.

127. ஸ்ரீயைக் கொடுப்பவள். (ஸ்ரீ என்பது செல்வம், இன்பம், அழகு, மங்களம், காந்தி, காம்பீர்யம் முதலியவற்றைக் குறிக்கும்.)

128. பதிவிரதை. ('ஸதீ ஸாத்வீ பதிவ்ரதா'—அமரம்.)

129. சரத்கால சந்திரன் போன்ற முகமுள்ளவள்.

130. நுட்பமான வயிறுள்ளவள். (ஒ. 'மித்யா-த்ருஷ்டாந்த மத்யபாகம் தே-நவ ரத்ன மாலிகா ஸ்தோத்ரம்')

131. பொறுமையுள்ளவள்.

132. (இனி நிர்க்குணத் தியானம்— தான் எல்லாவற்றிற்கும் ஆதாரமாய்) தனக்கு ஆதாரம் வேண்டாதவள்.

133. (அஞ்ஜனமாவது மை அல்லது அவித்தை.) மாசற்றவள்.

134. பற்றில்லாதவள். (ஒ. ந மாம் கர்மாணி லிம்பந்தி —கீ. 4.14.)

135. அழுக்கற்றவள். (மும்மலமும் இல்லாதவள்.)

136. நித்தியமானவள். (மாறுதலற்றவள்.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

137. நிராகாராயை
138. நிராகுலாயை
139. நிர்குணாயை
140. நிஷ்கலாயை
141. சாந்தாயை
142. நிஷ்காமாயை
143. நிருபப்லவாயை
144. நித்யமுக்தாயை
145. நிர்விகாராயை
146. நிஷ்ப்ரபஞ்சாயை
147. நிராச்ரயாயை
148. நித்ய-சுத்தாயை
149. நித்ய-புத்தாயை
150. நிரவத்யாயை

137. உருவில்லாதவள். (ஒ. ந தஸ்ய ப்ரதிமா அஸ்தி—தை. ஆ.)

138. கலக்கமற்றவள். (கலக்கமுடையவரால் அடைய முடியாதவள்.)

139. முக்குணங்களுக்கப்பாற்பட்டவள்.

140. கூறுபடாதவள். (அகண்ட ரூபிணீ.)

141. சாந்தமூர்த்தி.

142. விருப்பமில்லாதவள். (எல்லா விருப்பங்களும் பூர்த்தியானவள்.)

143. அழிவில்லாதவள்.

144. என்றும் முக்திஸ்வரூபிணி.

145. மாறுதலில்லாதவள்.

146. பிரபஞ்சத்திற்குக் கட்டுப்படாதவள் (ஒ. ப்ரபஞ் சோபசமம் சாந்தம் சிவம்—மா. உப.)

147. ஆசிரயம் இல்லாதவள்.

148. என்றும் பரிசுத்தமானவள். (ஒ. 'அஸ்பர்சச்ச மஹான் சுசி:)

149. என்றும் அறிவு மயமானவள்.

150. குற்றமில்லாதவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

151. நிரந்தராயை
152. நிஷ்காரணாயை
153. நிஷ்கலங்காயை
154. நிருபாதயே
155. நிரீச்வராயை
156. நீராகாயை
157. ராகமதன்யை
158. நிர்மதாயை
159. மதநாசின்யை
160. நிச்சிந்தாயை
161. நிரஹங்காராயை
162. நிர்மோஹாயை
163. மோஹ-நாசின்யை

---

151. இடைவெளி இல்லாதவள். (ஒ. உதர-மந்தரங்-குருதே । அத தஸ்ய பயம் பவதி— தை. உப. 2.7.)

152. காரணமில்லாதவள்.

153. களங்கமில்லாதவள்.

154. உபாதியில்லாதவள்.

155. (தானே அனைத்தையும் ஆள்பவளாய்த்) தன்னை யடக்கி யாள்வாரில்லாதவள்.

156. ஆசையற்றவள். (ஆசையென்ற பாசத்தை ஆயுதமாகக் கூறியது ஸகுண வடிவத்திற்கு; இப்போது கூறுவது நிர்க்குணத் தியானமும் அதன் பலனும்.)

157. ஆசையைப் போக்குபவள். (பக்தர்களுக்கு வைராக்கி யத்தை வளர்ப்பதால்.)

158. மதமில்லாதவள்.

159. மதத்தை நாசம் செய்பவள்.

160. கவலையில்லாதவள். (ஒ. 'சிதா தஹதி நிர்ஜீவம் சிந்தா தஹதி ஜீவிதம்')

161. அஹங்கார மில்லாதவள்.

162. மதிமயக்க மில்லாதவள். (ஒ. தத்ர கோ மோஹ: க: சோக ஏகத்வ-மனு-பச்யத: ஈச.உப. 7.)

163. மதிமயக்கத்தைப் போக்குபவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

164. நிர்மமாயை
165. மமதாஹந்த்ர்யை
166. நிஷ்பாபாயை
167. பாபநாசின்யை
168. நிஷ்க்ரோதாயை
169. க்ரோத-சமன்யை
170. நிர்-லோபாயை
171. லோபநாசின்யை
172. நிஸ்ஸம்சயாயை
173. ஸம்சயக்ன்யை
174. நிர்ப்பவாயை
175. பவ-நாசின்யை

164. மமதையில்லாதவள். (அ. ஸ்வாபின்ன-இதர அபாவாத்)

165. மமதையைப் போக்குபவள்.

166. பாவமற்றவள்.

167. பாவத்தைப் போக்குபவள். (ஒ. 'தத்யதேஷிகாதூலமக்னௌ ப்ரோதம் ப்ரதூயேத ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மான: ப்ரதூயந்தே' —சா. உப. 5.24.3)

168. கோபமில்லாதவள். (ஒ. ந மே த்வேஷ்யோஸ்தி— கீ. 9. 29.)

169. கோபத்தை நாசம் செய்பவள். (கோபத்துடன் செய்யப்படும் தானம் யஜ்ஞும் தவம் எல்லாம் வீண்.)

170. லோபமில்லாதவள்.

171. லோபத்தைப் போக்குபவள். (ஒ. த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாசன-மாத்மன; । காம:க்ரோதஸ்-ததா லோபஸ்-தஸ்மா-தேதத்-த்ரயம் த்யஜேத் ॥— கீ. 16.21.)

172. ஸந்தேகமற்றவள்.

173. ஸந்தேகத்தைப் போக்குபவள். (ஒ. 'சித்யந்தே ஸர்வ ஸம்சயா:' —மு. உப. 2.2.9.)

174. பிறப்பிறப்பு இல்லாதவள்.

175. பிறவி நோயை அகற்றுபவள். (ஒ. தேஷாமஹம் ஸமுத்தர்த்தா ம்ருத்யுஸம்ஸார-ஸாகராத்—கீ. 12.7.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

176. நிர்விகல்பாயை
177. நிராபாதாயை
178. நிர்ப்பேதாயை
179. பேத-நாசின்யை
180. நிர்-நாசாயை
181. ம்ருத்யு-மதன்யை
182. நிஷ்க்ரியாயை
183. நிஷ்பரிக்ரஹாயை
184. நிஸ்துலாயை
185. நீலசிகுராயை
186. நிரபாயாயை

---

176. விகல்பமில்லாதவள். (விருப்பத்துக்கு மாறானது விகல்பம்.)

177. எதனாலும் பாதிக்கப்படாதவள். (ஒ. ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம் இன்பமே எந்நாளுந் துன்பமில்லை—அப்பர் தேவாரம்.)

178. வேற்றுமை யில்லாதவள்.

179. வேற்றுமையைப் போக்குபவள். (ஒ. 'பேதக்ருத்-பாப க்ருத்பவேத்'—லலிதா ஸஹஸ்ரநாமம் பலச்ருதி, 56.)

180. நாசமற்றவள்.

181. (பக்தருக்கு) மரண பயத்தைப் போக்குபவள். (ஒ. மார்கண்டேயர்.)

182. கர்மம் இல்லாதவள். (ஒ. 'ஆத்மன்யேவ ச ஸந்துஷ்டஸ் தஸ்ய கார்யம் ந வித்யதே'—கீ. 3. 17.)

183. பரிக்கிரஹம் இல்லாதவள். (பிறருடைய உதவியை ஏலாதவள்).

184. ஈடற்றவள்.

185. கரிய கூந்தலுடையவள்.

186. நாசமடையாதவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

187. நிரத்யயாயை
188. துர்லபாயை
189. துர்கமாயை
190. துர்காயை
191. து:க்கஹந்த்ர்யை
192. ஸுகப்ரதாயை
193. துஷ்டதூராயை
194. துராசார-சமன்யை
195. தோஷவர்ஜிதாயை
196. ஸர்வஜ்ஞாயை

187. (தான் ஏற்படுத்திய நியதியின்) வரம்பை மீறாதவள். (தனது ஆதிசக்தி, பராசக்தி என்ற இரண்டு வடிவங்களுள் ஸ்புரண ரூபிணியான ஆதிசக்தி வடிவத்தில் எப்பொழுதும் எத்தகைய திரிபும் அற்றவளாய் இருந்து கொண்டே தன்னுடைய பராசக்தி என்ற மாயாசக்தி ரூபத்தில் காரண கார்ய ஸம்பந்த ரூபமான நியதியின் வடிவாகவும் இருந்து கொண்டு தானும் அந்த வரம்பை மீற இயலாதவள் போல் இருப்பவள்.)

188. பக்தியில்லாதவர்க்கு எளிதில் அடைய முடியாதவள்.

189. நெருங்க முடியாதவள்.

190. துர்க்கை. (ஒன்பது வயது கன்னிகை.) ஒ. 'துர்க்கே, ஸ்ம்ருதா ஹரஸி பீதி-மசேஷஜந்தோ:'—தேவீ மாஹாத்மியம். *4.17.*)

191. துக்கத்தைத் துடைப்பவள். (ஒ. து:க்கஸம்யோக-வியோகம் யோக ஸம்ஜ்ஞிதம்—கீ. *6.23.*)

192. சுகத்தைத் தருபவள். (ஒ. ரஸம் ஹ்யேவாயம் லப்த்வானந்தீ பவதி—தை. உப. *2.7.*)

193. துஷ்டர்களுக்குத் தூரத்திலிருப்பவள்.

194. துராசாரங்களைப் போக்குபவள்.

195. தோஷமற்றவள்.

196. (இனி ஸகுண உபாஸனை.) எல்லாமறிந்தவள். (ஒ. ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித் —மு. உப. *1.1.9*)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai.

197. ஸாந்த்ர-கருணாயை
198. ஸமானாதிக-வர்ஜிதாயை
199. ஸர்வசக்தி-மய்யை
200. ஸர்வமங்கலாயை
201. ஸத்கதி-ப்ரதாயை
202. ஸர்வேச்வர்யை
203. ஸர்வ-மய்யை
204. ஸர்வ-மந்த்ர-ஸ்வரூபிண்யை
205. ஸர்வ-யந்த்ராத்மிகாயை
206. ஸர்வ-தந்த்ர-ரூபாயை
207. மனோன்மன்யை

197. கருணை நிறைந்தவள்.

198. ஒப்புயர்வற்றவள். (ஒ. ந த்வத் ஸமோஸ்த்யப்-யதிக: குதோऽன்ய:—கீ. 11.43.)

199. ஸர்வசக்தி மயமானவள்.

200. ஸர்வ மங்கள ரூபிணி. (ஒ. ஸர்வ மங்கல மாங்கல்யே சிவே ஸர்வார்த்தஸாதிகே । தேவீமாஹாத்மியம் 11.10.)

201. நல்ல கதியை அளிப்பவள். (ஒ. 'கதிஸ்த்வம் மதிஸ் த்வம் த்வமேகா பவானீ')

202. எல்லோருக்கும் ஈசுவரி.

203. எல்லா ரூபமாயு மிருப்பவள்.

204. எல்லா மந்திரங்களின் ஸ்வரூபமாகவும் இருப்பவள்.

205. எல்லா யந்திரங்களின் அதிதேவதையாகவும் இருப் பவள்.

206. எல்லா தந்திரங்களின் வடிவாயுமிருப்பவள். (தந்திரம் என்பது பூஜாமுறை. ஒ. யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம்.—கீ. 4.11.)

207. மனோன்மனீ ரூபமாக இருப்பவள். (ஒ. 'வாம தேவாய நமோ... மனோன்மனாயநம:' மனோன் மனனாகிய சிவனுடைய சக்தி. ஒ. 'மனச்ச ஸங்கல்ப-விகல்ப-சூன்யம், மனோன்மனீ.')

ல 12

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

208. மாஹேச்வர்யை
209. மஹாதேவ்யை
210. மஹாலக்ஷ்ம்யை
211. ம்ருடப்ரியாயை
212. மஹாரூபாயை
213. மஹாபூஜ்யாயை
214. மஹாபாதக-நாசின்யை
215. மஹாமாயாயை
216. மஹாஸத்வாயை
217. மஹாசக்த்யை
218. மஹாரத்யை
219. மஹாபோகாயை

---

208. மஹேசுவர பத்னீ (ஒ. 'நைர்குண்யேன மஹேச்வர'; லிங்க புராணம்.)

209. மஹாதேவ பத்னீ.

210. மஹாலக்ஷ்மி வடிவானவள். (ஒ. ஸர்வஸ்யாத்யா மஹாலக்ஷ்மீ: த்ரிகுணா ஸா வ்யவஸ்திதா—மார்க்கண்டேய புராணம்.)

211. 'ம்ருடன்' என்ற சிவனுக்குப் பிரியை. (ஒ. ஜனஸுகத க்ருதே ஸத்வோத்ரிக்தௌ ம்ருடாய நமோ நம:—சிவ மஹிம்ன ஸ்தவம்).

212. பெரிய உருவம் படைத்தவள். (ஒ. மம யோனிர்-மஹத்ப்ரஹ்ம—கீ. 14.3.)

213. மஹான்களால் பூஜிக்கத்தக்கவள்.

214. மஹா பாதகங்களை நாசஞ்செய்பவள்.

215. மஹா மாயா ரூபிணீ. (ஒ. ஜ்ஞானினாமபி சேதாம்ஸி தேவீ பகவதீ ஹி ஸா। பலா-தாக்ருஷ்ய மோஹாய மஹாமாயா ப்ரயச்சதி—தேவீமாஹாத்மியம் 1.55.)

216. சுத்த ஸத்வஸ்வரூபிணீ.

217. மிகுந்த ஸாமர்த்தியம் வாய்ந்தவள்.

218. சிறந்த ஆனந்தத்தை அளிப்பவள். (அ. மஹதீ விஷய-ரதிப்யோ ऽதிகா ரதி:)

219. உயர்ந்த போகத்தை யுடைவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

220. மஹைச்வர்யாயை
221. மஹாவீர்யாயை
222. மஹாபலாயை
223. மஹாபுத்த்யை
224. மஹாஸித்த்யை
225. மஹாயோகீச்வரேச்வர்யை
226. மஹாதந்த்ராயை
227. மஹாமந்த்ராயை
228. மஹாயந்த்ராயை
229. மஹாஸனாயை

220. சிறந்த ஐசுவரியத்தை உடையவள்.

221. வீரியத்தில் மிகுந்தவள். (ஓ. 'ஓஜோऽஸி ஸஹோऽஸி பலமஸி ப்ராஜோऽஸி'. அ. 'வீர்யம் சுக்ரே ப்ரபாவே ச தேஜ: ஸாமர்த்த்யயோரபி')

222. மிகுந்த பலம் வாய்ந்தவள்.

223. பேரறிவு படைத்தவள். (ஓ. 'யேனாச்ருதம் ச்ருதம் பவத்-யமதம் மத-மவிஜ்ஞாதம் விஜ்ஞாதமிதி'—சா. உப. 6.1:3.)

224. (அஷ்ட) மஹாசித்தி ரூபமானவள். (அணிமா மஹிமா சைவ கரிமா லகிமா ததா । ப்ராப்தி: ப்ராகாம்ய-மீசித்வம் வசித்வஞ் சாஷ்ட-பூதய:—அமரம்.)

225. யோகேசுவரர்களுக்கும் ஈசுவரி.

226. தலைசிறந்த தந்திரசாஸ்திரங்களையுடையவள். (ஸ்வதந்த்ராக்யம் தந்த்ரம். ஸ்ரீவித்யாக்யோ மந்த்ர:, ஸித்திவஜ்ராக்யஞ்ச யந்த்ரம், மஹத் ஸர்வோத்தமம் யஸ்ய: ॥ ஓ. சது: ஷஷ்ட்யா தந்த்ரை: —ஸௌ. ல. 31.)

227. தலைசிறந்த மந்திரங்களை யுடையவள். (பஞ்ச தசாக்ஷரீ முதலிய மஹாமந்திரங்கள்.)

228. தலைசிறந்த யந்திரங்களையுடையவள். (ஸ்ரீசக்ரம் முதலிய மஹா யந்திரங்கள்.)

229. தலைசிறந்த ஆஸனத்தை உடையவள். (மஹான்களின் உள்ளமும், தத்துவபீடங்களும், ஸிம்மமும் தேவியின் ஆஸனம்.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

230. மஹாயாகக்ரமாராத்யாயை
231. மஹாபைரவ-பூஜிதாயை
232. மஹேச்வர-மஹாகல்ப-மஹா-தாண்டவ-ஸாக்ஷிண்யை
233. மஹாகாமேச-மஹிஷ்யை
234. மஹாத்ரிபுரஸுந்தர்யை
235. சதுஷ்ஷஷ்ட்யுபசாராட்-யாயை
236. சதுஷ்ஷஷ்டி-கலாமய்யை
237. மஹா சது:ஷ்ஷஷ்டி கோடி யோகினீ-கண-ஸேவிதாயை

---

230. மஹாயாகமுறையில் ஆராதித்தற்குரியவள். (பாவனா யாகமும், தேவர்கள் சிதக்கினி குண்டத்தில் செய்த யாகமும் மஹா யாகங்கள்.)

231. மஹா பைரவரால் பூஜிக்கப்பட்டவள்.

232. மஹா கல்பத்தில் மஹேசுவரர் செய்யும் மஹா தாண்டவத்திற்குச் ஸாக்ஷியாயிருப்பவள். (ஆண்களின் நடனம் தாண்டவம்; பெண்களின் நடனம் லாஸ்யம். ஒ. தவாதாரே மூலே—ஸௌ. ல. 41.)

233. மஹா காமேசரின் பட்டமஹிஷீ.

234. மஹாத்ரிபுரஸுந்தரீ.

235. அறுபத்து நான்கு உபசாரங்களுடன் பூஜித்தற் குரியவள்.

236. அறுபத்து நான்கு கலை வடிவானவள்.

237. ('மஹா' என்பது ஒன்பதைக் குறிக்கும்.) அறுபத்து நான்கு கோடி யோகினீ கணங்களால் (நவாவரணத்தில் ஒவ்வொரு சக்கரத்திலும்) சேவிக்கப்பட்டவள். (மனத்தின் கண் மறைந்து கிடக்கும் ஆற்றல்கள் பல கோடிகள். அந்த ஆற்றல்கள் யாவும் ஸ்வாத்மானந்தத்திலேயே முடிவுகாண்கின்றன.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

238. மனுவித்யாயை
239. சந்த்ர-வித்யாயை
240. சந்த்ரமண்டல-மத்யகாயை
241. சாருரூபாயை
242. சாருஹாஸாயை
243. சாருசந்த்ர-கலாதராயை
244. சராசர-ஜகந்நாதாயை
245. சக்ர-ராஜ-நிகேதனாயை
246. பார்வத்யை
247. பத்மநயனாயை

---

238. மனுவினால் உபாசிக்கப்பட்ட ஸ்ரீவித்யாரூபிணீ.

239. சந்திரனால் உபாஸிக்கப்பட்ட 'ஸ்ரீவித்யாரூபிணீ. (மனுச்-சந்த்ர: குபேரச்ச லோபாமுத்ரா ச மன்மத: । அகஸ்தி-ரக்னி: ஸூர்யச்ச இந்தர: ஸ்கந்த: சிவஸ்-ததா । க்ரோத பட்டாரகோ தேவ்யா த்வாதசாமீ உபாஸகா: ॥ ஒ. 'மஹேச-மாதவ-விதாத்ரு-மன்மத-ஸ்கந்த நந்தி இந்த்ர - மனு -சந்த்ர-குபேர-அகஸ்த்ய-க்ரோதபட்டாரக வித்யாத்மிகே'—லலிதோபாக்யானம்.)

240. சந்திரமண்டலத்தின் நடுவிலுள்ளவள். (உள் சந்திர மண்டலமாகிய ஸஹஸ்ராரம் எப்போதும் பூரண கலையுடன் விளங்குவது.)

241. அழகிய ரூபமுள்ளவள்.

242. அழகிய புன்சிரிப்புள்ளவள்.

243. அழகிய சந்திரகலையைத் தரித்தவள்.

244. சராசரப்பிரபஞ்சத்தின் ஈசுவரி.

245. ஸ்ரீசக்கரத்தை வாசஸ்தானமாயுடையவள்.

246. பார்வதீ. (தாக்ஷாயணி தக்ஷயாகத்தில் உடலை விட்ட பின் பர்வத ராஜகுமாரியாகத் தோன்றினாள்.)

247. தாமரைக்கண்ணி.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

248. பத்மராக-ஸமப்ரபாயை
249. பஞ்சப்ரேதாஸனா-ஸீனாயை
250. பஞ்சப்ரஹ்ம-ஸ்வ-ரூபிண்யை
251. சின்மய்யை
252. பரமாநந்தாயை
253. விஜ்ஞானகன-ரூபிண்யை
254. த்யான-த்யாத்ரு-த்யேய ரூபாயை
255. தர்மாதர்ம-விவர்ஜிதாயை

---

248. பத்மராகம் எனும் ரத்னத்தைப் போன்ற காந்தியுள்ளவள்.

249. (இனிப் பஞ்சப்பிரம்மாஸனம், பஞ்சப்பிரம்ம ரூபம், பஞ்ச அவஸ்தை, பஞ்ச கிருத்தியம் முதலியவற்றின் வர்ணனை.) ஐந்து பிரேதங்களாகிய ஆஸனத்திலிருப்பவள். (பிரம்மா-விஷ்ணு-ருத்ரன்-ஈசன்-ஸதாசிவன் ஐவரும் தத்தம் சக்திகளுடன் கூடினால் பஞ்சப் பிரம்மம் என்றும், சக்திகளினின்று பிரிந்தால் பஞ்ச ப்ரேதம் என்றும் கூறப்படுவர். (ஒ. 'சிவ: சக்த்யா யுக்தோ'— ஸௌ. ல. *1.*)

250. பஞ்சப்பிரம்ம ஸ்வரூபமாயிருப்பவள். (ஒ. பாங்க்தம் வா இதம் ஸர்வம்—தை. உப. *1.7.*)

251. சைதன்ய ரூபிணீ.

252. பரமானந்த வடிவினள்.

253. விஜ்ஞான கன ரூபிணீ. (ஸமஷ்டி ஞானம் விஞ்ஞானகனம்.)

254. தியானம், தியாதா, தியேயம் என்ற முவ்வடிவானவள்.

255. தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் அப்பாற்பட்டவள். (ஒ. அன்யத்ர தர்மாத் அன்யத்ர-அதர்மாத் அன்யத்ராஸ்மாத் க்ருதாக்ருதாத்— கட. உப. *2.14.*)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

256. விச்வ-ரூபாயை
257. ஜாகரிண்யை
258. ஸ்வபந்த்யை
259. தைஜஸாத்மிகாயை
260. ஸுப்தாயை
261. ப்ராஜ்ஞாத்மிகாயை
262. துர்யாயை
263. ஸர்வாவஸ்தா-விவர்ஜிதாயை
264. ஸ்ருஷ்டி-கர்த்ர்யை
265. ப்ரஹ்ம-ரூபாயை
266. கோப்த்ர்யை
267. கோவிந்த-ரூபிண்யை
268. ஸம்ஹாரிண்யை

---

256. *விசுவன் அல்லது வைசுவாநரன் என்ற ஸ்தூல சரீராபிமானியாயிருப்பவள். (ஒ. ஸ்தூலபுக் வைச்வாநர: ப்ரதம:—மா. உப.3.)*

257. *ஜாக்கிர நிலையிலிருப்பவள்.*

258. *ஸ்வப்ன நிலையிலிருப்பவள்.*

259. *தைஜஸன் என்ற ஸூக்ஷ்ம சரீராபிமானியாயிருப்பவள்.*

260. *ஸுஷுப்தி நிலையிலிருப்பவள்.*

261. *பிராஜ்ஞன் என்ற காரண சரீராபிமானியாயிருப்பவள்.*

262. *துரீய நிலையிலிருப்பவள். (ஒ. 'ப்ரபஞ்சோபசமம் சாந்தம் சிவ-மத்வைதம் சதுர்த்தம் மன்யந்தே'.—மா. உப. 7.)*

263. *எல்லா நிலைகளுக்கும் அப்பாற்பட்டவள்.*

264. *ஸ்ருஷ்டி செய்பவள்.*

265. *பிரம்ம ரூபிணீ.*

266. *காப்பாற்றுபவள்.*

267. *கோவிந்த ரூபிணீ.*

268. *ஸம்ஹரிப்பவள்.*

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

269. ருத்ர-ரூபாயை
270. திரோதானகர்யை
271. ஈச்வர்யை
272. ஸதாசிவாயை
273. அனுக்ரஹதாயை
274. பஞ்சக்ருத்ய-பராயணாயை
275. பானு-மண்டல-மத்யஸ்தாயை
276. பைரவ்யை
277. பகமாலின்யை
278. பத்மாஸனாயை
279. பகவத்யை
280. பத்மநாப-ஸஹோதர்யை

---

269. ருத்ர ரூபிணீ.

270. மறைப்பவள்.

271. ஈசுவர ரூபிணீ.

272. ஸதாசிவ ரூபிணீ.

273. அனுக்கிரஹம் செய்பவள்.

274. ஐந்து தொழில்களில் ஈடுபட்டவள். (ஸ்ருஷ்டி - ஸ்திதி-லயம்-திரோதானம்-அனுக்கிரஹம் என்பன பஞ்சகிருத்தியம்.)

275. சூரிய மண்டல நடுவிலிருப்பவள். (ஸந்தியா காலத்தில் தேவியைக் காயத்ரீ ரூபமாக சூரிய மண்டலத்தில் உபாசிக்க வேண்டும்.)

276. பைரவ பத்னீ.

277. பகமாலினீ (என்ற நித்யா தேவதையாக இருப்பவள்).

278. கமலாஸனத்தில் இருப்பவள்.

279. ஸகல ஐசுவரியங்களுடன் கூடியவள். (உற்பத்தி, லயம், பூதங்களின் போக்குவரவு, வித்யை, அவித்யை இவற்றை அறிந்தவள்.)

280. பத்மநாபஸஹோதரீ.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

281. உந்மேஷ-நிமிஷோத்பன்ன-விபன்ன-புவனாவல்யை
282. ஸஹஸ்ர-சீர்ஷ-வதநாயை
283. ஸஹஸ்ராக்ஷ்யை
284. ஸஹஸ்ரபதே
285. ஆப்ரஹ்ம-கீட-ஜனன்யை
286. வர்ணாச்ரம-விதாயின்யை
287. நிஜாஜ்ஞாரூப-நிகமாயை
288. புண்யாபுண்ய-பலப்ரதாயை
289. ச்ருதி-ஸீமந்த-ஸிந்தூரீ-க்ருத-பாதாப்ஜ-தூளிகாயை

---

281. கண் இமை கொட்டுவதால் புவனங்களை ஆக்கி அழிப்பவள். (ஒ. 'நிமேஷோன்மேஷாப்யாம்' — ஸௌ. ல. 55.)
282. ஆயிரக்கணக்கான தலைகளும் முகங்களும் உள்ளவள். (ஒ. 'விச்வதச்-சக்ஷு-ருத விச்வதோமுகோ விச்வதோ ஹஸ்த உத விச்வதஸ் பாத்'—நாராயண உப. 35.)
283. ஆயிரம் கண்கள் உடையவள்.
284. ஆயிரம் பாதங்கள் உடையவள்.
285. பிரம்மா முதல் புழுவரை எல்லாவற்றையும் படைத்தவள்.
286. வர்ணாசிரமங்களை வகுத்தவள்.
287. வேதவடிவான கட்டளைகளை இட்டவள்.
288. புண்ணிய பாவங்களுக்குப் பலனை அளிப்பவள்.
289. எவள் பாத கமலத்தின் தூளியே வேதமாதாவின் வகிட்டில் விளங்கும் ஸிந்தூரமோ (அதாவது உபநிஷதமோ) அவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

290. ஸகலாகம-ஸந்தோஹ-சுக்தி-ஸம்புட-மௌக்திகாயை
291. புருஷார்த்த-ப்ரதாயை
292. பூர்ணாயை
293. போகின்யை
294. புவனேச்வர்யை
295. அம்பிகாயை
296. அநாதி-நிதனாயை
297. ஹரிப்ரஹ்மேந்த்ர-ஸேவிதாயை
298. நாராயண்யை
299. நாத-ரூபாயை
300. நாமரூப-விவர்ஜிதாயை

290. *வேத ஸமுதாயமாகிற முத்துச் சிப்பிக்குள்ளிருக்கும் நன்முத்துப் போன்றவள்.*

291. *(அறம், பொருள், இன்பம், வீடு என்ற) புருஷார்த்தங்களை அருள்பவள்.*

292. *பரிபூர்ணமானவள். (ஒ. பூர்ணமத: பூர்ணமிதம்—ஈச. உப.)*

293. *போகங்களை அனுபவிப்பவள்.*

294. *புவனங்களுக்கு ஈசுவரீ. (புவனேசுவரீ பீஜம், மாயா பீஜம், சிந்தாமணி பீஜம், லஜ்ஜா பீஜம் என்று பல பெயர்களால் அழைக்கப்படும் ஹ்ரீங்காரத்தின் தேவதை.)*

295. *ஜகன்மாதா.*

296. *ஆதியந்தமில்லாதவள்.*

297. *விஷ்ணு, பிரம்மா, இந்திரன் முதலியவர்களால் சேவிக்கப்பட்டவள்.*

298. *நாராயணி. (நாராயண ரூபிணி. ஒ. அர்த்த-வபுஷா பார்யா த்வம் ஆர்யாபதே—சிவானந்தலஹரி, 82.)*

299. *நாதரூபிணி.*

300. *நாம ரூபம் அற்றவள். ('ஏதவனூர் ஏதவன் பேர்'—திருவெம்பாவை 10.)*

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

301. ஹ்ரீங்கார்யை
302. ஹ்ரீமத்யை
303. ஹ்ருத்யாயை
304. ஹேயோபாதேய-வர்ஜிதாயை
305. ராஜராஜார்ச்சிதாயை
306. ராஜ்ஞ்யை
307. ரம்யாயை
308. ராஜீவலோசனாயை
309. ரஞ்ஜன்யை
310. ரமண்யை
311. ரஸ்யாயை
312. ரணத்-கிங்கிணி-மேகலாயை
313. ரமாயை
314. ராகேந்துவதனாயை

301. ஹ்ரீங்கார ரூபிணீ.

302. லஜ்ஜை உடையவள்.

303. இருதயத்தில் உள்ளவள். (எல்லோருக்கும் பிரியம் உள்ளவள்.)

304. தள்ளத்தக்கதும் கொள்ளத்தக்கதும் இல்லாதவள்.

305. ராஜாதிராஜரால் பூஜிக்கப் பட்டவள்.

306. (காமேசுவரனின்) பட்டமஹிஷி.

307. ஸந்தோஷப்படுத்துபவள்.

308. தாமரை போன்ற கண்ணுடையவள்.

309. தனது சிவப்பு வர்ணத்தால் சிவனையும் சிவப்பாகச் செய்பவள்.

310. (பக்தருடன்) விளையாடுபவள்.

311. (ஆத்மானந்த) ரஸத்தை ஊட்டுபவள். (ஒ. ரஸோ வை ஸ:—தை. உப. 2.7.)

312. சதங்கைகள் ஒலிக்கும் ஒட்டியாணம் அணிந்தவள். (ஒ. க்வணத் காஞ்சீ தாமா—ஸௌ. ல. 7.)

313. லக்ஷ்மீ ரூபமாயிருப்பவள்.

314. பௌர்ணமீ சந்திரன் போன்ற முகம் உடையவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

315. ரதிரூபாயை
316. ரதிப்ரியாயை
317. ரக்ஷாகர்யை
318. ராக்ஷஸக்ன்யை
319. ராமாயை
320. ரமண-லம்படாயை
321. காம்யாயை
322. காமகலா-ரூபாயை
323. கதம்ப-குஸுமப்ரியாயை
324. கல்யாண்யை
325. ஜகதீ-கந்தாயை
326. கருணாரஸ-ஸாகராயை
327. கலாவத்யை
328. கலாலாபாயை

---

315. ரதி வடிவானவள். (மன்மதனின் மனைவி ரதி.)

316. ரதியிடம் பிரியமுள்ளவள்.

317. இரக்ஷிப்பவள்.

318. இராக்ஷசர்களைக் கொல்லுபவள்.

319. ஸ்திரீகளின் வடிவானவள். (ஒ. 'வித்யா: ஸமஸ்தாஸ்தவ தேவி பேதா: ஸ்த்ரிய: ஸமஸ்தா: ஸகலா ஜகத்ஸு' —தேவீ மாஹாத்மியம். 13.6)

320. பதியுடன் குலவுவதில் ஆசைமிகுந்தவள்.

321. ஞானிகளால் விரும்பப்படுகிறவள்.

322. காமகலை வடிவானவள்.

323. கதம்பப்பூவில் பிரியமுள்ளவள்.

324. மங்கள வடிவானவள்.

325. உலகிற்கு வேர் போன்றவள். (ஒ. ஊர்த்வமூலம் அத: சாகம்— கீ. 15.1.)

326. கருணைக்கடல்.

327. கலைகளை உடையவள்.

328. கலை வடிவான பேச்சுடையவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

329. காந்தாயை
330. காதம்பரீ-ப்ரியாயை
331. வரதாயை
332. வாம-நயநாயை
333. வாருணீமத-விஹ்வலாயை
334. விச்வாதிகாயை
335. வேத-வேத்யாயை
336. விந்த்யாசல-நிவாஸின்யை
337. விதாத்ர்யை
338. வேதஜனன்யை
339. விஷ்ணுமாயாயை
340. விலாஸின்யை

329. காந்தி பொருந்தியவள்.

330. காதம்பரீ எனும் மதுவில் பிரியமுள்ளவள்.

331. வரமளிப்பவள். (ஒ. த்வதன்ய: பாணிப்யாம்—ஸௌ. ல. 4.)

332. அழகான கண்களுள்ளவள்.

333. வாருணீ எனும் மதுவால் மெய் மறந்தவள். (வாருணீ நாடியில் பெருகுவது ஆனந்தத் தேன்.)

334. எல்லாத் தத்துவங்களுக்கும் மேலானவள்.

335. வேதங்களால் அறியத்தக்கவள். (வேதங்களே பராசக்தி ஆலயத்தின் கோபுரவாயில்கள்.)

336. விந்திய மலையில் வசிப்பவள்.

337. உலகைத் தாங்குபவள்.

338. வேதங்களைப் படைத்தவள்.

339. விஷ்ணு மாயையாக இருப்பவள். (ஒ. தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா — கீ. 7.14.)

340. சிற்றின்பக் கேளிகளில் ரமிப்பவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

341. க்ஷேத்ரஸ்வரூபாயை
342. க்ஷேத்ரேச்யை
343. க்ஷேத்ர-க்ஷேத்ரஜ்ஞ-பாலின்யை
344. க்ஷய-வ்ருத்தி-விநிர்முக்தாயை
345. க்ஷேத்ர-பால-ஸமர்ச்சிதாயை
346. விஜயாயை
347. விமலாயை
348. வந்த்யாயை
349. வந்தாருஜன-வத்ஸலாயை
350. வாக்வாதின்யை
351. வாமகேச்யை
352. வஹ்னி-மண்டல-வாஸின்யை

341. (இனி க்ஷேத்ர-க்ஷேத்ரஜ்ஞ வர்ணனை.) க்ஷேத்திர வடிவானள். (ஓ. இதம் சரீரம் கௌந்தேய க்ஷேத்ர-மித்யபிதீயதே—கீ. 13.1.)

342. க்ஷேத்திரங்களுக்குத் தலைவி.

343. க்ஷேத்திரத்தையும் க்ஷேத்திரஜ்ஞனையும் பரிபாலிப்பவள்.

344. குறைதலும் வளர்தலும் இல்லாதவள்.

345. க்ஷேத்திரபாலகர்களால் நன்கு பூஜிக்கப்பட்டவள்.

346. எப்போதும் ஜயமுள்ளவள். (விஜயா என்ற சுப முகூர்த்தத்தில் விசேஷமாய் ஆராதிக்கப்படுபவள். விஜய தசமி ஸாயங்காலம் விஜயா முகூர்த்தம்.)

347. (அவித்யை முதலிய) மலமில்லாதவள்.

348. எல்லோராலும் வந்தனம் செய்யப்படுபவள்.

349. வணங்கும் பக்த ஜனங்களிடம் வாத்ஸல்யம் உள்ளவள்.

350. வாக்வாதினீ என்ற சக்தி வடிவினள்.

351. வாமகேசுவரரின் பத்னி (அல்லது அழகிய கூந்தல் உள்ளவள்.)

352. அக்கினி மண்டலத்தில் வசிப்பவள். (அக்கினி மண்டலம்—மூலாதாரம்.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

353. பக்திமத்-கல்பலதிகாயை
354. பசுபாச-விமோசின்யை
355. ஸம்ஹ்ருதாசேஷ-பாஷண்டாயை
356. ஸதாசார-ப்ரவர்த்திகாயை
357. தாபத்ரயாக்னி-ஸந்தப்த-ஸமாஹ்-லாதன-சந்த்ரிகாயை
358. தருண்யை
359. தாபஸாராத்யாயை
360. தனு-மத்யாயை
361. தமோபஹாயை
362. சித்யை
363. தத்பத-லக்ஷ்யார்த்தாயை

---

353. பக்தர்களுக்குக் கல்பகக் கொடி போன்றவள்.

354. ஜீவர்களின் தளைகளை நீக்குபவள்.

355. பாஷண்டர்களை நாசம் செய்பவள். (ஸ்வதர்மத்தை விட்டவர்கள் பாஷண்டர்கள்.)

356. நல்ல ஆசாரத்தில் நடத்தி வைப்பவள்.

357. (ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் என்ற) மூன்று வகைப்பட்ட துன்பத்தில் தவிப்பவர்களுக்குச் சாந்தியளிக்கும் நிலவு போன்றவள்.

358. என்றும் யௌவனத்தில் இருப்பவள்.

359. தபஸ்விகளால் பூஜிக்கப்பட்டவள்.

360. குறுகிய இடையுள்ளவள்.

361. இருளைப் போக்குபவள்.

362. ஞானஸ்வரூபிணீ.

363. (தத்-த்வ-மஸி மஹா வாக்கியத்தில்) 'தத்' பதத்தின் லக்ஷ்யார்த்தமாயிருப்பவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

364. சிதேக-ரஸ-ரூபிண்யை
365. ஸ்வாத்மானந்த-லவீ-பூத-ப்ரஹ்மாத்-யானந்த-ஸந்தத்யை
366. பராயை
367. ப்ரத்யக்-சிதீ-ரூபாயை
368. பச்யந்த்யை
369. பரதேவதாயை
370. மத்யமாயை

---

364. முழுவதும் ஞானமே வடிவானவள்.

365. (ஸமுத்திரம்போன்ற) தனது ஆனந்தத்தில் பிரம்மாவின் ஆனந்தம் முதலியவற்றை ஒரு திவலைபோல் செய்பவள். (ஒ. ஸைஷானந்தஸ்ய மீமாம்ஸா பவதி—தை. உப. 2.8.)

366. (இனி பீடங்களும் அங்க தேவதைகளும் கூறப்படும்.) 'பரா' என்ற சப்தஸ்வரூபிணீ. (பிரம்மம் மாயையுடன் கூடினால் அவ்யக்தம் எனப்படும்; அந்நிலை காரண பிந்து ஸ்ருஷ்டி ஆரம்பம். ஜீவர்களுடைய உடலில் உள்ள குண்டலினீ சக்தி காரண பிந்து வடிவம். இது மூலாதாரத்திலிருந்து கிளம்பி நாபிக்கு வந்தால் கார்ய பிந்து, பச்யந்தீ; இருதயத்துக்கு வந்தால், நாதம், மத்யமா; கழுத்துக்கு வந்தால் பீஜம், அல்லது அக்ஷரம், வைகரீ.)

367. அறிவை உள்நோக்காகச் செய்பவள். (ஒ. பராஞ்சி கானி வ்யத்ருணத் ஸ்வயம்பூ: தஸ்மாத் பராங் பச்யதி நாந்தராத்மன் —கட. உப. 4.1.)

368. பச்யந்தீ வடிவாக இருப்பவள். (எல்லா வஸ்துக்களையும் தன்னிடம் பார்ப்பவள்.)

369. பரதேவதை. (எல்லா தேவதைகளுக்கும் சக்தியளிப்பவள்.)

370. மத்யமா வடிவாக இருப்பவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

371. வைகரீ-ரூபாயை
372. பக்தமானஸ-ஹம்ஸிகாயை
373. காமேச்வர-ப்ராண-நாட்யை
374. க்ருதஜ்ஞாயை
375. காம-பூஜிதாயை

371. வைகரீ வாக்கு வடிவானவள். (ஒ. த்ரீணீ பதா நிஹிதா குஹாஸ — நாராயண உப. 1.4.1. குஹா த்ரீணி நிஹிதா நேங்கயந்தி துரீயம் வாசோ மனுஷ்யா வதந்தி—சுருதி.)

372. பக்தர்கள் மனதாகிற மானஸ ஸரஸ்ஸில் ஹம்ஸம் போல் விளங்குபவள். (ஒ. ஸமுன்மீலத் ஸம்வித்-கமல மகரந்தைக ரஸிகம் பஜே ஹம்ஸ-த்வந்த்வம் கிமபி மஹதாம் மானஸ-சரம்—ஸௌ. ல. 38.)

373. காமேசுவருடைய ஜீவநாடி. (ஒ. யா தே ருத்ர சிவா தனூ: சிவா விச்வாஹ பேஷஜீ । சிவா ருத்ரஸ்ய பேஷஜீ । தயா நோ ம்ருட ஜீவஸே—ருத்ரம் 20. 3. ஒ. ஸுதாமப்-யாஸ்வாத்ய —ஸௌ. ல. 28.— அமிருதத்தை உண்டும் பிரளய காலத்தில் அமரர் அழிகின்றனர். விஷத்தை உண்டும் சிவன் இறவாமலிருக்கிறார். இதற்கும் காரணம் தேவி அவருடைய பிராண நாடியாக இருப்பதே.)

374. (எல்லோரும் செய்யும்) எல்லாக் காரியங்களையும் அறிபவள். (ஒ. ஸூர்ய: ஸோமோ யம: காலோ மஹாபூதானி பஞ்ச ச । ஏதே சுபாசுபஸ்யேஹ கர்மணோ நவ ஸாக்ஷிண: ॥ சூரியன் சந்திரன், யமன், காலம், பஞ்ச மஹாபூதங்கள் இவ்வடிவில் நின்று பார்த்துக் கொண்டிருப்பவள்.)

375. (மூலதாரத்தில் காமகிரி பீடத்தில் காரணபிந்துவில்) மன்மதனால் ஆராதிக்கப்பட்டவள். (தனு: பௌஷ்பம் மௌர்வீ—ஸௌ. ல. 6.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

376. ச்ருங்கார-ரஸ-ஸம்பூர்ணாயை
377. ஜயாயை
378. ஜாலந்தர-ஸ்திதாயை
379. ஓட்யாண-பீட-நிலயாயை
380. பிந்துமண்டல-வாஸின்யை
381. ரஹோயாக-க்ரமாராத்யாயை
382. ரஹஸ்தர்ப்பண-தர்ப்பிதாயை

---

376. (பூர்ணகிரி பீடத்தில் காரியபிந்துவில்) சிருங்கார ரஸம் நிறைந்திருப்பவள். (லலிதா வடிவம் சிருங்காரப் பிரதானம்.)

377. ஜய ரூபமாக இருப்பவள்.

378. ஜாலந்தர பீடத்தில் (நாதவடிவில்) இருப்பவள்.

379. ஓட்டியாண பீடத்தில் (பீஜ வடிவில்) இருப்பவள்.

380. பிந்து மண்டலத்தில் வசிப்பவள். (ஸ்ரீ சக்கரத்தின் நடுவிலுள்ள பிந்துவிலும் உடலில் பிரம்மரந்திரத்திலும் வசிப்பவள்.)

381. ரகசிய யாகத்தால் ஆராதிக்கத்தக்கவள். (சிதக்னியில் புண்ணியம், பாவம் முதலியவற்றை ஹோமம் செய்தல். ஒ. ந சப்த சாஸ்த்ரா-பிரதஸ்ய மோக்ஷோ, ந சைவ ரம்யாவஸத-ப்ரியஸ்ய । ந போஜனாச்சாதன தத்பரஸ்ய ந லோக சித்தக்ரஹணே ரதஸ்ய ॥ ஏகாந்த-சீலஸ்ய த்ருடவ்ரதஸ்ய மோக்ஷோ பவேத் ப்ரீதி-நிவர்த்தகஸ்ய । அத்யாத்ம-யோகே நிரதஸ்ய ஸம்யங் மோக்ஷோ பவேந்நித்ய-மஹிம்ஸகஸ்ய ॥— ஆபஸ்தம்பர்.)

382. ரகசிய தர்ப்பணத்தால் திருப்தியடைபவள். (மந்திரத்தின் அர்த்தத்தை நன்கு உணர்வதே ரஹஸ்ய தர்ப்பணம்.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

383. ஸத்ய:ப்ரஸாதின்யை
384. விச்வ-ஸாக்ஷிண்யை
385. ஸாக்ஷி-வர்ஜிதாயை
386. ஷடங்க-தேவதாயுக்தாயை
387. ஷாட்குண்ய-பரிபூரிதாயை
388. நித்ய-க்லின்னாயை
389. நிருபமாயை
390. நிர்வாண-ஸுக-தாயின்யை

---

383. உடனே அருள்புரிபவள். (பரமசிவனுக்கு 'ஆசு தோஷீ' விரைவில் மகிழ்பவர் எனப்பெயர்.)

384. எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியாயிருப்பவள்.

385. தனக்கு யாதொரு ஸாக்ஷியும் இல்லாதவள்.

386. ஆறு அங்கதேவதைகளுடன் கூடியவள். (ஹ்ருதயம், சிரம், சிகை, கவசம், கண், அஸ்திரம் என்ற ஆறும் அங்கதேவதைகள். இவைகளின் அதிஷ்டான தேவதை மகேசுவரனே, ஒ. ஸர்வஜ்ஞதா த்ருப்தி-ரனாதிபோத: । ஸ்வதந்த்ரதா நித்ய-மலுப்த-சக்தி: । அனந்ததா-சேதி விதேர்-விதிஜ்ஞா: ஷடாஹு-ரங்கானி மஹேச்வரஸ்ய—தேவீபாகவதம்.)

387. ஆறு குணங்கள் நிறைந்தவள். (செல்வம், தர்மம், கீர்த்தி, ஸ்ரீ, ஞானம், வைராக்கியம்.)

388. எப்போதும் உள்ளத்தில் (தயையால்) ஈரமுள்ளவள்.

389. உவமையற்றவள். (ஒ. ந தஸ்ய ப்ரதிமா அஸ்தி யஸ்ய நாம மஹத்-யச: ॥ ஒ. தனக்குவமையில்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால் மனக்கவலை மாற்றலரிது. —குறள்.)

390. (நிர்வாண) மோக்ஷசுகமளிப்பவள். (அ. நிர்வாண மாவது நிர்பாணம். பாணம் என்றால் சரீரம். மோக்ஷ ஆனந்தம் இந்த உருவுள்ளது என்று கூற இயலாதது. ஒ. யோऽந்த: ஸுகோऽந்தரா ராமஸ்-ததாऽந்தர்-

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

391. நித்யா-ஷோடசிகா-ரூபாயை
392. ஸ்ரீகண்டார்த்த-சரீரிண்யை
393. ப்ரபாவத்யை
394. ப்ரபா-ரூபாயை
395. ப்ரஸித்தாயை
396. பரமேச்வர்யை

ஜ்யோதி-ரேவ ய: । ஸ யோகீ ப்ரஹ்ம-நிர்வாணம் ப்ரஹ்ம-பூதோऽதிகச்சதி'—கீ. 5. 24.)

391. பதினாறு நித்யா தேவதைகளின் வடிவானவள்.

392. பரமசிவனது பாதி சரீரமானவள். (ஒ. ஸ இமமேவாத்மானம் த்வேதாऽபாதயத் தத: பதிச்ச பத்னீ சாபவதாம்—ப்ரு. உப. 1.4.3. அ. ஸ்ரீகண்டன், நஞ்சுண்ட கண்டன். அதனால் அழகிய கழுத்துடையவன். ஒ. 'மிக்கார் அமுதுண்ண நஞ்சுண்ட மேலவன்' —திருமந்திரம்.)

393. அணிமா முதலிய பிரபைகளால் சூழப்பட்டவள். (ஒ. 'அணிமாதிபி-ராவ்ருதாம் மயூகை-ரஹ-மித்யேவ விபாவயே பவானீம்.)

394. அணிமா முதலிய சக்திகளே தானானவள். (ஒ. 'மனோமய: ப்ராண சரீரோ பாரூப: ஸத்யஸங்கல்ப ஆகாசாத்மா ஸர்வகர்மா ஸர்வகாம: ஸர்வகந்த: ஸர்வரஸ: ஸர்வமித-மப்யாத்தோ ऽவாக்யனாதர:' —சா. உப. 3.14.2.)

395. பிரசித்தமானவள். (எல்லோருக்கும் 'நான், நான்' எனப் பிரசித்தமாகத் தெரிந்தவள். தன்னை அனைவரும் 'நான்' என அறிவர். ஆனாலும் அந்த 'நான்' பரதேவதை என்பதை எவரும் எளிதில் தெரிந்து கொள்வதில்லை.)

396. பரமேசுவரி.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

397. மூலப்ரக்ருத்யை
398. அவ்யக்தாயை
399. வ்யக்தாவ்யக்த-ஸ்வரூபிண்யை
400. வ்யாபின்யை

---

397. மூலப்பிரகிருதி. (விகிருதியான பிருதிவி தனக்குப் பிரகிருதியான அப்புவில் லயிக்கும். அப்பு தேயுவில்; தேயு வாயுவில்; வாயு தனக்குப் பிரகிருதியான ஆகாசத்தில்; ஆகாசம் மூலப் பிரகிருதியில்; அதற்கு வேறு பிரகிருதி கிடையாது. அது தான் அனைத்துக்கும் வேர். ஒ. மம யோனிர் மஹத் ப்ரஹ்ம—கீ. 14.3)

398. வெளிப்படையாய்த் தெரியாதவள். (ஒ. 'நாஸதாஸீந்-நோ ஸதாஸீத், தம ஆஸீத் தமஸா கூட-மக்ரே.' — சுருதி. ஈசுவரனது காம ரூபமான பிரகிருதியே அவ்யக்தம் எனப்படும் காரணபிந்து.)

399. வெளிப்படையாய்த் தெரிந்தும் தெரியாமலும் இருப்பவள். (அவ்வியக்தமாகிய மூலப் பிரகிருதியிலிருந்து வியக்தமாகிய மஹத் தோன்றிற்று. ஆகையால் தேவி 'வ்யக்தாவ்யக்த ஸ்வரூபிணீ, அல்லது ஞானிகளுக்கு அவள் வியக்தம், அஞ்ஞானிகளுக்கு அவ்வியக்தம். ஒ. 'கண்டார் கண்ட காட்சியும் நீ, காணார் காணாக்கள்வனும் நீ.' —தாயுமானவர். ஒ. 'வ்யக்தம் புக்திப்ரதம், முக்திப்ரத-மவ்யக்த-முச்யதே । புக்தி - முக்திப்ரதம் லிங்கம் வ்யக்தாவ்யக்தம் ப்ரசக்ஷதே'— பிரம்மவைவர்த்த புராணம்.)

400. எங்கும் வியாபித்திருப்பவள். (ஒ. 'அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாயானந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்ததெது'—தாயுமானவர்.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri Harikrishnan Collection, Thirunagaallur, Chennai

401. விவிதாகாராயை
402. வித்யா-ऽவித்யா-ஸ்வரூபிண்யை
403. மஹா-காமேச-நயன-குமுதா ஹ்லாத-கௌமுத்யை
404. பக்த-ஹார்த-தமோ-பேதபானுமத்-பானுஸந்தத்யை
405. சிவதூத்யை
406. சிவாராத்யாயை
407. சிவமூர்த்யை
408. சிவங்கர்யை

---

401. பலவகையான உருவமுள்ளவள். (ஒ. 'ரூபை-ரநேகைர்-பஹுதாத்ம-மூர்த்திம் க்ருத்வாம்பிகே தத் ப்ரகரோதி கான்யா'—தேவீமாஹாத்மியம் 11.30.)

402. வித்தை, அவித்தை என்ற இரண்டு ரூபமாகவும் உள்ளவள். (ஒ. வித்யாஞ்ச அவித்யாஞ்ச யஸ்தத் வேதோபயம் ஸஹ । அவித்யயா ம்ருத்யும் தீர்த்வா வித்யயாऽம்ருத-மச்னுதே—ஈச. உப. 11)

403. மஹாகாமேசரின் குமுதம் போன்ற கண்களை மலரச் செய்யும் நிலவு போன்றவள்.

404. பக்தர்களுடைய அகவிருளை நீக்கும் சூரிய கிரணம் போன்றவள். (ஒ. தேஷா-மேவானு-கம்பார்த்த-மஹ-மஜ்ஞானஜம் தம: । நாசயாம்-யாத்ம-பாவஸ்தோ ஜ்ஞானதீபேன பாஸ்வதே ॥ கீ. 10. 11.)

405. (சும்ப நிசும்பர்களுடன் நிகழ்ந்த போரில்) சிவனே தூது சென்ற பெருமையுடையவள்.

406. சிவனால் ஆராதிக்கப்பட்டவள். (ஒ.—சிவ: சக்த்யா யுக்தோ யதி பவதி சக்த:—ஸௌ. ல.1.)

407. சிவவடிவானவள் (மங்கள வடிவானவள்).

408. மங்களத்தைச் செய்பவள். (ஒ. 'ஸர்வமங்கல மாங்கல்யே' —தேவீமாஹாத்மியம், 11. 10).

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

409. சிவப்ரியாயை
410. சிவபராயை
411. சிஷ்டேஷ்டாயை
412. சிஷ்டபூஜிதாயை
413. அப்ரமேயாயை
414. ஸ்வப்ரகாசாயை
415. மனோவாசாமகோசராயை
416. சிச்சக்த்யை
417. சேதனாரூபாயை
418. ஜடசக்த்யை
419. ஜடாத்மிகாயை
420. காயத்ர்யை

409. *சிவனுக்குப் பிரியமானவள்.*

410. *சிவனையன்றி வேறு நாட்டமில்லாதவள்.*

411. *சிஷ்டரிடம் இஷ்டமுள்ளவள். (சிஷ்டர்-நல்ல ஆசார சீலர்கள்.)*

412. *சிஷ்டர்களால் பூஜிக்கப்பட்டவள்.*

413. *அளவிட முடியாதவள்.*

414. *ஸ்வயம் பிரகாசமானவள். (ஒ. தஸ்ய பாஸா ஸர்வ மிதம் விபாதி.—கட. உப. 5. 15.)*

415. *மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாதவள். (ஒ. யதோ வாசோ நிவர்த்தந்தே—தை. உப. 2.4.)*

416. *சிச்சக்தி வடிவானவள். ('சித்' என்பது ஞானம்.)*

417. *சைதன்ய ரூபிணி (ஒ. ஸர்வ-சைதன்ய ரூபாம் தாம் ஆத்யாம் வித்யாஞ் ச தீமஹி । புத்திம் யா நः ப்ரசோதயாத் ॥ தேவீ பாகவதம், 1.1.1.)*

418. *ஜடசக்தியாக இருப்பவள். (உலக சிருஷ்டிக்கு உபயோகமாகின்ற மாயையின் பரிணாமம் ஜடசக்தி அல்லது அபரா ப்ரக்ருதி. ஜீவசக்தி பராப்ரக்ருதி. ஒ. கீ. 7. 4-5)*

419. *ஜடப்பிரபஞ்சமாகவும் இருப்பவள்.*

420. *காயத்ரியாக இருப்பவள்.(ஒ. காயத்ரீ சந்தஸா-மஹம்—கீ. 10.35.)*

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

421. வ்யாஹ்ருத்யை
422. ஸந்த்யாயை
423. த்விஜப்ருந்த-நிஷேவிதாயை

421. வ்யாஹ்ருதியாக இருப்பவள். (அ-உ-ம என்ற அக்ஷரங்களினின்று தோன்றியவை பூ:-புவ:-ஸுவ: என்ற வ்யாஹ்ருதிகள்; அ-உ-ம என்பன ப்ரக்ருதி. பூர்ப்புவஸ்ஸுவ: என்பன விக்ருதி. வ்யாஹ்ருதியின் விக்ருதி காயத்ரீ; காயத்ரியின் விக்ருதி ரிக்யஜுஸ் ஸாம வேதங்கள்.)

422. ஸந்த்யா ரூபமானவள். (ஜீவப்பிரம்ம ஐக்கியமே ஸந்த்யை. அதற்குச் சாதனமான காலமும் உபாஸனா மார்க்கமும் உப லக்ஷணத்தால் ஸந்த்யை எனப் படுவன. ஒரு வயதுள்ள கன்னிகைக்கு ஸந்த்யை எனப்பெயர். அந்த வடிவமாகத் தேவி இருக்கிறாள். (ஒ. 'ப்ரஹ்மணோ த்யாயதோ யஸ்மாத் ஸம்யக் ஜாதா வராங்கனா । அத: ஸந்த்யேதி லோகேऽஸ்மின் அஸ்யா: க்யாதிர்-பவிஷ்யதி' —காளிகாபுராணம். ஒ. 'ந பின்னாம் ப்ரதிபத்யேத காயத்ரீம் ப்ரஹ்மணா ஸஹ । ஸாஹமஸ்மீத் - யுபாஸீத விதினா யேந-கேந-சித்—வியாஸர்.)

423. ஜீவராசிகளால் சேவிக்கப்பட்டவள். ('த்விஜர்கள்' என்ற பதம் இங்கே கூட்டை நாடிச் செல்லும் பறவைகள் போன்ற ஜீவர்கள் எல்லோரையுமே குறிக் கும்; விசேஷமாக பிராம்மண, க்ஷத்திரிய, வைசியர் களையும் அவர்களுள் முமுக்ஷுக்களையும் குறிக்கும். ஒ. தத்யதாஸ்மின்-னாகாசே ச்யேனோ வா ஸுபர் ணோ வா விபரிபத்ய ச்ராந்த: ஸம்ஹ்ருத்ய பக்ஷௌ ஸம்லயாயைவ த்ரியத ஏவ மேவாயம் புருஷ ஏதஸ்மா அந்தாய தாவதி—ப்ரு. உப. 4.3.19.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

424. தத்வாஸனாயை
425. தஸ்மை
426. துப்யம்
427. அய்யை
428. பஞ்ச-கோசாந்தர-ஸ்திதாயை

424. தத்துவங்களை ஆஸனமாக உடையவள். (தத்துவங்களைக் கடந்து அவற்றிற்கெல்லாம் மேலாக விளங்குபவள்.)

425. 'தத்' ரூபமானவள். (ஒ. யத்-'தத்' பத-மனுத்தமம்—விஷ்ணு ஸஹஸ்ரநாமம் 78. ஒ. ததித்யனபிஸந்தாய பலம்—கீ. 17.25)

426. '(த்வம்) நீ' எனப்படுபவள். ('த்வம்' பதம் ஜீவன் முதலான ஸமஸ்த ப்ரபஞ்சமும்.)

427. 'அயீ' எனப்படுபவள். (அன்போடு அன்னையை அழைக்கும் சொல் இது. 'தத்-த்வம்-அஸி' மஹா வாக்கியத்தின் 'அஸி' பதம் இங்கு 'அயீ' என ஆயிற்று. 907 வது நாமம் 'தத்வமயீ'. 425-27ல் கூறின மூன்று நாமங்கள் தத்-த்வம்-அயீ.)

428. ஐந்து கோசங்களுக்கிடையே உள்ளவள். (ஒ. 'அன்ன ப்ராணமன: ப்ரபோத பரமானந்தை: சிர: பக்ஷயுக் புச்சாத்ம ப்ரகடைர்-மஹோபநிஷதாம் வாக்யை: ப்ரஸித்தீ-க்ருத: கோசை: பஞ்சபிரேபி-ரேவ பவதீ-மேதத்-ப்ரலீனாமிதி ஜ்யோதி: ப்ரஜ்வல-துஜ்வலாத்ம-சபலாம் யோ வேத ஸ ப்ரஹ்ம-வித் ॥''—துர்வாஸர். பஞ்ச பஞ்சிகா பூஜையில் இரண்டாவதான பஞ்சகோச மந்திரத்தின் இடையிலுள்ளவள். ஒ. 'ஸ்ரீவித்யா ச பரஞ்ஜ்யோதி: பரா நிஷ்கள சாம்பவீ அஜபா மாத்ருகா சேதி பஞ்சகோசா: ப்ரகீர்த்திதா: ॥' பஞ்சகோச தேவதைகள் ஐவரில் சிருஷ்டியாதி சக்கரங்களில் பரஞ்ஜோதி முதலிய நால்வர் பூஜிக்கப் படுகின்றனர். ஸ்ரீவித்யா தேவதைக்குப் பூஜை நடுவில் பிந்துவில்.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Harihara Collection, Chennai

429. நிஸ்ஸீம-மஹிம்னே
430. நித்ய-யௌவனாயை
431. மத-சாலின்யை
432. மத-கூர்ணித-ரக்தாக்ஷ்யை
433. மத-பாடல-கண்ட-புவே
434. சந்தன-த்ரவ-திக்தாங்க்யை
435. சாம்பேய-குஸும-ப்ரியாயை
436. குசலாயை
437. கோமலாகாராயை
438. குருகுல்லாயை
439. குலேச்வர்யை

---

429. எல்லையில்லா மகிமை வாய்ந்தவள்.

430. எப்போதும் யௌவனமுள்ளவள்.

431. களிப்பால் பிரகாசிப்பவள் (மதமாவது ஆனந்தக் களிப்பு).

432. ஆனந்தக்களிப்பால் சுழலும் சிவந்த கண்களுடையவள்.

433. களிப்பால் கன்னங்கள் சிவந்தவள்.

434. சந்தனம் பூசிய அங்கம் உடையவள்.

435. சம்பக புஷ்பத்தில் பிரியம் உள்ளவள்.

436. ஸாமர்த்தியம் உள்ளவள். (ஒ. யோக: கர்மஸு கௌசலம்—கீ. 2.50.)

437. மிருதுவும் அழகும் மிகுந்த சரீரம் உடையவள்.

438. 'குருகுல்லா' தேவி வடிவானவள். (ஸ்ரீநகரத்தில் அஹங்காரக் கோட்டைக்கும் சித்தக் கோட்டைக்கும் இடையில் விமர்சம் என்ற நடைபாவி(இறங்கு கிணறு)யில் இருப்பவள். வாராஹியைப் பிதாவாகவும், குருகுல்லாவை மாதாவாகவும் பாவனோபநிஷத் கூறுகிறது.)

439. குலத்திற்கு ஈசுவரி, (ஒ. ஸஜாதீயாநாம் மாத்ரு-மான-மேயானாம் ஸமூஹ: குலம் தஸ்ய ஈச்வரீ.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

440. குலகுண்டாலயாயை
441. கௌலமார்க-தத்பர-ஸேவிதாயை
442. குமார-கணநாதாம்பாயை
443. துஷ்ட்யை
444. புஷ்ட்யை
445. மத்யை
446. த்ருத்யை
447. சாந்த்யை
448. ஸ்வஸ்தி-மத்யை

---

440. குலகுண்டத்தை இருப்பிடமாகக் கொண்டவள். (மூலாதார பிந்து குலகுண்டம்; அதை ஆலயமாகக் கொண்ட குண்டலினீ சக்தி. ஒ. ஸுதாதாரா ஸாரை: —ஸௌ. ல. 10.)

441. கௌலமார்க்கத்தில் ஈடுபாடுடையவர்களால் சேவிக்கப்பட்டவள். (ஸமய மதம், கௌல மதம், மிச்ர மதம் என்று ஸ்ரீவித்யோபாஸனையில் மூன்று மார்க்கங்கள் உண்டு. வைதிக மார்க்கத்தைத் தழுவிய வசிஷ்டர், ஸநகர், ஸநந்தநர், ஸநத்குமாரர், சுகர், இந்த ஐவரின் சுபாகம தந்திரங்கள் கூறுவது ஸமயமதம். 64 தந்திரங்களில் கூறப்படுவது கௌல மதம். கலாநிதி, குலார்ணவம் பார்ஹஸ்பத்யம், தூர்வாஸ மதம் முதலிய எட்டு நூல்களில் கூறப்படுவது மிச்ரம்.)

442. குமரனுக்கும் கணபதிக்கும் தாய்.

443. ஸந்தோஷ வடிவானவள்.

444. புஷ்டி வடிவானவள்.

445. புத்தியாக இருப்பவள்.

446. தைரிய ரூபிணீ.

447. சாந்தியாக இருப்பவள். (ஒ. தேவீ மாஹாத்மியம் 5. 16)

448. க்ஷேமத்தை உடையவள். (ஸு-அஸ்தி-மதீ என்றால் மாறுபடாது, அழிவுறாது, எப்போதும் ஏக ரூபமாக வ்யாவஹாரிகத்திற்கும் ப்ராதிபாஸிகத்திற்கும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

449. காந்த்யை
450. நந்தின்யை
451. விக்ன-நாசின்யை
452. தேஜோவத்யை
453. த்ரிநயனாயை
454. லோலாக்ஷீ-காமரூபிண்யை
455. மாலின்யை
456. ஹம்ஸின்யை

விலக்ஷணமாய்ப் பாரமார்த்திக ஸத்தா ரூபமாய் உள்ளவள். ஒ. ஸத்யஸ்ய ஸத்யம். ப்ரு. உப. 2.1.1.)

449. காந்தி ரூபமாக உள்ளவள். (ஒ. புத்தி: கீர்த்தீர்-த்ருதிர்-லக்ஷ்மீ: சக்தி: ச்ரத்தா மதி: ஸ்ம்ருதி: । ஸர்வேஷாம் ப்ராணினாம் ஸாம்பா ப்ரத்யக்ஷம் தந்-நிதர்சனம் ‖— தேவீ பாகவதம், ஸ்கந்தம் 3.)

450. (காமதேனுவின் பெண்ணான) நந்தினீ வடிவானவள். (நந்தனுக்கும் யசோதைக்கும் பெண்ணாகப் பிறந்தவள்.)

451. தடைகளைப் போக்குபவள்.

452. பிரகாசம் பொருந்தியவள்.

453. முக்கண் உள்ளவள். (அல்லது தக்ஷிண மார்க்கம், உத்தர மார்க்கம், பிரம்ம மார்க்கம் என்ற வழிகளில் அழைத்துச் செல்பவள்.)

454. பெண்களின் காம வடிவானவள். (லோலாக்ஷீ— சஞ்சலமான கண்ணுடையவள். ஒ. தர்மாவிருத்தோ பூதேஷு காமோऽஸ்மி பரதர்ஷப—கீ. 7.11.)

455. மாலை தரித்தவள். (அல்லது அக்ஷர மாலையில் அதிதேவதையான மாலினீ சக்தி. ஏழு வயதுள்ள கன்னிகை.)

456. ஹம்ஸங்களால் சூழப்பட்டவள். (பரமஹம்ஸர்களால் ஆராதிக்கப்பட்டவள். ஹம்ஸ: என்ற அஜபா காயத்ரீ வடிவினள்.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

457. மாத்ரே
458. மலயாசல-வாஸின்யை
459. ஸுமுக்யை
460. நலின்யை
461. ஸுப்ருவே
462. சோபனாயை
463. ஸுரநாயிகாயை
464. கால-கண்ட்யை
465. காந்திமத்யை
466. க்ஷோபிண்யை
467. ஸூக்ஷ்ம-ரூபிண்யை

---

457. அன்னை வடிவினள். (ஒ. உலகீன்ற அன்னையே, கன்னியென மறை பேசும் ஆனந்தரூப மயிலே.—தாயுமானவர்.)

458. மலயமலையில் வசிப்பவள். (மலயாலய பகவதீ அல்லது மலையாள பகவதீ எனப் பிரசித்தமானவள்.)

459. பிரஸன்னமான முகம் உடையவள்.

460. (கை, கால், கண், முகம் எல்லாம்) தாமரை போன்று மிருதுவும் அழகும் வாய்ந்தவள்.

461. அழகிய புருவம் உடையவள். (ஒ. ப்ருவௌ புக்னே—ஸௌ ல. 47.)

462. மங்கள ஸ்வரூபிணீ.

463. தேவர்களின் தலைவி.

464. காலகண்டர் பத்னி. (ஒ. த்ருதம் கண்டே விஷம், கால கண்டஸ்-ததோஃஸ்ம்யஹம்—தேவீ புராணம்.)

465. காந்தி உடையவள்.

466. தீவிரமான உணர்ச்சியை உண்டாக்குகிறவள். (ஸ்ருஷ்டி காலத்தில் பரமசிவனையும் சலிக்கச் செய்பவள்.)

467. ஸூக்ஷ்மரூபிணீ.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

468. வஜ்ரேச்வர்யை
469. வாமதேவ்யை
470. வயோவஸ்தா-விவர்ஜிதாயை
471. ஸித்தேச்வர்யை
472. ஸித்த-வித்யாயை
473. ஸித்த-மாத்ரே
474. யசஸ்வின்யை
475. விசுத்தி-சக்ர-நிலயாயை

468. வஜ்ரேச்வரீ வடிவினள். (ஜாலந்தரபீடத்தின் அதி தேவதை.)

469. (அழகான பார்வதியை இடதுபுறகொண்டவர் வாமதேவர்.) வாமதேவருடைய பத்னி, அல்லது வாம மார்க்கமாக உபாசிப்பவர்களின் தேவீ.

470. வயதால் நிலைமாறாதவள்.

471. ஸித்தர்களின் ஈசுவரீ.

472. ஸித்தவித்யா ரூபிணீ. (பஞ்சதசீ மந்த்ரம் 'ஸித்த வித்யா' எனப்படும். பொதுவாக மந்திரங்களை 'ஸித்த-அரி-சக்ர சோதனம்' என்ற முறையில் இந்த மந்திரம் இந்த ஜாதகனுக்கு ஏற்றதா என்று பரீக்ஷித்தே உபதேசம் செய்ய வேண்டும். பஞ்சாக்ஷரிக்கும் பஞ்சதசாக்ஷரிக்கும் இப்பரீக்ஷை வேண்டியதில்லை. 'நித்யானாம் ஸித்த-மந்த்ரத்வாத் நாவேக்ஷ்யாஸ்-த்வம்சகாதய:'—காதிமதம்.)

473. ஸித்தர்களுக்குத் தாய். (ஸித்தர்களை ரக்ஷிப்பவள், ஒ. 'உசதீரிவமாதர:')

474. கீர்த்தி வாய்ந்தவள். (ஒ. 'தஸ்ய நாம மஹத்யச:' நாராயண உப. 1.2.10.)

475. (பதினாறுதள கமல) விசுத்தி சக்கரத்தில் இருப்பவள். (இந்தச் சக்கரத்தில் ஜீவன் பிரம்மத்தின் சமீபம் வந்து சுத்தனாவதால் இதற்கு விசுத்தி சக்கரம் என்பது பெயர். இந்த நாமத்திலிருந்து 534 வது நாமம் வரை யோகினீ ந்யாஸம் கூறப்படுகிறது. ஒ. க்ரீவா - கூபே விசுத்தெள

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

476. ஆரக்தவர்ணாயை
477. த்ரிலோசனாயை
478. கட்வாங்காதி-ப்ரஹரணாயை
479. வதனைக-ஸமன்விதாயை
480. பாயஸான்ன-ப்ரியாயை
481. த்வக்-ஸ்தாயை
482. பசுலோக-பயங்கர்யை
483. அம்ருதாதி-மஹாசக்தி-ஸம்வ்ருதாயை

ந்ருப-தல-கமலே ச்வேத-ரக்தாம் த்ரிநேத்ராம் ஹஸ்தை: கட்வாங்க-கட்கௌ த்ரிசிகமபி மஹா-சர்ம-ஸந்தாரயந்தீம் । வக்த்ரேணைகேன யுக்தாம் பசு-ஜந-பயதாம் பாயஸான்னைக-ஸக்தாம் த்வக்ஸ்தாம் வந்தே ऽம்ருதாத்யை: பரிவ்ருத-வபுஷாம் டாகினீம் வீரவந்த்யாம் ॥—பாஸ்கர ராயர் மேற்கோள்)

476. கொஞ்சம் சிவந்த வர்ணம் உள்ளவள். (பாடலீ புஷ்பத்தின் நிறம்).

477. முக்கண் உள்ளவள்.

478. கட்வாங்கம் முதலிய ஆயுதங்களை ஏந்தியவள்.

479. ஒரு முகம் உடையவள்.

480. பாயஸ அன்னத்தில் பிரியம் உள்ளவள்.

481. தோலின் உணர்ச்சியில் உறைபவள். (தோலின் அபிமானி தேவதையாக உறைபவள்.)

482. (அறிவிலிப் பசுக்களுக்குப்) பயத்தை உண்டாக்குபவள். (ஒ. யோऽன்யாம் தேவதா-முபாஸ்தே அன்யோஸௌ அன்யோऽஹமஸ்மீதி ந ஸ வேத யதா பசு:—ப்ரு. உப. ஒ. த்விதீயாத் வை பயம் பவதி । ஒ. அபயே பயதர்சின: । மா. காரிகை.)

483. அமிருதா (கர்ஷிணி, இந்திராணி, ஈசானி, உமா, ஊர்த்துவ கேசி) முதலிய மஹா சக்திகளால் சூழப்பட்டவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Cholinganallur, Chennai

484. டாகினீச்வர்யை
485. அநாஹதாப்ஜ-நிலயாயை
486. ச்யாமாபாயை
487. வதன-த்வயாயை
488. தம்ஷ்ட்ரோஜ்ஜ்வலாயை
489. அக்ஷமாலாதி-தராயை
490. ருதிர-ஸம்ஸ்திதாயை
491. காலராத்ர்யாதி-சக்த்யௌகவ்ருதாயை
492. ஸ்நிக்தௌதன-ப்ரியாயை
493. மஹாவீரேந்த்ர-வரதாயை

484. 'டாகினீசுவரி' எனப்பெயர் பெற்ற ரூபம் தரித்தவள்.

485. (பனிரண்டு தள) அனாஹத கமலத்தில் இருப்பவள். (ஒ. ஹ்ருத்பத்மே பானுபத்ரே த்விவதன லஸிதாம் தம்ஷ்ட்ரிணீம் ச்யாமவர்ணாம் அக்ஷம் சூலம் கபாலம் டமருமபி புஜைர்-தாரயந்தீம் த்ரிநேத்ராம் | ரக்தஸ்தாம் காலராத்ரி-ப்ரப்ருதி - பரிவ்ருதாம் ஸ்நிக்த-பக்தைக-ஸக்தாம் ஸ்ரீமத் வீரேந்த்ர வந்த்யா-மபிமத பலதாம் ராகினீம் பாவயாம: —பாஸ்கர ராயர் மேற்கோள். ||)

486. பச்சை கலந்த கறுப்பு வர்ணமானவள். (பதினாறு வயதுள்ள பெண் ச்யாமா.)

487. இரு முகங்கள் உள்ளவள்.

488. கோரைப் பற்களுடன் விளங்குபவள்.

489. ஜபமாலை முதலியவற்றைத் தரிப்பவள்.

490. ரத்தத்தில் உறைபவள். (ரத்தத்தின் அபிமானி தேவதை.)

491. காலராத்ரீ (கண்டிதா, காயத்ரீ, கண்டாகர்ஷிணீ...) முதலிய சக்தி ஸமூகத்தால் சூழப்பட்டவள்.

492. நெய் நிறைந்த அன்னத்தில் பிரியம் உள்ளவள்.

493. மஹா வீரேந்திரர்களுக்கு வரமளிப்பவள். (ஞானிகளே மஹா வீரர். ஒ. ஜாகராத் - யவஸ்தா-த்ரயேऽபி துரீயானு-ஸந்தான-பரா வீரேந்த்ரா:')

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

494. ராகிண்யம்பா-ஸ்வரூபிண்யை
495. மணிபூராப்ஜ-நிலயாயை
496. வதனத்ரய-ஸம்யுதாயை
497. வஜ்ராதிகாயுதோபேதாயை
498. டாமர்யாதிபி-ராவ்ருதாயை
499. ரக்தவர்ணாயை
500. மாம்ஸ-நிஷ்டாயை
501. குடான்னப்ரீத-மானஸாயை
502. ஸமஸ்த-பக்த ஸுகதாயை
503. லாகின்யம்பா-ஸ்வரூபிண்யை

---

494. 'ராகிணீ' எனப் பெயர் பெற்ற ரூபம் தரித்தவள்.

495. (பத்து தள) மணிபூரக கமலத்தில் இருப்பவள். (ஒ. திக்-பத்ரே நாபி-பத்மே த்ரிவதன-விலஸத்-தட்ஷ்ட்ரிணீம் ரக்த-வர்ணாம் சக்திம் தம்போலி-தண்டா-மபயமபி புஜைர்-தாரயந்தீம் மஹோக்ராம் । டாமர்யாத்யை: பரீதாம் பசுஜன-பயதாம் மாம்ஸ-தாத்-வேகநிஷ்டாம் கௌடான்னாஸக்த-சித்தாம் ஸகல-ஸுககரீம் லாகினீம் ப்ாவயாம: ॥—பாஸ்கர ராயர் மேற்கோள்.)

496. மூன்று முகங்கள் உடையவள்.

497. வஜ்ரம் (சக்தி, தண்டம், அபயமுத்திரை) முதலிய ஆயுதங்களுடன் கூடியவள்.

498. டாமரீ முதலியவர்களால் சூழப்பட்டவள்.

499. சிவப்பு வர்ணமானவள்.

500. மாம்ஸத்தில் உறைபவள். (மாம்ஸத்தில் அபிமானி தேவதையாய் உறைபவள்.)

501. வெல்லங் கலந்த அன்னத்தில் பிரியமுள்ளவள்.

502. எல்லாப் பக்தர்களுக்கும் சுகத்தைத் தருபவள்.

503. 'லாகினீ' எனப்பெயர் பெற்றவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Sholinganallur, Chennai

504. ஸ்வாதிஷ்டானாம்புஜ-கதாயை
505. சதுர்வக்த்ர-மனோஹராயை
506. சூலாத்யாயுத-ஸம்பன்னாயை
507. பீதவர்ணாயை
508. அதி-கர்விதாயை
509. மேதோ-நிஷ்டாயை
510. மது-ப்ரீதாயை
511. பந்தின்யாதி-ஸமன்விதாயை
512. தத்யன்னாஸக்த-ஹ்ருதயாயை

---

504. (ஆறு தள) ஸ்வாதிஷ்டான கமலத்தில் இருப்பவள். (ஓ. ஸ்வாதிஷ்டானாக்யபத்மே ரஸதல-லஸிதே வேத-வக்த்ராம் த்ரிநேத்ராம் ஹஸ்தாப்யாம் தாரயந்தீம் த்ரிசிக-குண-கபாலாபயான்யாத்த-கர்வாம் । மேதோ-தாது-ப்ரதிஷ்டா-மலி-மத-முதிதாம் பந்தினீ- முக்ய-யுக்தாம் பீதாம் தத்யோதனேஷ்டா-மபிமத பலதாம் காகினீம் பாவயாம: ॥ —பாஸ்கர ராயர் மேற்கோள்.)

505. நான்கு அழகிய முகங்களை உடையவள்.

506. சூலம் (பாசம், கபாலம்) முதலிய ஆயுதங்களை உடையவள்.

507. பொன் நிறமானவள்.

508. (அழகினால்) மிக்க கர்வம் உள்ளவள்.

509. கொழுப்பைத்தரும் தாதுவில் இருப்பவள். (தாதுவின் அபிமானி தேவதையாய் இருப்பவள்.)

510. தேனில் பிரியம் உள்ளவள். (தேன் ஹோமம் தேவிக்கு மிகப் பிரியமானது.)

511. பந்தினீ (பத்ரகாளீ, மஹாமாயா...) முதலியவர்களால் சூழப்பட்டவள்.

512. தயிர்ச் சாதத்தில் பிரியம் உள்ளவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

513. காகினீ-ரூப-தாரிண்யை
514. மூலாதாராம்புஜாரூடாயை
515. பஞ்ச-வக்த்ராயை
516. அஸ்தி-ஸம்ஸ்திதாயை
517. அங்குசாதி-ப்ரஹரணாயை
518. வரதாதி-நிஷேவிதாயை
519. முத்கௌதனாஸக்த-சித்தாயை
520. ஸாகின்யம்பா ஸ்வரூபிண்யை
521. ஆஜ்ஞா-சக்ராப்ஜ-நிலயாயை

---

513. 'காகினீ' எனப் பெயர் பெற்ற ரூபம் தரித்தவள்.

514. (நாலு தள) மூலாதாரக் கமலத்தில் வீற்றிருப்பவள். (ஒ. மூலாதாரஸ்த-பத்மே ச்ருதி-தல-லஸிதே பஞ்ச வக்த்ராம் த்ரிநேத்ராம் தூமாபா-மஸ்தி-ஸம்ஸ்தாம் ஸ்ருணி-மபி கமலம் புஸ்தகம் ஜ்ஞானமுத்ராம் || பிப்ராணாம் பாஹு-தண்டை: ஸுலலிதவரதா-பூர்வசக்த்யாவ்ருதாம் தாம் முத்கான்னாஸக்த-சித்தாம் மது-மத-முதிதாம் ஸாகினீம் பாவயாம: ||—பாஸ்கர ராயர் மேற்கோள்.)

515. ஐந்து முகம் உள்ளவள்.

516. எலும்பில் (அபிமானி தேவதையாய்) உறைபவள்.

517. அங்குசம் (தாமரை, புஸ்தகம், ஞானமுத்ரை) முதலிய ஆயுதங்களைத் தாங்கியவள்.

518. வரதா முதலிய சக்திகளால் சூழப்பட்டவள்.

519. பயத்தம் பருப்புக் கலந்த அன்னத்தில் பிரியம் உள்ளவள். (அரிசி, பயத்தம் பருப்பு, வெல்லம், தேங்காய், சீரகம், நெய், பால் முதலியவற்றைக் கூட்டிச் சமைத்தது முத்கான்னம் எனப்படும்.)

520. 'ஸாகினீ' எனப் பெயர் பெற்ற ரூபம் தரித்தவள்.

521. (இரண்டு தள) ஆஜ்ஞா சக்கரத் தாமரையில் இருப்பவள். (ஒ. ப்ரூமத்யே பிந்துபத்மே தலயுக-கலிதே சுக்ல-வர்ணாம் கராப்ஜைர் பிப்ராணாம் ஜ்ஞான முத்ராம் டமருக-மமலாம்-அக்ஷமாலாம் கபாலம் |

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

522. சுக்லவர்ணாயை
523. ஷடானனாயை
524. மஜ்ஜா-ஸம்ஸ்தாயை
525. ஹம்ஸவதீ-முக்ய-சக்தி-ஸமன்விதாயை
526. ஹரித்ரான்னைக-ரஸிகாயை
527. ஹாகினீரூப-தாரிண்யை
528. ஸஹஸ்ரதல-பத்மஸ்தாயை
529. ஸர்வ-வர்ணோப-சோபிதாயை

ஷட்சக்ராதார-மத்யாம் த்ரிநயனலஸிதாம் ஹம்ஸவத்-யாதி யுக்தாம் ஹரித்ரான்னைகஸக்தாம் ஸகல - ஸுககரீம் ஹாகினீம் பாவயாம: ||—பாஸ்கர ராயர் மேற்கோள்.)

522. வெண்மை நிறம் உள்ளவள்.
523. ஆறுமுகம் உள்ளவள்.
524. மஜ்ஜை எனும் தாதுவில் (அபிமானி தேவதையாக) உறைபவள்.
525. ஹம்ஸவதீ (க்ஷமாவதீ) முதலான சக்திகளுடன் கூடியவள்.
526. மஞ்சள் பொங்கலில் பிரியமுள்ளவள்.
527. 'ஹாகினீ' எனப் பெயர் பெற்ற ரூபம் தரித்தவள்.
528. ஆயிரம் தளமுடைய கமலத்தில் இருப்பவள். (ஒ. முண்டவ்யோமஸ்த-பத்மே தச-சத - தலகே கர்ணிகா-சந்த்ர - ஸம்ஸ்தாம், ரேதோ-நிஷ்டாம் ஸமஸ்தாயுத-கலித-கராம் ஸர்வதோ-வக்த்ர-பத்மாம்। ஆதி-க்ஷாந் தார்ண-சக்தி-ப்ரகட-பரிவ்ருதாம் ஸர்வ வர்ணாம் பவானீம் ஸர்வான்னாஸக்த-சித்தாம் பரசிவ-ரஸிகாம் யாகினீம் பாவயாம: ||—பாஸ்கர ராயர் மேற்கோள்.)
529. எல்லா வர்ணங்களாலும் ப்ரகாசிப்பவள். (அக்ஷரங்கள் யோகிகளின் மனக்கண்ணுக்கு வெவ்வேறு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

530. ஸர்வாயுத-தராயை
531. சுக்ல-ஸம்ஸ்திதாயை
532. ஸர்வதோ-முக்யை
533. ஸர்வௌதன-ப்ரீத-சித்தாயை
534. யாகின்யம்பா-ஸ்வரூபிண்யை
535. ஸ்வாஹா

வர்ணங்களுடன் தோன்றுவதால் அவற்றிற்கும் வர்ணங்கள் எனப்பெயர். வர்ணங்கள் 'அ' முதல் 'க்ஷ' வரை அனுலோமமாக ஐம்பது, 'க்ஷ' விலிருந்து விலோமமாக ஐம்பது ஆக நூறு; அங்ஙனம் பத்துத் தடவையாக ஆயிரம். 'ஸர்வவர்ண-உப-சோபிதா' என்பதில் 'உப' எனும் பதம் பரிபாஷைப்படி பத்து என்ற எண்ணைக் குறிக்குமாதலால் பத்து நூறு அல்லது ஆயிரம் குறிக்கப்பட்டதாகும்.)

530. எல்லா ஆயுதங்களையும் தரித்தவள். (ஒ. ஸஹஸ்ராணி ஸஹஸ்ரதா பாஹ்வோஸ்-தவ ஹேதய:—ஸ்ரீருத்ரம் 25.3.)

531. சுக்கில தாதுவில் அபிமானி தேவதையாய் இருப்பவள்.

532. எங்கும் முகம் உள்ளவள். (ஒ. விச்வதச்சக்ஷு-ருதவிச்வதோமுக: —நாராயண உப. 1.3.5.)

533. எல்லா அன்னங்களிலும் ப்ரீதியுள்ளவள்.

534. 'யாகினீ' எனப்பெயர் பெற்ற ரூபம் தரித்தவள்.

535. (இனி விபூதி விஸ்தாரமும் மார்க்க பேதங்களின் ஸாமரஸ்யமும் வர்ணிக்கப்படுகின்றன.) 'ஸ்வாஹா' வடிவானவள். (தேவர்களுக்கு ஹோமத்தில் சொல்ல வேண்டியது ஸ்வாஹா, வஷட், வௌஷட் அல்லது ச்ரௌஷட். ஒ. ஸுஷ்டு ஆஹூயதே அநயா இதி 'ஸ்வாஹா'. ஒ. 'ஸ்வாஹா வஹ்ன்யாத்மனஸ்-தஸ்ய ப்ரோக்தா பசுபதே: ப்ரியா । ஷண்முகோ பகவான் தேவோ புதை: புத்ர உதாஹ்ருத: ।—லிங்க புராணம்.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Chromepet, Chennai

536. ஸ்வதா
537. அமத்யை
538. மேதாயை
539. ச்ருத்யை
540. ஸ்ம்ருத்யை
541. அனுத்தமாயை
542. புண்யகீர்த்யை
543. புண்யலப்யாயை

536. ‘ஸ்வதா’ ரூபமானவள். (ஒ. தேவேப்ய: ஸ்வாஹா। பித்ருப்ய: ஸ்வதாஸ்து। பூதேப்யோ நம:। மனுஷ்யேப்யோ ஹந்த —நாராயண உப. *88.1.4* ஒ. ஸ்வாஹாஸி வை பித்ருகணஸ்ய ச த்ருப்தி-ஹேது-ருச்சார்யஸே த்வமத ஏவ ஜனை: ஸ்வதா ச ॥ தேவீ மாஹாத்மியம் *4.8.* ஸ்வதா, ஸ்வாஹா என்ற பதங்கள் அவ்யயம். ஆகையால் ஸ்வதா நம: ஸ்வாஹா நம: என்று பிரயோகம். வேறு விதமாக அர்த்தம் செய்தால் ஸ்வதாயை ஸ்வாஹாயை எனவும் கொள்ளலாம்.)

537. அவித்தை வடிவானவள்.

538. புத்தியாக இருப்பவள். (ஒ. மேதா தேவீ ஜுஷமாணா ந ஆகாத்-விச்வாசீ பத்ரா ஸுமனஸ்யமானா... த்வயா ஜுஷ்ட ருஷிர்ப்பவதி தேவி। நாராயண உப. *59.1.* ஒ. மேதாஸி தேவி விதிதாகில-சாஸ்த்ர-ஸாரா—தேவீ மாஹாத்மியம். *4.11.*)

539. வேத ரூபிணி.

540. ஸ்மிருதி ரூபிணி. (வேதத்தின் பொருளைத் தழுவி ரிஷிகள் எழுதிய வழிநூல்கள் ஸ்மிருதி. அல்லது ஞாபகசக்தி. ஒ. ‘ஸ்ம்ருதிர்-மேதா-த்ருதி: க்ஷமா’—கீ. *10.34.*)

541. தன்னினும் மிக்கார் இல்லாதவள்.

542. புண்ணியமான கீர்த்தி உள்ளவள்.

543. புண்ணியத்தால் அடையத்தக்கவள். (ஒ. ப்ரணந்தும் ஸ்தோதும் வா கத-மக்ருத-புண்ய: ப்ரபவதி —ஸௌ. ல. *1*)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

544. புண்யச்ரவண-கீர்த்தனாயை
545. புலோமஜார்ச்சிதாயை
546. பந்த-மோசன்யை
547. பர்ப்பராலகாயை
548. விமர்ச-ரூபிண்யை
549. வித்யாயை
550. வியதாதி-ஜகத்-ப்ரஸூவே
551. ஸர்வ-வ்யாதிப்ரசமன்யை
552. ஸர்வ-ம்ருத்யு-நிவாரிண்யை
553. அக்ர-கண்யாயை

544. *(தன் பெருமையைக்) கேட்பவர்க்கும் கீர்த்தனம் செய்பவர்க்கும் புண்ணியம் அளிப்பவள்.*

545. *இந்திராணியால் பூஜிக்கப்பட்டவள்.*

546. *பிறவித்தளைகளினின்று விடுவிப்பவள்.*

547. *அலைபோல் அடுக்கடுக்காகச் சுருண்ட முன் மயிருடையவள். (பந்துராலகா என்றும் பாடம்.)*

548. *விமர்ச வடிவினள். (சிவன் ப்ரகாச ரூபம்; சக்தி விமர்சரூபம்; இதுவே அர்த்தநாரீச்வர தத்துவம். ஒ. வாகர்த்தாவிவ ஸம்ப்ருக்தௌ—ரகுவம்சம். 1.1. 'வாக்' விமர்சம், 'அர்த்தம்' பிரகாசம்.)*

549. *வித்தை வடிவானவள். (ஒ. 'வித்யாஸி ஸா பகவதீ பரமா ஹி தேவி'—தேவீ மாஹாத்மியம், 4.9. ஒ. த்வே வித்யே வேதிதவ்ய இதி ஹஸ்ம யத் ப்ரஹ்ம விதோ வதந்தி—மு. உப. 1.1.4. முக்தி தருவதே வித்தை.)*

550. *ஆகாசம் முதலிய ஜகத்தைப் படைத்தவள். (ஒ. ஏதஸ்மாத் ஆத்மன ஆகாச: ஸம்பூத:'—தை. உப. 2.1.7.)*

551. *எல்லா நோய்களையும் போக்குபவள்.*

552. *எல்லாவிதமான மரணத்தையும் தவிர்ப்பவள்.*

553. *முதன்மையாக எண்ணப்படுகிறவள். (ஒ. தேவானாம் கணனா-ப்ரஸங்கஸமயே த்வாம் அக்ர - கண்யம் விது: । சிவானந்த லஹரீ. 100.)*

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

554. அசிந்த்ய-ரூபாயை
555. கலி-கல்மஷ-நாசின்யை
556. காத்யாயன்யை
557. காலஹந்த்ர்யை
558. கமலாக்ஷ-நிஷேவிதாயை
559. தாம்பூல-பூரித-முக்யை
560. தாடிமீ-குஸுமப்ரபாயை
561. ம்ருகாக்ஷ்யை
562. மோஹின்யை
563. முக்யாயை

---

554. சிந்திக்க முடியாதவள்.
555. கலிதோஷத்தைப் போக்குபவள்.
556. காத்யாயனி வடிவினள். (ஓட்டியாணபீடத்தில் காத்யாயனி. மூலாதாரம் காமகிரி, அனாஹதம் பூர்ணகிரி, விசுத்தி ஜாலந்தரம், ஆஜ்ஞா ஓட்டியாணம். ஒ. 'காத்யாயனீ ச ஓட்யானே' காமாக்யா காமரூபகே । பூர்ணேச்வரீ பூர்ணகிரௌ, சண்டீ ஜாலந்தரே ஸ்ம்ருதா ॥ —காளிகா புராணம். கோபிகள் காத்யாயனி விரதமனுஷ்டித்தனர்.)
557. காலனை ஸம்ஹரிப்பவள்.
558. விஷ்ணுவினால் ஆராதிக்கப்பட்டவள். (ஒ. ஹரிஸ்-த்வாம் ஆராத்ய—ஸௌ. ல. 5.)
559. தாம்பூலம் நிறைந்த வாயினள்.
560. மாதுளம் பூப்போன்ற (சிவந்த) மேனி படைத்தவள். (ஒ. 'மாதுளம் பூ நிறத்தாளை' —அபிராமி அந்தாதி.)
561. மான்விழி உடையவள்.
562. மோஹிக்கச் செய்பவள். (ஒ. ஸர்வ-ஸம்மோஹ-ஜநகம் அவாங்மனஸ-கோசரம் । யத்தர்சனா-தபூதீச: ஸர்வஜ்ஞோऽபி விமோஹித: ॥—பிரம்மாண்ட புராணம்.)
563. முதன்மையானவள். (மற்ற தேவதைகளை அங்கமாகவும் ஆவரணமாகவும் உடையவள்.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

564. ம்ருடான்யை
565. மித்ர-ரூபிண்யை
566. நித்ய-த்ருப்தாயை
567. பக்த-நிதயே
568. நியந்த்ர்யை
569. நிகிலேச்வர்யை
570. மைத்ர்யாதி-வாஸனா-லப்யாயை
571. மஹா-ப்ரலய-ஸாக்ஷிண்யை
572. பரஸ்யை சக்த்யை

564. சுகத்தை அளிப்பவள்.
565. மித்ரன் வடிவினள். (மித்ரன் என்றால் நண்பன், அல்லது உலகுக்கெல்லாம் நண்பனான சூரியன். ஒ. 'மித்ரோ ஜனான் யாதயதி ப்ரஜானன்' — ஸந்தியோபஸ்தானம்).
566. எப்போதும் (ஸ்வரூப ஆனந்தத்தால்) திருப்தி யுற்றவள்.
567. பக்தர்களின் செல்வக்குவியல்.
568. அடக்கி ஆள்பவள்.
569. எல்லாவற்றிற்கும் ஈசுவரி.
570. 'மைத்ரி' முதலிய வாசனைகளால் அடையத் தக்கவள், (ஒ. மைத்ரீ - கருணா - முதித-உபேக்ஷாணாம் ஸுக-து:க்க-புண்யா-புண்ய-விஷயாணாம் பாவனாதச் - சித்தப்ரஸாதனம்—பாதஞ்ஜல யோக ஸூத்ரம், 1.33.)
571. மஹாப்பிரளய காலத்தில் ஸாக்ஷியாக இருப்பவள். (ஒ. 'விரிஞ்சி: பஞ்சத்வம் வ்ரஜதி.' ஸௌ. ல. 26. ஒ. 'ஸுமங்கலீ-ரியம் வதூ-ரிமாம் ஸமேத பச்யத'— சுருதி.)
572. பராசக்தி ரூபிணீ. (ஒ. 'பராஸ்ய சக்திர்-விவிதைவ ச்ரூயதே—ச்வே. உப. இந்த நாமம் பராசக்த்யை நம: என்றும் வரும்.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

573. பராயை நிஷ்டாயை
574. ப்ரஜ்ஞான-கன-ரூபிண்யை
575. மாத்வீபானாலஸாயை
576. மத்தாயை
577. மாத்ருகா-வர்ண-ரூபிண்யை
578. மஹாகைலாஸ-நிலயாயை
579. ம்ருணால-ம்ருது-தோர்லதாயை

---

573. நிஷ்டையின் எல்லை வடிவிலிருப்பவள். (இந்த நாமம் 'பரா நிஷ்டாயை நம:' என்றும் வரும்.)

574. ப்ரஜ்ஞானமே வடிவானவள். (ஒ. 'ஸ யதா ஸைந்தவ கன: அயமாத்மானந்தரோ ऽபாஹ்ய: க்ருத்ஸ்ன: ப்ரஜ்ஞான - கன ஏவ.—ப்ரு. உப. 4.5.13.)

575. மதுபானத்தால் வெளிநாட்டம் அற்றிருப்பவள்.

576. (உள் நாட்டத்தால்) மயங்கியவள் போலிருப்பவள். ('அந்தர் லக்ஷ்யம் பஹிர்-த்ருஷ்டி:')

577. மாத்ருகா வர்ணரூபமாக இருப்பவள். (ஸநந்தன ஸம்ஹிதையில் மாத்ருகைகளையும் ஸ்ரீசக்கரத்தையும் ஒன்றாகப் பாவனை செய்தல் கைலாஸ ப்ரஸ்தாரம் எனக்கூறப்பட்டுள்ளது. அம்முறையில் ஆராதிக்கப் படுபவள். திதி, நித்யா, நியாஸத்தால் ஆராதனை மேரு ப்ரஸ்தாரம். வாக்தேவதா நியாஸத்தால் ஆராதனை, பூப்ரஸ்தாரம்.)

578. மஹாகைலாஸத்தில் வீற்றிருப்பவள். (பிரம்ம ரந்திரமே மஹா கைலாஸம். ஒ. 'ஏதத் கைலாஸ-ஸம்ஜ்ஞும் பத-மகல-பதம் பிந்து ரூபீ ஸ்வரூபீ யத்ராஸ்தே தேவ தேவ:' —த்ரிபுராஸாரம். மாத்ருகா ந்யாஸத்தால் அங்ஙனம் காணப்படுகிறவள்.)

579. தாமரைக் கொடிபோன்ற மெதுவான புஜங்களை உடையவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

580. மஹநீயாயை
581. தயாமூர்த்யை
582. மஹாஸாம்ராஜ்ய-ஸாலின்யை
583. ஆத்மவித்யாயை
584. மஹா வித்யாயை
585. ஸ்ரீவித்யாயை
586. காம-ஸேவிதாயை
587. ஸ்ரீஷோடசாக்ஷரீ-வித்யாயை

---

580. போற்றுதற்கு உரியவள். (ஒ. 'போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்'—திருவெம்பாவை 20.)

581. கருணை வடிவானவள்.

582. உலகை ஆள்பவர்க்கெல்லாம் தலைவியாய் விளங்குபவள்.

583. ஆத்ம வித்யா ஸ்வரூபிணி.

584. மஹா வித்யா வடிவானள். (நவதுர்கா வித்யை மஹா வித்தை எனப்படும்.)

585. ஸ்ரீவித்யா வடிவானவள். (தேவீ உபாஸனை எல்லாம் பொதுவாக ஸ்ரீவித்தை எனினும், பஞ்சதசாக்ஷரீ மந்திரத்திற்கே ஸ்ரீவித்யை எனும் சிறப்புப் பெயர் பொருந்தும். ஒ. யஜ்ஞவித்யா மஹா வித்யா குஹ்ய வித்யா ச சோபனே । ஆத்மவித்யா ச தேவி த்வம் விமுக்தி-பல-தாயினீ'—விஷ்ணுபுராணம். உபாஸனைகள் மஹாவித்தை; மந்திரங்கள் குஹ்யவித்தை.)

586. மன்மதனால் பூஜிக்கப்பட்டவள். (அல்லது காமேசுவரரால் பூஜிக்கப்பட்டவள். ஒ. 'புத்ரோ நிர்ருத்யா வைதேஹ: । அசேதா யச்ச சேதன: । ஸ தம் மணி-மவிந்தத்' —ஆருணம், 5.36.)

587. ஸ்ரீஷோடசாக்ஷரீவித்தை வடிவானவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

588. த்ரிகூடாயை
589. காமகோடிகாயை
590. கடாக்ஷ-கிங்கரீபூத-
கமலா கோடி-
ஸேவிதாயை
591. சிர: ஸ்திதாயை
592. சந்த்ர-நிபாயை
593. பால-ஸ்தாயை
594. இந்த்ர-தனு: ப்ரபாயை
595. ஹ்ருதயஸ்தாயை
596. ரவி-ப்ரக்யாயை

---

588. மும்மூன்றாகவுள்ள தொகுதிகளின் வடிவினள். (ஒ. ப்ரணவோ ஹி பரம் தத்வம் த்ரிவேதம் த்ரிகுணாத்மகம் । த்ரிதேவஞ்ச த்ரிதாமஞ்ச த்ரிப்ரஜ்ஞும் த்ரிரவஸ்த்திதம் । த்ரிமாத்ரஞ்ச த்ரிகாலஞ்ச த்ரிலிங்கம் கவயோ விது: । ஸர்வமேதத் த்ரிரூபேண வ்யாப்தம் ஹி ப்ரணவேன து ॥—ப்ருஹத் பராசர ஸ்ம்ருதி.)

589. காமகோடியாக இருப்பவள். (சிவ ஸமானமாயிருப்பவள். அல்லது காமகோடி பீடத்தில் இருப்பவள்.)

590. கடாக்ஷத்தை வேண்டிப் பணி செய்யும் கோடி லக்ஷ்மிகளை உடையவள்.

591. சிரசிலிருப்பவள். (பிரம்ம ரந்திரத்தில் மஹா பிந்துவில்).

592. (பூரண) சந்திரன் போன்றவள்.

593. நெற்றியில் இருப்பவள்.

594. வானவில்போல் (அர்த்த சந்திர வடிவாக) பிரகாசிப்பவள்.

595. இருதயத்தில் இருப்பவள்.

596. சூரியனைப்போன்ற காந்தியுள்ளவள். (ஒ. 'மத்யே ஹ்ருதயம் மத்யே நிடிலம், சிரோபி வாஸ்தவ்யாம் । சண்டகர-சக்ர-கார்முக-சந்த்ர-ஸமாபாம்' ॥—மூக பஞ்சசதீ.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

597. த்ரிகோணாந்தர-தீபிகாயை
598. தாக்ஷாயண்யை
599. தைத்ய-ஹந்த்ர்யை
600. தக்ஷயஜ்ஞ-விநாசின்யை
601. தராந்தோலித-தீர்காக்ஷ்யை
602. தரஹாஸோஜ்ஜ்வலன்-முக்யை
603. குருமூர்த்தயே

---

597. (மூலாதார) முக்கோணத்தில் தீபம் போன்றவள்.

598. தாக்ஷாயணி (தக்ஷப்பிரஜாபதியின் பெண்ணாகத் தோன்றி பரமசிவன் பத்தினி ஆகியவள்).

599. அசுரர்களைக் கொல்பவள்.

600. தக்ஷயஜ்ஞத்தை அழித்தவள். ('நான் பெரியவன், பலவான் எனக்கு எவரும் நிகரில்லை, நான் யஜ்ஞங் களைச் செய்பவன், தானங் கொடுப்பவன்' என்று கர்வப்படுவோர் செய்யும் பூஜைகளும் தானங்களும் தவங்களும் பயனற்றவை. அவை தக்ஷயஜ்ஞம் போன்றவை. அவற்றை தேவி அழிக்கின்றாள். ஒ. 'ஈச்வரோஹ-மஹம் போகீ...யக்ஷ்யே தாஸ்யாமி மோதிஷ்ய இத்யஜ்ஞான-விமோஹிதா:'— கீ. 16.14-15.)

601. சிறிது சலிக்கும் நீண்ட கண்களை உடையவள். (அ. 'தரம் பயம் ஆந்தோலிதம் அஸ்திரீக்ருதம் நாசிதம் । கடாக்ஷபாத மாத்ரேண பயநாச:')

602. புன்சிரிப்பால் பிரகாசிக்கும் முகம் உடையவள்.

603. குரு ரூபிணீ. ('தேவி, மந்திரம், குரு மூன்றும் ஒன்று' என்று உபாசிக்க வேண்டும், ஒ. 'தேசிக ரூபேண தர்சிதாப்யுதயாம்'—நவரத்னமாலா ஸ்தோத்ரம்: காளி தாஸன்).

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

604. குணநிதயே
605. கோமாத்ரே
606. குஹஜன்ம-புவே
607. தேவேச்யை
608. தண்டநீதிஸ்தாயை
609. தஹராகாச-ரூபிண்யை

604. குணங்களுக்கு இருப்பிடமானவள். (முக்குணங்களுக்கும் அவைகளின் வேற்றுமைகளுக்கும் இருப்பிடம். அல்லது 'கால-குல-நாம-ஞான-சித்-நாத-பிந்து-கல்ப-ஜீவ' என்ற ஒன்பது வ்யூஹங்களுக்கு இருப்பிடம்.)

605. (கோமாதாவாகிய) காமதேனு வடிவினள். ('கோ' என்ற பதம் ஸ்வர்க்கம், சந்திரன், பூமி, வாக்கு, அக்னி, ஸத்யம் என்று பல பொருள் உடையதால் பெருமை வாய்ந்த அனைத்திற்கும் தாய் என்பது பொருந்தும்.)

606. குமரக் கடவுளின் ஜன்மஸ்தானம், (குஹர்கள் என்றால் ஜீவாத்மாக்கள் எனவுங்கொள்ளலாம். ஒ. 'குஹாம் ப்ரவிஷ்டௌ பரமே பரார்த்தே'—கட. உப. 3.1.)

607. தேவர்களுக்கு ஈசுவரி.

608. (குற்றஞ் செய்தவர்களைத்) தண்டிக்கும் நீதி சாஸ்திரத்தில் இருப்பவள். ஒ. 'தண்டோ தமயதா-மஸ்மி'— கீ. 10.38.)

609. தஹராகாச வடிவினள். ஒ. 'தஹரோ ऽஸ்மின்னந்த-ராகாசஸ்-தஸ்மின் யதந்தஸ்-ததன்வேஷ்டவ்யம்' சா. உப. 8.1.1. ஒ. 'வேதஜ்ஞா தர்ம-மேதம் ப்ரவிதத-மகிலாதார-மாகாசமாஹு: கிஞ்சானந்தம் மனோவாகவிஷய-மதிகம் தர்மிணோ வர்ணயந்தி । ஸத்தாஸ்பூர்த்தி: ஸுகஞ் ச த்ரயமபி ஜகதாம் ஸங்கிரந்தே ததம்சம் ப்ராணாகாசாத்யுபாஸ்தீ: கதிசிதபி ததாலம்பனாஸ்தே வதந்தி'—ரத்னத்ரய பரீக்ஷை— அப்பைய தீக்ஷிதர்.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

610. ப்ரதிபன்-முக்ய-ராகாந்த-திதி மண்டல-பூஜிதாயை
611. கலாத்மிகாயை
612. கலாநாதாயை
613. காவ்யாலாப-விமோதின்யை
614. ஸசாமர-ரமாவாணீ-ஸவ்ய தக்ஷிண-ஸேவிதாயை
615. ஆதிசக்த்யை
616. அமேயாயை

610. பிரதமை முதல் பௌர்ணமி வரையுள்ள 15 திதி மண்டலத்தில் பூஜிக்கப்படுபவள்.

611. கலைவடிவாக இருப்பவள். (சந்திரகலை 16, சூரிய கலை 12, அக்னிகலை 10 இவற்றின் வடிவானவள். அல்லது 64 கலை வடிவானவள். அல்லது எண்ணம், எழுச்சி, நினைவு, விழிப்பு என்ற ஜாக்ர நிலைச் சக்திக் கலை நான்கு—ஞாபகம், சிந்தை, பிரமம், ஆசை என்ற ஸ்வப்ன நிலைச் சிவசக்திக்கலை நான்கு—மரணம், மறதி, மூர்ச்சை, நித்ரை என்ற ஸுஷுப்திநிலைச் சிவ கலைகள் நான்கு—நித்யாநித்ய விவேகம், வைராக்கியம், மோக்ஷ இச்சை, ஸமாதி என்ற துரீயகலைகள் நான்கு—ஆகப் பதினாறு கலைகள் வடிவாயிருப்பவள்.)

612. கலைகளுக்குத் தலைவி.

613. காவிய வர்ணனைகளில் களிப்பவள்.

614. இடத்தும் வலத்தும் (செல்வமும்) லக்ஷ்மியும், (கல்வியும்) ஸரஸ்வதியும் சாமரங்கொண்டு சேவிக்கப் பெற்றவள்.

615. (உலகிற்கு) முதற்காரணமாகவும் முழுச்சக்தியாகவும் இருப்பவள்.

616. அளவிட முடியாதவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

617. ஆத்மனே
618. பரமாயை
619. பாவனாக்ருதயே
620. அநேக-கோடி-ப்ரஹ்மாண்ட-ஜனன்யை
621. திவ்ய-விக்ரஹாயை
622. க்லீங்-கார்யை
623. கேவலாயை

617. ஆத்மாவாக இருப்பவள். (ஆத்ம சப்தத்தில் சரீரமே இங்கு குறிக்கப் படுவதாய்க் கொள்ளலாம். ஒ. 'கௌரீரூபாணி ஸர்வாணி சரீராணி சரீரிணாம் । சரீரிணஸ்-ததா ஸர்வே சங்கராம்சா வ்யவஸ்திதா: ॥' அல்லது 'ஆத்மா தேஹ-மனோ-ப்ரஹ்ம-ஸ்வபாவ-த்ருதி-புத்திஷு' என்ற வகையில் மற்ற அர்த்தங்களுங் கொள்ளலாம்.)

618. எல்லாவற்றிலும் சிறந்தவள். (அல்லது பரம் பொருளை அளவுக்கு உட்படுத்தி நமக்குக் காண்பிப்பவள்:— 'பரம்-ப்ரஹ்ம-மாதி இதி பரமா.' அல்லது பரப்ரஹ்ம-மஹிஷீ பரமா.' ஒ. மஹாமாயா விச்வம் ப்ரமயஸி பரப்ரஹ்ம-மஹிஷீ'—ஸௌ. ல. 97.)

619. பரிசுத்தமே உருக்கொண்டவள். (ஒ. வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப் போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்— திருப்பாவை 5.)

620. அனேக கோடி பிரம்மாண்டங்களைப் படைத்தவள்.

621. அழகிய உருவம் படைத்தவள். (ஆகாயத்தில் நின்று யுத்தம் செய்பவள்.)

622. க்லீங்கார பீஜ வடிவினள்.

623. தான் தானேயாகி நிற்பவள். (அல்லது க்லீங்காரத்தில் 'க'கார, 'ல'காரங்களை விட்டுக் கேவல காம கலா ரூபமான 'ஈங்கார' வடிவிலிருப்பவள். 'கேவல துரீய ஸ்வரூபா காம-கலா' ஒ. யதீம் ச்ருணோத்யலகம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

624. குஹ்யாயை
625. கைவல்யபத-தாயின்யை
626. த்ரிபுராயை
627. த்ரிஜகத்-வந்த்யாயை
628. த்ரிமூர்த்தயே
629. த்ரிதசேச்வர்யை
630. த்ர்யக்ஷர்யை

ச்ருணோதி ந ஹி ப்ரவேத ஸுக்ருதஸ்ய பந்தா-மிதி'- ஆருணம் 8.1. 'காமபீஜேன த்ரிவர்க: காமகலா மாத்ரேண து மோக்ஷ இதி பர்யவஸிதோऽர்த்த:'—பா.)

624. மிக ரகசியமானவள். (அ. 'குஹாம் ப்ரவிஷ்டா குஹ்யா.')

625. கைவல்யத்தையும் பதவிகளையும் அளிப்பவள். (அ. கைவல்யஞ் ச பதானி ச தாதும் சீலம் அஸ்யா: — பதவிகள் நான்கு:—ஸாலோக, ஸாரூப, ஸாமீப, ஸாயுஜ்யம்: இவை உபாஸனாமார்க்க பலன். கைவல்யம் உத்தம ஞானத்தால் எய்தப்பெறும் நித்தியானந்தம்.)

626. மும்மூர்த்திகளுக்கும் முந்தியவள். (அல்லது மூம் மூன்று வடிவான எல்லாவற்றிலும் உறைபவள். ஓ. 'ஸர்வம் த்ரயம் த்ரயம் யஸ்மாத் தஸ்மாத் து த்ரிபுரா மதா.)

627. மூன்று உலகங்களாலும் வணங்கத் தக்கவள்.

628. மும்மூர்த்தி வடிவானவள்.

629. தேவர்களுக்கெல்லாம் ஈசுவரி.

630. மூன்று அக்ஷர ரூபமானவள். (பாலா மந்திர ரூபிணீ. 'ஓம் ஜூம் ஸ:' என்ற ம்ருத்யுஞ்ஜயம் முதலிய மூவெழுத்து மந்திரங்களும் சித்சக்தியில் ஸ்வரூபங்களாக வழிபடப்படும்பொழுது பரதேவதையையே குறிக்கும்.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

631. திவ்ய-கந்தாட்யாயை
632. ஸிந்தூர-திலகாஞ்சிதாயை
633. உமாயை
634. சைலேந்த்ர-தநயாயை
635. கௌர்யை
636. கந்தர்வ-ஸேவிதாயை
637. விச்வ-கர்பாயை
638. ஸ்வர்ண-கர்பாயை
639. அவரதாயை
640. வாகதீச்வர்யை

---

631. தெய்வீக வாசனையுடன் கூடியவள். (ஒ. 'கந்த த்வாராம் துராதர்ஷாம்.' ஸ்ரீஸூக்தம்)

632. ஸிந்தூரப் பொட்டால் அலங்கரிக்கப் பெற்றவள்.

633. 'உமா' எனப் பெயர் பெற்றவள். (ஏழுவயதுள்ள கன்னிகைக்கு உமா எனப் பெயர். 'உமா' என்பது தேவீ பிரணவம். 'அகார உகார மகாரா மதீயே ப்ரணவே ஸ்திதா: । உகாரஞ்ச மகாரஞ்ச அகாரஞ்ச க்ரமேரிதம் । த்வதீயம் ப்ரணவம் வித்தி த்ரிமாத்ரம் ப்லுத-முத்தமம் ॥—லிங்க புராணம். 'பரானுபூதிம் பவபாச-நாசினீம் ஸதாசிவஸ்யாப்யதி-சோபனாட்யாம் । உமாபிதா-முத்தம சித்தவ்ருத்திம் நமாமி நாநாவித லோகவைபவாம்'—ஸூதஸம்ஹிதை.)

634. பர்வதராஜகுமாரி.

635. கௌரி. (பத்து வயதுள்ள கன்னிகை கௌரி. வெளுப்பான நிறமுடையவள்.)

636. கந்தர்வர்களால் சேவிக்கப்பட்டவள்.

637. உலகைத் தன் வயிற்றில் தாங்கியவள்.

638. ஹிரண்யகர்ப்ப வடிவானவள்.

639. கொடியவர்களைச் சிக்ஷிப்பவள்.

640. வாக்கிற்கு ஈசுவரி.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

641. த்யான-கம்யாயை
642. அபரிச்சேத்யாயை
643. ஜ்ஞானதாயை
644. ஜ்ஞானவிக்ரஹாயை
645. ஸர்வவேதாந்த-ஸம்வேத்யாயை
646. ஸத்யானந்த-ஸ்வரூபிண்யை
647. லோபாமுத்ரார்ச்சி-தாயை
648. லீலா-க்லுப்தப்ரஹ்-மாண்ட மண்டலாயை
649. அத்ருச்யாயை

---

641. தியானத்தால் அடையத்தக்கவள். (ஒ. 'தே த்யான-யோகானுகதா அபச்யன் தேவாத்ம - சக்திம் ஸ்வகுணைர்-நிகூடாம்'—ச்வே. உப. 1.3.)

642. இந்தக் காலத்தில் இந்த இடத்தில் இப்படி இருப்பவள் என்று குறிப்பிட முடியாதவள். (அங்கிங் கெனாதபடி எங்கும் இருப்பவள்.)

643. ஞானத்தையளிப்பவள். (ஒ. 'ஸா ப்ரஹ்மேதி ஹோவாச' —கேன உப. 4.1)

644. ஞானமே உருவெடுத்தவள்.

645. எல்லா உபநிஷத்துக்களாலும் அறியப்படுபவள். (வேதாந்தம் அல்லது வேதத்தின் முடிவு உபநிஷத்து.)

646. ஸத்தியமும் ஆனந்தமுமே வடிவாயுள்ளவள். (அல்லது அழியாத ஆனந்தஸ்வரூபிணீ.)

647. லோபாமுத்திரையால் பூஜிக்கப்பட்டவள். (அகஸ்தியர் பத்னி லோபாமுத்திரை, 'ஹாதி வித்தையின் ரிஷி. அ. நாமரூப 'லோபம்' அல்லது நீக்கத்தினால் ஏற்படும் 'முதம்' அல்லது உவகையே லோபாமுத்ரா.)

648. பிரம்மாண்ட மண்டலங்களை விளையாட்டாகச் சிருஷ்டிப்பவள்.

649. (ஊனக்கண்ணால்) பார்க்க முடியாதவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

650. த்ருச்ய-ரஹிதாயை
651. விஜ்ஞாத்ர்யை
652. வேத்ய-வர்ஜிதாயை
653. யோகின்யை
654. யோகதாயை
655. யோக்யாயை
656. யோகானந்தாயை
657. யுகந்தராயை
658. இச்சாசக்தி-ஜ்ஞான சக்தி-க்ரியாசக்தி-ஸ்வரூபிண்யை
659. ஸர்வாதாராயை

---

650. தனக்கு வேறாகக் காணப்படுவதான பொருளில்லாதவள். (ஒ. 'விஜ்ஞாதார-மரே கேன விஜாநீயாத்।' ப்ரு. உப. 2.4.14.)

651. எல்லாவற்றையும் அறிவிப்பவள்.

652. அறியவேண்டியது ஒன்றும் இல்லாதவள்.

653. யோக ரூபிணி. (ஒ. 'ஜ்ஞானேந்த்ரியாணி ஸர்வாணி நிக்ருஹ்யமனஸா ஸஹ । ஏகத்வ-பாவனா யோக: க்ஷேத்ரஜ்ஞ-பரமாத்மனோ: ॥' —விஷ்ணு புராணம்.)

654. யோகத்தைப்பற்றிய அறிவையும் அனுபவத்தையும் கொடுப்பவள்.

655. யோகத்தால் அடையத்தக்கவள்.

656. யோகானந்தம் உள்ளவள். (யோகத்திலும் யோக நித்திரையிலும் ஆனந்தமுள்ளவள்.)

657. நாலு யுகங்களையும் (உலக நியமான சக்திகளையும் இரட்டையாயுள்ள ஸகல வஸ்துக்களையும்) தரிப்பவள்.

658. இச்சாசக்தி ஞானசக்தி கிரியாசக்தி வடிவாக உள்ளவள். (இச்சை சிரஸ், ஞானம் உடல், கிரியை பாதம்.)

659. எல்லாவற்றிற்கும் ஆதாரமானவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

660. ஸுப்ரதிஷ்டாயை
661. ஸதஸத்-ரூப-தாரிண்யை
662. அஷ்டமூர்த்யை
663. அஜா-ஜேத்ர்யை
664. லோகயாத்ரா-விதாயின்யை
665. ஏகாகின்யை

660. சிறந்த இருப்பிடமானவள். (மற்ற இருப்பிடங்கள் எப்போதாவது அழியும். இது பிரளயத்திலும் அழியாது. ஒ.—'ய: ஸ ஸர்வேஷு பூதேஷு நச்யத்ஸு ந விநச்யதி। அவ்யக்தோऽக்ஷர இத்யுக்தஸ்தமாஹு: பரமாங் கதிம் ॥' —கீ. 8. 20-21.)

661. பாரமார்த்திக ஸத்தையாகவும் வியாவஹாரிக ஸத்தையாகவும் இருப்பவள். (ஒ. ஸத்யஞ்சான்ருதஞ் ச ஸத்ய-மபவத்—தை.உப. 2.6.)

662. எட்டு வடிவு கொண்டவள். (ஈசுவரன் அஷ்டமூர்த்தி, ஈசுவரியும் அப்படியே. 'பவன்-சர்வன்-ஈசானன்-பசுபதி-ருத்ரன்-உக்ரன்-பீமன்-மஹான் என்பன எட்டு சிவ நாமங்கள். ஒ. 'பூ-ரம்பாம்ஸ்-யநலோ-ऽநில-அம்பர-மஹர்நாதோ-ஹிமாம்சு:-புமா-னித்யாபாதி சராசராத்மக-மிதம் யஸ்யைவ மூர்த்யஷ்டகம்' —தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம். ஒ. 'பூமி-ராபோ-ऽனலோ-வாயு:-கம்-மனோ-புத்திரேவ ச। அஹங்கார-இதீயம் மே பின்னா ப்ரக்ருதிரஷ்டதா'—கீ. 7.4.)

663. அவித்யையை ஜயித்தவள். (அ. 'அஜா-மேகாம் இத்யாதி ச்ருதிப்ரஸித்தாயா அவித்யாரூபாயா அஜாயா ஜேத்ரீ'—பா.)

664. உலகங்களின் யாத்திரையை நடத்தி வைப்பவள்.

665. (தன்னையன்றி வேறில்லாமல் தனித்து) ஒருத்தியாக இருப்பவள். (ஒ. 'ஏகைவ லோகான் க்ரஸதி ஏகைவ ஸ்தாபயத்யபி। ஏகைவ ஸ்ருஜதே விச்வம் தஸ்மாதேகாகினீ மதா'—தேவீபுராணம்.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

666. பூம-ரூபாயை
667. நிர்த்வைதாயை
668. த்வைத-வர்ஜிதாயை
669. அன்னதாயை
670. வஸுதாயை

666. 'பூமா' என்ற பரமாத்ம ரூபிணீ. (ஒ. யத்ர நான்யத் பச்யதி நான்யச்-ச்ருணோதி நான்யத் விஜானாதி ஸ பூமா। யோ வை பூமா தத் ஸுகம் நால்பே ஸுக மஸ்தி।—சா. உப. 24. 1. ஒருத்தியாயினும் அனைத்து மாக இருக்கும் தன்மை அவளுடையது. ஒ, 'ஏகோ பூத்வா யதா மேக: ப்ருதக்த்வேன ச திஷ்டதி। வர்ணதோ ரூபதச்சைவ ததா குணவசா-துமா॥ நபஸ: பதிதம் தோயம் யதா நானா ரஸம் பவேத்। பூமே ரஸ விசேஷேண ததா குணவசா-துமா॥ யதா வா கார்ஹபத்யாக்னி-ரன்ய-ஸம்ஜ்ஞாந்தரம் வ்ரஜேத், தக்ஷிணாஹவநீயாதி ப்ரஹ்மாதிஷு ததைவ ஸா'॥—தேவீ புராணம்.)

667. எவளது கருணையால் துவைத திருஷ்டி நீங்குமோ அவள். (துவைத தர்சனம் அநித்தியமானது, பயத்துடன் கூடியது.)

668. துவைதத்தினின்றும் இயல்பிலே நீங்கியவள். (ஒ. 'ந புனர் த்வைதம் பூர்வம் ஸ்திதம் பச்சாந் நிர்கதம்। மூலத ஏவ து நாஸ்தீத்-யாஹ'—பா.)

669. அன்னத்தை அளிப்பவள். (ஜீவாதாரமாயுள்ள அனைத்தையும் அளிப்பவள். ஒ. 'உசதீரிவமாதர:'। —ஸந்தியா வந்தனம். அன்னபூர்ணே ஸதாபூர்ணே சங்கர ப்ராணவல்லபே। ஜ்ஞான-வைராக்ய-ஸித்த்-யர்த்தம் பிக்ஷாந் தேஹி ச பார்வதி'। —அன்னபூர்ணா ஸ்தோத்ரம் -சங். சாப்பிடுமுன் இதை ஸ்மரித்தல் எல்லா நன்மைகளையும் அளிக்கும்.)

670. செல்வத்தைத் தருபவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

671. வ்ருத்தாயை
672. ப்ரஹ்மாத்மைக்ய-ஸ்வரூபிண்யை
673. ப்ருஹத்யை
674. ப்ராஹ்மண்யை
675. ப்ராஹ்ம்யை
676. ப்ரஹ்மானந்தாயை
677. பலி-ப்ரியாயை
678. பாஷா-ரூபாயை

---

671. வயது முதிர்ந்தவள். (ஒ. 'வ்ருத்தத்வம் ஜரஸா விநா' —காளிதாஸன்.)

672. ஜீவப்பிரம்ம ஐக்கிய வடிவானவள். (ஒ. 'ஹம்ஸ-மந்த்ரார்த்த-ரூபிணீ'—த்ரிசதீ.)

673. பெரியநாயகி. (ஒ. 'மஹதோ-மஹீயான், அல்லது 'ப்ருஹத்ஸாம' வடிவாகவோ 'ப்ருஹதீ' சந்தஸ் வடிவாகவோ இருப்பவள்.)

674. பிராம்மண பத்னி. (சிவன் பிராம்மண தெய்வமாகக் கூறப்படுதலால் சிவபத்னீ என்று பொருள். ஒ. ப்ராஹ்மணோ பகவான் ஸாம்போ ப்ராஹ்மணானாம் ஹி தைவதம் । விசேஷாத் ப்ராஹ்மணோ ருத்ரமீசானம் சரணம் வ்ரஜேத்'—பராசரர்.)

675. பிரம்மாவின் சக்தி வடிவானவள். (வாக்தேவீ.)

676. பிரம்மானந்த வடிவானவள். (ஒ. 'ஆனந்தோ ப்ரஹ்மேதி வ்யஜானாத்'—தை. உப. 3.6.1.)

677. பலசாலிகளை விரும்புபவள். (வெளிப்பகை, உட்பகை எல்லாவற்றையும் ஜயிக்கும் பலசாலிகள் தேவியின் கருணைக்குப் பாத்திரமாகின்றனர். ஒ. 'நாயமாத்மா பலஹீனேன லப்ய:'—மு. உப. 3.2.4. அல்லது பூஜையில் அர்ப்பணம் செய்யப்படும் பலியில் பிரியம் உள்ளவள். அல்லது பலிசக்கரவர்த்திக்கு அனுக்கிரஹம் செய்த வாமன ரூபியாகியவள்.)

678. பாஷை வடிவில் விளங்குபவள். (சப்தமெல்லாம் அன்னை; அர்த்தமெல்லாம் சிவன்.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

679. ப்ருஹத்-ஸேநாயை
680. பாவாபாவ-விவர்ஜிதாயை
681. ஸுகாராத்யாயை
682. சுபகர்யை
683. சோபநாயை ஸுலபாயை கத்யை
684. ராஜராஜேச்வர்யை

679. பெரிய சேனைகளை உடையவள். (குமரக்கடவுள் ஸேனாதிபதி.)

680. உற்பத்தியும் அழிவும் இல்லாதவள்.

681. சுகமாக ஆராதிக்கக்கூடியவள். (உபவாசமும் காயக் கிலேசமும் கடுமையான விரதங்களும் தேவியின் பிரீதிக்கு அவசியமில்லை. அவற்றை அவள் விரும்பு வதுமில்லை. ஒ. கர்சயந்த: சரீரஸ்தம் பூதக்ராம-மசேதஸ: | மாஞ்சைவாந்த: சரீரஸ்தம் தான் வித்த்யா ஸுர-நிச்சயான்—கீ. 17.6.)

682. மங்களத்தைச் செய்பவள். (அமங்களம் என்பது தேவியை வழிபடுபவர்களுக்கு இல்லை. பூஜையில் குறைகளிருப்பினும் அசுபம் அன்பர்களை அணுகாது. ஒ. 'ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டு முடனே ஆசறு நல்லநல்ல வவை நல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே.' —சம்பந்தர் தேவாரம்.)

683. உயர் நலம் அளிப்பவளாகவும் சுலபமாய் அடையக் கூடியவளாகவும் இருப்பவள். (நித்யானந்தத்தை அளிப்பதால் 'சோபனா'; ஆராதனைக்கு எளியவள் ஆதலால் 'ஸுலபா'; நாடியடைய வேண்டிய இடமாதாலால் 'கதி'.)

684. ராஜாதிராஜர்களுக்கும் ஈசுவரி. (தேவராஜன், யக்ஷராஜன், பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் முதலியவர் களுக்கும் ஈசுவரி.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

685. ராஜ்ய-தாயின்யை
686. ராஜ்ய-வல்லபாயை
687. ராஜத்-க்ருபாயை
688. ராஜபீட-நிவேசித-நிஜாச்ரிதாயை
689. ராஜ்ய-லக்ஷ்ம்யை
690. கோச-நாதாயை
691. சதுரங்க-பலேச்வர்யை
692. ஸாம்ராஜ்ய-தாயின்யை

685. ராஜ்யத்தை அளிப்பவள். (ஸ்வராஜ்யம், வைகுண்டம், கைலாஸம் எல்லாவற்றையும் அளிப்பவள்.)

686. ராஜ்யங்களில் பிரியமுள்ளவள். (அல்லது அந்த ராஜ்யங்களை ஆள்பவர்களிடம் பிரியம் உள்ளவள்.)

687. எங்கும் பிரகாசிக்கும் கிருபை உடையவள். (அன்னையின் கருணை உலகப் பிரசித்தம். அது பிரகாசிக்காத இடம் இல்லை.)

688. தன்னை நாடியவர்களை அரச பீடத்தில் அமர்த்தி வைப்பவள்.

689. ராஜ்யலக்ஷ்மியாக இருப்பவள். (ராஜ்யத்திற்கு வேண்டிய தனம், தான்யம், யானை, குதிரை, சேனை முதலிய அனைத்துமாக இருப்பவள்.)

690. கோசங்களின் அதீசுவரி. (பொக்கிஷத்தை ரக்ஷிப்பவள் அல்லது அன்னமயம் முதலிய பஞ்சகோசங்களுக்கு நாயகி.)

691. சதுரங்க சேனைக்கு ஈசுவரி. (மனம்-புத்தி-சித்தம்-அஹங்காரம் என்ற நான்கு வ்யூஹங்கள் ஜீவாத்மாவின் அந்தரங்க சேனாபலம், இவற்றில் வாசுதேவன், பிரத்யும்னன், அநிருத்தன், ஸங்கர்ஷணன் என்ற நான்கு வடிவில் இருந்து காப்பவள்.)

692. ஸாம்ராஜ்ய (சக்ரவர்த்தி) பதவியை (அடியாருக்கு) அளிப்பவள். (ஒ. 'ஆப்னோதி ஸ்வாராஜ்யம்' — தை. உப. 1.6.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

693. ஸத்யஸந்தாயை
694. ஸாகர-மேகலாயை
695. தீக்ஷிதாயை
696. தைத்ய-சமன்யை
697. ஸர்வலோகவசங்கர்யை
698. ஸர்வார்த்த-தாத்ர்யை

---

693. ஸத்தியமான பிரதிஜ்ஞை உள்ளவள். (ஒ. 'ஸத்யவ்ரதம் ஸத்யபரம் த்ரிஸத்யம் ஸத்யஸ்ய யோநிம் நிஹிதஞ்ச ஸத்யே—ஸ்ரீமத் பாகவதம். 10.2.26.)

694. கடல் சூழ்ந்த பூமி வடிவானவள். (இதுவரை 'ராஜ ராஜேசுவரி' என்ற நாமத்தின் விளக்கம்).

695. தீக்ஷை அளிப்பவள். அல்லது (பக்தஸம்ரக்ஷணத்திலும் துஷ்ட நிக்ரஹத்திலும் உறுதி பூண்டவள். அல்லது தீக்ஷை செய்துகொண்டவர் வடிவாயிருப்பவள். ஒ. தீயதே க்ருபயா சிஷ்யே க்ஷீயதே பாபஸஞ்சய: இதி தீக்ஷா'—பரானந்த தந்த்ரம். ஒ. சாம்பவீதி ச சக்தீ ச மந்த்ரீசைவ சிவாகமே । தீக்ஷோப-த்ருச்யதே த்ரேதா சிவேந பரமாத்மனா ॥ குரோராலோக- மாத்ரேண ஸ்பர்சாத் ஸந்தர்சனாதபி । ஸத்ய: ஸம்ஜ்ஞா பவேஜ்-ஜந்தோர்-தீக்ஷா ஸா சாம்பவீ மதா ॥ சக்தி ஜ்ஞானவதீ தீக்ஷா சிஷ்ய-தேஹம் ப்ரவிச்யதி । குருணா ஜ்ஞான-மார்கேண க்ரியதே ஜ்ஞான-சக்ஷுஷா ॥ மந்த்ரீ க்ரிய-வதீ தீக்ஷா கும்ப-மண்டல-பூர்விகா ॥'—வாயவீய ஸம்ஹிதை.— சாம்பவீ தீக்ஷைக்குக் கால நியமமோ வேறு நியமமோ இல்லை. மந்த்ர உபதேசம் பெறு தற்கோ விசேஷ விரதங்களையும் யாகங்களையும் அனுஷ்டித்தற்கோ மேற்கொள்ளும் நியம நிஷ்டை களும் தீக்ஷை என கூறப்படும்.)

696. அசுரர்களை அடக்குபவள்.

697. உலகையெல்லாம் தன்வசம் கொண்டவள்.

698. எல்லாப் புருஷார்த்தங்களையும் அளிப்பவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

699. ஸாவித்ர்யை
700. ஸச்சிதானந்த-ரூபிண்யை
701. தேசகாலாபரிச்-சின்னாயை
702. ஸர்வகாயை
703. ஸர்வமோஹின்யை
704. ஸரஸ்வத்யை
705. சாஸ்த்ர-மய்யை
706. குஹாம்பாயை
707. குஹ்ய-ரூபிண்யை
708. ஸர்வோபாதி-விநிர்முக்தாயை

---

699. ஸாவித்ரீ. *(அ. 'ஸவித்ரு - ப்ரகாசகரணாத் ஸாவித்-ரீத்யபிதா பவேத் । ஜகத: ப்ரஸவித்ரீதி ஹேதுநானேன வாபி ச' —பாரத்வாஜ ஸ்ம்ருதி.)*

700. ஸச்சிதானந்த ரூபிணீ.

701. தேசத்தாலும் காலத்தாலும் பிரிக்கப்படாதவள். *(ஒ. 'பூர்வேஷாமபி குரு: காலேனானவச்சேதாத் ।' —யோக ஸூத்ரம்.)*

702. எங்கும் நிறைந்திருப்பவள்.

703. எல்லோரையும் மோஹிக்கச் செய்பவள். *(ஒ. 'அஜ்ஞானேனாவ்ருதம் ஜ்ஞானம் தேன முஹ்யந்தி ஜந்தவ: —கீ. 5.15.)*

704. ஸரஸ்வதி வடிவினள்.

705. சாஸ்திர வடிவினள். *(சாஸ்திரத்தாலேயே அறியத் தக்கவள். அதற்காகவே சாஸ்திரங்களை உண்டாக்கியவள். ஒ. சாஸ்த்ர யோனித்வாத்.—பிரம்மஸூத்ரம் 1.1.3.)*

706. குஹப்பெருமானின் தாய். *(அல்லது இருதய குகையில் இருப்பவள்.)*

707. ரகசியமான ரூபமுள்ளவள். *(அதனால் தான் அவளை உண்மையில் அறிபவர் அரிதாகின்றனர். ஒ. 'யததாமபி ஸித்தானாம் கச்சின்-மாம் வேத்தி தத்வத: ।—கீ. 7.3. ச்ருத்வாப்யேனம் வேத ந சைவ கச்சித்—கீ. 2.29.)*

708. ஒருவித உபாதியும் இல்லாதவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

709. ஸதாசிவ-
பதிவ்ரதாயை
710. ஸம்ப்ரதாயேச்வர்யை
711. ஸாதுனே
712. யை
713. குருமண்டல-
ரூபிண்யை
714. குலோத்தீர்ணாயை
715. பகாராத்யாயை

709. ஸதாசிவ பதிவ்ரதை.

710. ஸம்பிரதாயத்திற்கு ஈசுவரி. (குருசிஷ்யக் கிரமமாக வரும் தர்மம் ஸம்பிரதாயம் எனப்படும். அ. 'ஸம்யக் சிஷ்யேப்ய: ப்ரதீயத இதி ஸம்ப்ரதாய:—பா.')

711. (தர்மியான சிவனுக்குத் தர்ம ரூபமாக இருக்க) யுக்தமானவள்.

712. 'ஈ' என்ற அக்ஷர (காமகலா) வடிவானவள். ('ஈ' என்பதை 'அ'காரத்தின் உடையது அல்லது உடன் பிறந்தது என்று கொண்டால் 'அ' விஷ்ணுவையும் 'ஈ' விஷ்ணு சகோதரியான சக்தியையும் குறிக்கும். ஒ. 'ஏகமேவ ப்ரஹ்ம தர்மோ தர்மீதி ரூபத்வயம் ப்ராபத் । தத்ர தர்ம: புன: புமான் ஸ்த்ரீரிதி த்விதா பவத் । தத்ர ஸ்த்ரீ பரசிவ-மஹிஷீத்வம் ப்ராபத், புமான் விஷ்ணு: ஸகல ஜகதுபாதானதாம் । ஏதத்-த்ரயமபி மிலித்வைக-மகண்டம் ப்ரஹ்மேதி சைவமத-ப்ரக்ரியா ।' கூர்ம புராணாத்யனுயாயினீ ரத்னத்ரய பரீக்ஷாயாம் தீக்ஷிதைர்-விஸ்தரேண நிரூபிதாऽனு ஸந்தேயா ।—பா.)

713. குருமண்டல ரூபமாக இருப்பவள். (அன்னை குரு மண்டலமாக இருந்து காமகலா ரகசியத்தை உணர்த்துகிறாள்.)

714. (குலம் என்னும்) இந்திரிய சமூகத்திற்கு எட்டாமல் இருப்பவள்.

715. சூரிய மண்டலத்தில் ஆராதிக்கத்தக்கவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

716. மாயாயை
717. மதுமத்யை
718. மஹ்யை
719. கணாம்பாயை
720. குஹ்யகாராத்யாயை
721. கோமலாங்க்யை
722. குருப்ரியாயை
723. ஸ்வதந்த்ராயை
724. ஸர்வதந்த்ரேச்யை
725. தக்ஷிணாமூர்த்தி-ரூபிண்யை
726. ஸநகாதி-ஸமாராத்யாயை

---

716. மாயை எனப்படுபவள். (ஒ. 'விசித்ர-கார்யகரணா அசிந்தித பல-ப்ரதா । ஸ்வப்னேந்த்ரஜாலவல்-லோகே மாயா தேன ப்ரகீர்த்திதா ॥—தேவீ புராணம்.)

717. (யோகப்படிகளின் ஏழாவது பூமிகையான) மதுமதி வடிவானவள்.

718. பூமி ரூபமாக இருப்பவள்.

719. கணங்களுக்கும் கணேசனுக்கும் தாய்.

720. இரகசியமான இடத்தில் பூஜித்தற்கு உரியவள்.

721. கோமளமான அங்கங்கள் உடையவள்.

722. குரு பத்னி. (குருவுக்குப் பிரியமானவள் அல்லது குரு விடம் பிரியம் உள்ளவள்.)

723. சுதந்திரம் படைத்தவள். (அல்லது எல்லாத் தந்திரங் களையும் தனதாக்கிக் கொண்டவள். 'ஸ்வதந்த்ரம்' எனும் தந்த்ர வடிவானவள். ஒ. 'ஸ்வதந்த்ரம் தே தந்த்ரம் க்ஷிதி-தல-மவாதீ தரதிதம்—ஸௌ. ல. 31.)

724. ஸர்வ தந்த்ரங்களுக்கும் ஈசுவரி.

725. தக்ஷிணாமூர்த்தி வடிவானவள்.

726. ஸநகாதிகளால் நன்கு ஆராதிக்கப்பட்டவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

727. சிவஜ்ஞாந-ப்ரதாயின்யை
728. சித்-கலாயை
729. ஆனந்த-கலிகாயை
730. ப்ரேம-ரூபாயை
731. ப்ரியங்கர்யை
732. நாம-பாராயண-ப்ரீதாயை

727. சிவமான அறிவை அளிப்பவள். (அல்லது சிவ தத்துவத்தை உணர்த்துபவள்.)
728. சித்கலையாக இருப்பவள். (எங்குமுள்ள சைதன்யம் ஜீவனுடைய அந்தக்கரணத்தில் சித்ரூபமாகப் பிரகாசிக்கின்றது.)
729. ஆனந்தத்தின் அம்ச கலையாக (ஜீவர்களிடம்) இருப்பவள். (ஒ. 'ஏதஸ்யைவானந்தஸ்ய அன்யானி பூதானி-மாத்ரா-முபஜீவந்தி'—ப்ரு. உப. 4.3.32.)
730. பிரேமை வடிவானவள்.
731. பிரியத்தைச் செய்பவள்.
732. நாம பாராயணத்தால் மகிழ்ச்சி அடைபவள். (ஒ. 'மாமர்ச்சயது வா மா வா வித்யாம் ஜபது வா ந வா । கீர்த்தயேந் நாம-ஸாஹஸ்ரம் இதம் மத்ப்ரீதயே ஸதா' ॥ —ல.ஸ. பூர்வபாகம் 46-ஸஹஸ்ர நாம பாராயணத்தைப் போல் அக்ஷர நாம பாராயணத்தாலும் தேவி மகிழ்கிறாள். ஸ்வரங்கள் (விமர்சனம்) 16; வ்யஞ்ஜனங்கள் (ப்ரகாசம்) 35 x 16 = 560 ஆக 576. இவை ஒவ்வொன்றுக்கும் 36 மந்திரமாக 576 x 36 அல்லது 20736 மந்திரங்கள். அவை பின்வருமாறு. (1) அம்-கம்-அம்-ஆம்-ஈம்-நம: (2) அம்-கம்-கம்-ஆம்-ஈம்-நம: (3) அம்-கம்-க₂ம்-ஆம்-ஈம்-நம: (4) அம்-கம்-க₃ம்-ஆம்-ஈம்-நம: (5) அம்-கம்-க₄ம்-ஆம் ஈம்-நம: (6) அம்-கம்-ஙம்-ஆம்-ஈம்-நம:— 'ஆ ஈ பல்லவிதை: பரஸ்பர யுதைர்-த்வித்-த்ரிக்ரமாத் யக்ஷரை: காதி க்ஷாந்த-கதை: ஸ்வராதிபி-ரத க்ஷாந் தைச்ச தை: ஸஸ்வர: நாமானி த்ரிபுரே பவந்தி கலு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

733. நந்தி-வித்யாயை
734. நடேச்வர்யை
735. மித்யாஜக-
ததிஷ்டானாயை
736. முக்திதாயை
737. முக்திரூபிண்யை
738. லாஸ்ய-ப்ரியாயை
739. லயகர்யை
740. லஜ்ஜாயை
741. ரம்பாதி-வந்திதாயை
742. பவ-தாவ-ஸுதா-
வ்ருஷ்ட்யை

யாந்த்-யத்யந்த கோப்யானி தே தேப்யோ பைரவ-பத்னி விம்சதி-ஸஹஸ்ரேப்ய: பரேப்யோ நம: ||'
—பா. மேற்கோள்.)

733. நந்திதேவரால் உபாசிக்கப்பட்ட வித்யா ரூபிணீ.
734. (சிதம்பரத்தில்) நடனம் செய்யும் நடராஜனை அனுசரித்து நடனம் செய்யும் ஈசுவரி.
735. பொய்யான உலகத் தோற்றத்திற்கு அதிஷ்டானமாக இருப்பவள். (ஒ. 'யத்ர த்ரிஸர்கோ ம்ருஷா'—ஸ்ரீமத் பாகவதம் 1.1.1)
736. மோக்ஷம் அளிப்பவள்.
737. (தானே) மோக்ஷ ஆனந்தமாயிருப்பவள்.
738. (லாஸ்ய) நர்த்தனத்தில் பிரியம் உள்ளவள்.
739. லயத்தைச் செய்பவள். (கீதத்தையும் நர்த்தனத்தையும் தாளத்தில் ஒன்றுபடுத்துவது லயம். ஸ்வரம் மாதா, லயம் பிதா என்பர். மனத்தைத் தியானத்தில் ஒடுக்குவது லய யோகம். ஒ. 'யச்சேத் வாங்மானஸீ ப்ராஜ்ஞ:' —கட. உப. 3.13.)
740. லஜ்ஜை வடிவினள். (ஹ்ரீம் பீஜம் லஜ்ஜா பீஜம் எனப்படும். ஒ. 'லஜ்ஜாபத-ஸமாராத்யா' -த்ரிசதீ).
741. ரம்பை முதலியவர்களால் வணங்கப்பட்டவள்.
742. பிறவித்துன்பமாகிய காட்டுத்தீக்கு அமிருத மழையாயிருப்பவ்ள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

743. பாபாரண்ய-
தவாநலாயை

744. தௌர்பாக்ய-தூல-
வாதூலாயை

745. ஜராத்வாந்த-
ரவிப்ரபாயை

746. பாக்யாப்தி-
சந்த்ரிகாயை

747. பக்த-சித்த-கேகி-
கனா-கனாயை

748. ரோக-பர்வத-
தம்போலயே

749. ம்ருத்யு-தாரு-
குடாரிகாயை

750. மஹேச்வர்யை

751. மஹாகால்யை

---

743. பாவம் என்னும் (முள் நிறைந்த) வனத்திற்குப் பெருந்தீயாக இருப்பவள்.

744. துர்ப்பாக்கியமாகிய இலவம் பஞ்சைப் பறக்கடிக்கும் சுழல் காற்றுப் போன்றவள்.

745. மூப்பாகிய இருளை விழுங்கும் சூரியகாந்தி.

746. பாக்கியமாகிய கடலுக்கு நிலவுபோன்றவள். (நிலவு கடலைப் பொங்கச் செய்யும்.)

747. பக்தர்களின் மனமாகிய மயிலுக்கு மேகம் போன்றவள். (ஒ. 'ஆகாசேன சிகீ'—சிவானந்த லஹரீ 53.)

748. நோய் என்னும் மலையைப் பிளக்கும் வஜ்ராயுதம் போன்றவள்.

749. மரணமாகிய மரத்தை வீழ்த்தும் கோடரி போன்றவள். (ஒ. 'ம்ருத்யுர்-யஸ்யோபஸேசனம்'—கட. உப. 2.2.25.)

750. மஹேசுவரி.

751. மஹாகாளி. (அ. 'காலயதீதி காலீ ம்ருத்யோரபி காலனாத்.'-பா. ஒ. ஏத-தம்ப-ஸதிதந்து நேதி ந: சங்கயா ஹ்ருதி விகல்ப-லக்ஷண: । யோ யம: ஸ கலு கால்யதே த்வயா பூத-ஸம்யமன-கேலி கோவிதா'—காளி தாஸன்.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

752. மஹாக்ராஸாயை
753. மஹாசனாயை
754. அபர்ணாயை
755. சண்டிகாயை
756. சண்டமுண்டாஸுர-நிஷூதின்யை
757. க்ஷராக்ஷராத்மிகாயை
758. ஸர்வலோகேச்யை
759. விச்வ-தாரிண்யை
760. த்ரிவர்க-தாத்ர்யை

---

752. பெருங்கவளம் கொள்பவள். (ஒ. 'அத்தா சராசர-க்ரஹணாத்'—பிரம்மஸூத்ரம்—1.2.9. அம்பிகையின் பராஹந்தா ஸ்வரூபத்தில் முப்பத்தாறு தத்துவங்களும் விழுங்கப்படுகின்றன.)
753. பெருந்தீனி கொள்பவள்.
754. (யாருக்கும்) கடன்படாதவள். (அல்லது இலையைக் கூடப் புசிக்காமல் தவஞ்செய்பவள். ஒ. பரம சிவன் 'வ்ருக்ஷ இவ ஸ்தப்த:' —மஹாநாராயண உப. — என்றபடி ஆடாமல் அசங்கமால் ஸ்மரணை இருப்பதாகக் கூடத் தெரியாமல் இருக்கிறான். அதனால்தான் அவனுக்கு ஸ்தாணு என்று பெயர். இவனைச் சுற்றிக் கொண்டிருக்கிற அவள் இலை இல்லாத கொடி 'அபர்ணா.' —காம கோடி சங்கராசாரியார்)
755. கோபங்கொண்டவள்.
756. சண்டன் முண்டன் என்ற அசுரர்களைக் கொன்றவள்.
757. அழிவுள்ளதும் அழிவில்லாததுமான அனைத்துமாக இருப்பவள். (ஒ. 'க்ஷர:ஸர்வாணி பூதானி கூடஸ்தோ ऽக்ஷர உச்யதே,—கீ. 15.16.)
758. எல்லா உலகங்களுக்கும் ஈசுவரி.
759. உலகனைத்தையும் தாங்குபவள்.
760. அறம், பொருள், இன்பமாகிய மூன்றையும் அளிப்பவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

761. ஸுபகாயை
762. த்ர்யம்பகாயை
763. த்ரிகுணாத்மிகாயை
764. ஸ்வர்காபவர்கதாயை
765. சுத்தாயை
766. ஜபாபுஷ்ப-நிபாக்ருதயே
767. ஓஜோவத்யை
768. த்யுதி-தராயை
769. யஜ்ஞ-ரூபாயை
770. ப்ரிய-வ்ரதாயை
771. துராராத்யாயை
772. துராதர்ஷாயை
773. பாடலீ-குஸும-ப்ரியாயை

---

761. (ஸ்ரீ, காமம், மாஹாத்மியம், வீரியம், யத்னம், கீர்த்தி, முதலிய) ஸௌபாக்கிய வடிவினள்.
762. முக்கண் படைத்தவள். (அல்லது) மும்மூர்த்திகளுக்கும் தாய்-அ. "த்ரீண்யம்பகானி நேத்ராணி யஸ்யா: । த்ரயாணாம் ப்ரஹ்ம-விஷ்ணு-ருத்ராணாமம்பிகா மாதா வா" —பா.)
763. முக்குண வடிவானவள். (தமோகுணத்தால் காளீ, ரஜோகுணத்தால் துர்க்கை, ஸத்வகுணத்தால் பார்வதி.)
764. ஸ்வர்க்கத்தையும் மோக்ஷத்தையும் தருபவள்.
765. சுத்தமானவள். (அவித்தையாகிய அழுக்கில்லாதவள்.)
766. செம்பருத்திப்பூ வர்ணம் உடையவள்.
767. 'ஓஜஸ்' உடையவள். (இந்திரியங்களின் கூர்மையும் வன்மையும்.)
768. ஒளிபொருந்தியவள்.
769. யஜ்ஞ வடிவினள்.
770. விரதங்களில் பிரியம் உள்ளவள்.
771. ஆராதித்தற்கு அரியவள்.
772. வெல்லமுடியாதவள்.
773. பாதிரிப்பூவில் பிரியம் உள்ளவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

774. மஹத்யை
775. மேரு-நிலயாயை
776. மந்தார-குஸும-ப்ரியாயை
777. வீராராத்யாயை
778. விராட்-ரூபாயை
779. விரஜஸே
780. விச்வதோ-முக்யை
781. ப்ரத்யக்-ரூபாயை
782. பராகாசாயை
783. ப்ராணதாயை
784. ப்ராண-ரூபிண்யை
785. மார்தண்ட-பைரவாராத்யாயை
786. மந்த்ரிணீ-ந்யஸ்த-ராஜ்யதுரே

---

774. பெரியவள்.

775. மேருவில் இருப்பவள்.

776. மந்தாரப்பூவில் பிரியம் உள்ளவள்.

777. வீரர்களால் ஆராதிக்கப்பட்டவள்.

778. விராட் வடிவானவள்.

779. மாசற்றவள்.

780. எங்கும் முகம் உள்ளவள். (எல்லோருடைய கண்கள் வழியாகவும் பார்ப்பவள்.)

781. உள் நோக்கில் விளங்கும் ஆன்ம வடிவினள்.

782. பரம ஆகாசரூபிணீ. (ஒ. ஸைஷா பார்கவீ வாருணீ வித்யா । பரமே வ்யோமன் ப்ரதிஷ்ட்டிதா ।' — தை. உப. 3.6.)

783. பிராணனைக் கொடுப்பவள்.

784. பிராணனாக இருப்பவள்.

785. மார்த்தண்ட பைரவரால் பூஜிக்கப்பட்டவள். (மல்லன் என்ற அசுரனைக் கொன்றதால் மார்த்தண்ட பைரவருக்கு மஹாராஷ்டிரத்தில் மல்லாரி என்று பெயர்.)

786. மந்த்ரிணியிடம் ராஜ்ய பாரத்தை ஒப்புவித்தவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

787. த்ரிபுரேச்யை
788. ஜயத்-ஸேநாயை
789. நிஸ்த்ரைகுண்யாயை
790. பராபராயை
791. ஸத்யஜ்ஞானானந்த-ரூபாயை
792. ஸாமரஸ்ய-பராயணாயை
793. கபர்தின்யை
794. கலாமாலாயை
795. காமதுகே
796. காமரூபிண்யை
797. கலாநிதயே
798. காவ்யகலாயை
799. ரஸஜ்ஞாயை
800. ரஸசேவதயே

---

787. த்ரிபுரேசீ (ஸர்வ ஆசாபரிபூரக சக்கரத்தின் அதிஷ்டான தேவதை).

788. சத்துருக்களை ஜயிக்கும் சேனைகளை உடையவள்.

789. முக்குணங்களைக் கடந்தவள். (கீதை வர்ணிக்கும் குணாதீதன் அம்பிகையின் வடிவமே.)

790. பரமாகவும் அபரமாகவும் இருப்பவள்.

791. ஸத்ய-ஜ்ஞான-ஆனந்த வடிவினள்.

792. ஸமரஸத்தில் நிலை பெற்றவள்.

793. ('கபர்த்தி' என்ற ஜடாதாரியான) சிவனுடைய பத்தினி.

794. கலைகளை மாலையாகத் தரித்தவள்.

795. (பக்தர்களுடைய ஆசைகளைப் பூர்த்தி செய்விக்கும்) காமதேனு.

796. காமரூபிணி (நினைத்த வடிவெடுப்பவள்).

797. கலைகளின் நிதி.

798. காவியக் கலையாக இருப்பவள்.

799. ரஸத்தை அறிந்தவள்.

800. ரஸத்தின் பொக்கிஷம் (ஒ. ரஸோ வை ஸ:— தை. உப. 2.7.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

801. புஷ்டாயை
802. புராதநாயை
803. பூஜ்யாயை
804. புஷ்கராயை
805. புஷ்கரேக்ஷணாயை
806. பரஸ்மை ஜ்யோதிஷே
807. பரஸ்மை தாம்னே
808. பரமாணவே
809. பராத்பராயை
810. பாச-ஹஸ்தாயை
811. பாசஹந்த்ர்யை
812. பரமந்த்ர-விபேதின்யை

---

801. புஷ்டியாக இருப்பவள். (அன்பான ஆராதனையால் போஷிக்கப்பட்டவள்.)

802. புராதனமானவள். (ஒ. 'முன்னைப்பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே'—திருவெம்பாவை 9.)

803. பூஜிக்கத்தக்கவள்.

804. புஷ்டியை அளிப்பவள்.

805. கமலம் போன்ற கண்களை உடையவள்.

806. பரஞ்ஜோதி. (ஒ. 'தத் தேவா ஜ்யோதிஷாஞ் ஜ்யோதி-ராயுர்-ஹோபாஸதே ऽம்ருதம்'—ப்ரு. உப. 4.4.16.)

807. உத்தமமான இருப்பிடம். (ஒ. 'யம் ப்ராப்ய ந நிவர்த் தந்தே தத் தாம பரமம் மம'—கீ. 8.21.)

808. பரமாணு.

809. சிறந்தவர்களுக்கும் சிறந்தவள். (மும்மூர்த்திகளை விடச் சிறந்தவள்.).

810. பாசத்தைக் கையில் உடையவள்.

811. பாசங்களைப் போக்குபவள். (ஆசை, அவித்தை முதலியன பாசங்கள்.)

812. எதிரிகளின் (அஸ்திர அபிசார) மந்திரங்களின் சக்தியைப் பிளப்பவள் (அல்லது சிறந்த மந்திரமான பஞ்சதசாக்ஷரியின் பல பேதங்களைக் கற்பித்தவள்).

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

813. மூர்த்தாயை
814. அமூர்த்தாயை
815. அநித்ய-த்ருப்தாயை
816. முனி-மானஸ-ஹம்ஸிகாயை
817. ஸத்ய-வ்ரதாயை
818. ஸத்ய-ரூபாயை
819. ஸர்வாந்தர்யாமின்யை
820. ஸத்யை
821. ப்ரஹ்மாண்யை
822. ப்ரஹ்மணே
823. ஜனன்யை

813. உருவுடையவள். (ஒ. 'த்வே வாவ ப்ரஹ்மணோ ரூபே மூர்த்தஞ்ச அமூர்த்தஞ்ச'—ப்ரு. உப. 2.3.1.)

814. உருவில்லாதவள்.

815. அழிவுள்ள பொருள்களாலும் செய்யப்படும் உபசாரங்களால் திருப்தியடைபவள். (ஒ. 'பத்ரம் புஷ்பம் பலம் தோயம்'—கீ. 9.2.6. ஒ. 'நித்ய த்ருப்தா' -566.)

816. முனிவர்கள் மனத் தடாகத்தில் உள்ள ஹம்ஸம் (ஒ. 'ஸமுன்-மீலத் ஸம்வித்-கமல-மகரந்தைக-ரஸிகம்—ஸௌ. ல. 38.)

817. ஸத்திய விரதம் உடையவள். (உண்மை பேசுதல் என்ற விரதத்தால் அடையத்தக்கவள்.)

819. எல்லாப் பிராணிகளிடத்தும் அந்தர்யாமியாக இருப்பவள். (ஒ. 'ஏஷ த ஆத்மா அந்தர்யாம்யம்ருத:'—ப்ரு. உப. 3.7.4-24).

820. ஸதீ தேவி (தாக்ஷாயணி.)

821. பிரம்மசக்தியாக இருப்பவள். (ஒ. 'அணி-ரக்ஷாக்ர-கீலே-ஸ்யா-தணி: புச்சே஽க்னி: ஸோமயோ:—ஆனந்த மயகோசஸ்த-புச்சப்ரஹ்ம ரூபா இத்யர்த்த: । 'ப்ரஹ்மண ஆணீஸ்த' இதி ச்ருதிச்ச'—பா.)

822. பிரம்மமாக இருப்பவள்.

823. அனைத்தையும் ஸ்ருஷ்டிப்பவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

824. பஹுரூபாயை
825. புதார்ச்சிதாயை
826. ப்ரஸவித்ர்யை
827. ப்ரசண்டாயை
828. ஆஜ்ஞாயை
829. ப்ரதிஷ்டாயை
830. ப்ரகடாக்ருதயே
831. ப்ராணேச்வர்யை
832. ப்ராணதாத்ர்யை
833. பஞ்சாசத்-பீடரூபிண்யை

---

824. அநேக ரூபம் உள்ளவள்.

825. ஞானிகளால் அர்ச்சிக்கப்பட்டவள். (ஒ. 'சதுர்விதா பஜந்தே மாம் ஜனா: ஸுக்ருதினோ ऽர்ஜுந |' —கீ. 7.16.)

826. எல்லாவற்றையும் படைத்தவள்.

827. கோபம் மிகுந்தவள். (ஒ. 'பீஷாஸ்மாத் வாத: பவதே'— தை. உப. 2.8.)

828. (வேதவடிவான) ஆஜ்ஞா ரூபிணி. (ஜ்ஞாயை நம: பா.பே.)

829. பிரதிஷ்டையாக இருப்பவள். (ஒ. 'ப்ரதிஷ்டா ஸர்வ பூதானாம் ப்ரஜ்ஞைஷா பரமேச்வரீ'—பிரம்ம கீதை.)

830. எல்லோருக்கும் விளங்கும் வடிவினள். (ஒ. 'தமஹம்-ப்ரத்யய-வ்யாஜாத் ஸர்வே ஜானந்தி ஜந்தவ: । ததாபி சிவ ரூபேண ந விஜானந்தி மாயயா'—ஸூத ஸம்ஹிதை. ப்ரகடயோகினி வடிவினள்.)

831. பிராணன்களுக்கும் இந்திரியங்களுக்கும் ஈசுவரீ.

832. பிராண சக்தியையும் இந்திரிய சக்தியையும் கொடுப்பவள்.

833. ஐம்பது பீடங்களாக இருப்பவள். (ஐம்பது அக்ஷரங்கள், 'க்ஷ'வுடன் ஐம்பத்தொன்றாகும்; அவையே சக்தி பீடங்கள். காம ரூபம், வாராணஸீ, நேபாலம், கேதாரம், உஜ்ஜயினீ, பிரயாகை, காம கோடி முதலிய

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

834. விச்ருங்கலாயை
835. விவிக்த-ஸ்தாயை
836. வீரமாத்ரே
837. வியத்-ப்ரஸூவே
838. முகுந்தாயை
839. முக்தி-நிலயாயை
840. மூல-விக்ரஹ-ரூபிண்யை
841. பாவஜ்ஞாயை
842. பவ-ரோகக்ன்யை

ஐம்பத்தொரு க்ஷேத்ரங்கள் பாஹ்யமான தேவீ பீடங்கள்.)

834. தளை இல்லாதவள். (அரைஞாண் இல்லாதவள், ஒ. 'நக்னேதி வா । அலம்புராதி பீடேஷு தாத்ருச தேவீ மூர்த்தி தர்சனாத் ।')

835. தனிமையான இடத்தில் இருப்பவள். (விவேகிகளின் உள்ளத்தில் இருப்பவள்.)

836. வீரர்களுக்குத் தாய்.

837. ஆகாயத்தைப் படைத்தவள். (ஒ. 'ஆத்மன ஆகாச: ஸம்பூத: ।'—தை. உப. 2.1.)

838. முக்தி அளிப்பவள். ('முக்திந் ததாதீதி முகுந்தா' அல்லது முகுந்தன் வடிவானவள். ஒ. 'கதாசிதாத்யா லலிதா பும்-ரூபா க்ருஷ்ண விக்ரஹா । ஸ்வ-வம்ச-வாதனாரம்பா-தகரோத்-விவசம் ஜகத் ॥ தத: ஸ கோபீ ஸம்ஜ்ஞாபி-ராவ்ருதோऽபூத் ஸ்வ-சக்திபி: । ததா தேந விநோதாய ஸ்வம் ஷோடாऽகல்பயத்-வபு: ॥' —தந்த்ர ராஜம்.)

839. முக்திக்கு இருப்பிடமானவள்.

840. மூலவிக்ரஹ ரூபிணி. (ராஜராஜேசுவரி எல்லா சக்தி களுக்கும் பிறப்பிடம்).

841. மனத்தில் உள்ள எண்ணத்தையும் நோக்கத்தையும் ப்ரீதி யையும் அறிபவள்.

842. பிறவிப்பிணியைத் தீர்ப்பவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Paṇdit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

843. பவ-சக்ர-ப்ரவர்த்தின்யை
844. சந்த: ஸாராயை
845. சாஸ்த்ர-ஸாராயை
846. மந்த்ர-ஸாராயை
847. தலோதர்யை
848. உதார-கீர்த்தயே
849. உத்தாம-வைபவாயை
850. வர்ண-ரூபிண்யை

843. ஸம்ஸார சக்கரத்தைச் சுழலச் செய்பவள். (ஒ. 'ஏஷா ஸர்வாணி பூதானி பஞ்சபிர்-வ்யாப்ய மூர்த்திபி: । ஜன்ம-வ்ருத்தி-க்ஷயைர்-நித்யம் ஸம்ஸாரயதி சக்ர வத் ॥' —மனுஸ்மிருதி. சக்கரமும் மனமேயாம்.)

844. வேதஸாரமானவள். (ஸகல சாஸ்திரங்களிலும் ஸார மானது மூன்று வேதம். அதன் ஸாரம் காயத்ரி. அதற்கு ரூபம் இரண்டு; ஒன்று இருபத்து நான்கு அக்ஷரங்கள் உடையது, மற்றது பதினைந்து அக்ஷரங் கள் உடையதும் அதிரகசியமானதும். அல்லது மனத்தின் ருசியை அனுசரித்துச் செய்யப்படும் உபாஸனை. ஒ. 'யத்ர யத்ர மனஸ்-துஷ்டிர்-மனஸ்-தத்ரைவ தாரயேத் । தத்ர தத்ர பரானந்த-ஸ்வரூபம் ஸம்ப்ரகாசதே ॥ உபாஸக-தௌரேயஸ்ய யத்ரேச்சா ஸ ஏவ தர்ம: । யத்ர நேச்சா ஸ ஏவாதர்ம: ॥ ஈத்ருசம் ஸ்வை-ராசரணம் ஸாரம் ந்யாய்யம் யஸ்யா இத்யர்த்த:'—பா.)

845. சாஸ்திர ஸாரமானவள். (சாஸ்திரம் என்றால் வேத பரமாய் வேதத்தைப் பின்பற்றிய தர்சனம்.)

846. மந்திரஸாரம் ஆனவள்.

847. (கைத்தலம் போல் ஸமமான) சிறிய வயிறு உள்ளவள்.

848. பரந்ததும் உயர்ந்ததுமான கீர்த்தி வாய்ந்தவள்.

849. அளவிடமுடியாத பெருமை உள்ளவள்.

850. எழுத்துரூபம் ஆனவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

851. ஜன்ம-மருத்யு-ஜரா-தப்த ஜன-விச்ராந்தி-தாயின்யை
852. ஸர்வோபநிஷ-துத்குஷ்டாயை
853. சாந்த்யதீத-கலாத்மிகாயை
854. கம்பீராயை
855. ககநாந்தஸ்தாயை
856. கர்விதாயை
857. கானலோலுபாயை
858. கல்பனா-ரஹிதாயை
859. காஷ்டாயை
860. அகாந்தாயை

---

851. பிறப்பு இறப்பு மூப்புத் துன்பங்களில் தவிக்கும் ஜனங்களுக்கு உத்தமமான மோக்ஷ சுகமாகிய சாந்தியை அளிப்பவள்.

852. எல்லா உபநிஷத்துக்களிலும் உத்கர்ஷமாய் உரக்கக் கூறப்பட்டவள்.

853. சாந்திக்கும் உயர்ந்த கலை வடிவினள். (ஒ. 'சாந்த்யதீத-கலாத்வைத-நிர்வாணானந்த-போததா.')

854. ஆழங்காண முடியாதவள்.

855. ஆகாசத்திடையே இருப்பவள். (பூதாகாசம், தஹராகாசம், பராகாசம் மூன்றிலும் இருப்பவள்.)

856. கர்வம் உள்ளவள். (உலகனைத்துமாக இருக்கும் 'பராஹந்தா'. ஒ. 'அஹங்-க்ரது-ரஹம் யஜ்ஞ: ஸ்வதாஹ-மஹமௌஷதம்'—கீ. 9.16.)

857. ஸங்கீதத்தில் பிரியம் உள்ளவள்.

858. கற்பனைகள் இல்லாதவள்.

859. முடிவான எல்லை நிலமாக இருப்பவள். (ஒ. 'ஸா காஷ்டா ஸா பராகதி:'—கட. உப. 3.11.)

860. பாவத்தைப் போக்குபவள். (ஒ. 'அகம் பாபே ச து:க்கே ச')

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

861. காந்தார்த்த-விக்ரஹாயை
862. கார்ய-காரண-நிர்முக்தாயை
863. காம-கேலீ-தரங்கிதாயை
864. கனத்-கனக-தாடங்காயை
865. லீலா-விக்ரஹ-தாரிண்யை
866. அஜாயை
867. க்ஷய-விநிர்முக்தாயை
868. முக்தாயை
869. க்ஷிப்ர-ப்ரஸாதின்யை
870. அந்தர்முக-ஸமாராத்யாயை
871. பஹிர்முக-ஸுதுர்லபாயை

---

861. காந்தனாகிய பரமசிவனின் பாதி உடல் கொண்டவள்.
862. (சுத்த சைதன்ய வடிவில்) காரியகாரணங்களுக்கு அப்பாற்பட்டவள்.
863. காமேசுவரனுடைய லீலைகளாகிய அலைகள் தோன்றும் கடல்.
864. பிரகாசமான ஸ்வர்ண தாடங்கம் அணிந்தவள். (ஒ. ஸுதாமப்-யாஸ்வாத்ய....தவ ஜநநி தாடங்க-மஹிமா. ஸௌ. ல. 28.)
865. விளையாட்டாகப் பல உருவங்களைத் தரிப்பவள்.
866. பிறப்பு இல்லாதவள்.
867. மரணம் இல்லாதவள்.
868. ஸௌந்தர்யம் படைத்தவள். (ஒ. 'முக்த: ஸுந்தர மூடயோ:')
869. விரைவில் அருள் புரிபவள்.
870. உள் நாட்டத்தால் நன்கு ஆராதிக்கத்தக்கவள்.
871. வெளி நாட்டத்தால் அடைதற்கு அரியவள். (ஒ. தரள-கரணானாம் அஸுலபா—ஸௌ. ல. 95. ஒ. 'பராச: காமானனுயந்தி பாலா:'—கட. உப. 4.2.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

872. த்ரய்யை
873. த்ரிவர்க-நிலயாயை
874. த்ரிஸ்தாயை
875. த்ரிபுரமாலின்யை
876. நிராமயாயை
877. நிராலம்பாயை
878. ஸ்வாத்மா-ராமாயை

---

872. மூன்று வேத வடிவானவள். (ரிக்வேதம், 'அக்னி மீடே' என்று ஆரம்பிக்கிறது. யஜுர் வேதம் 'இஷேத்வா' என்று ஆரம்பிக்கிறது. ஸாம வேதம் 'அக்ன ஆயாஹி' என்று ஆரம்பிக்கிறது. அ-இ-அ என்ற இவ்வெழுத்துக்களின் ஸந்தியால் வாக்பவ பீஜம் 'ஐம்' உண்டாகிறது.)

873. 'அறம், பொருள், இன்பம்' என்ற த்ரிவர்க்கத்தில் நிலை பெற்றவள்.

874. மூன்றில் இருப்பவள். (ஒ. 'த்ரயோ லோகாஸ்-த்ரயோ தேவாஸ்-த்ரைவித்யம் பாவக-த்ரயம் । த்ரீணி ஜ்யோ-தீம்ஷி வர்காச்ச த்ரயோ தர்மாதயஸ்-ததா । த்ரயோ குணாஸ்-த்ரய:சப்தாஸ் த்ரயோ தோஷாஸ்-ததாச்ரமா:। த்ரய: காலாஸ்-ததாவஸ்தா: பிதரோ ऽஹர்-நிசாதய: । மாத்ரா த்ரயஞ் ச தே ரூபம் த்ரிஸ்தே தேவி ஸரஸ்வதி ॥' —மார்க்கண்டேயபுராணம்.)

875. திரிபுரமாலினி வடிவினள். (ஸ்ரீசக்கரத்தில் ஆறாவது ஆவரணத்தின் தேவதை.)

876. நோயற்றவள். (அன்னையை நினைத்தவர்க்கு எல்லா நோய்களும் நீங்கும்.)

877. வேறு பிடிப்பு வேண்டாதவள். (ஒ. 'பற்றுக பற்றற் றான் பற்றினை, அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு.' —குறள்.)

878. தனக்குள் தன்னையே ரமிப்பவள். (ஒ. 'ஸஹ்யேதாவா னாஸ யதா ஸ்த்ரீபுமாம்ஸௌ ஸம்பரிஷ்வக்தௌ ஸ இமமேவாத்மானம் த்வேதா பாதயத் தத: பதிச்ச

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

879. ஸுதா-ஸ்ருத்யை
880. ஸம்ஸார-பங்க-நிர்மக்ன-ஸமுத்தரண-பண்டிதாயை
881. யஜ்ஞ-ப்ரியாயை
882. யஜ்ஞ-கர்த்ர்யை
883. யஜமான-ஸ்வரூபிண்யை
884. தர்மாதாராயை
885. தனாத்யக்ஷாயை
886. தன-தான்ய-விவர்த்தின்யை
887. விப்ர-ப்ரியாயை

பத்னீசாபவதாம்'—ப்ரு. உப. 1.4.3. உலகாகிய நந்தவனத்தை மனத்திலேயே உடையவள்.)

879. அமிருத தாரையாக இருப்பவள். (ஸஹஸ்ராரத்திலிருந்து பெருகுவது. ஒ. 'ஸுதாஸாராபிவர்ஷிணீ'—*106*-வது நாமம்.

880. ஸம்ஸாரச் சேற்றில் புதைந்தவரைத் தூக்கிவிடுவதில் திறமை வாய்ந்தவள். (ஒ. தேஷாமஹம் ஸமுத்தர்த்தா —கீ. *12.7.*)

881. யஜ்ஞத்தை விரும்புபவள்.

882. யஜ்ஞத்தைச் செய்பவள். (யஜமான பத்தினி வடிவினள்.)

883. யஜமான வடிவினள். (ஒ. 'யஜ்ஞோ யஜ்ஞபதிர்-யஜ்வா யஜ்ஞாங்கோ யஜ்ஞவாஹன:'—விஷ்ணு ஸஹஸ்ர நாமம். சுலோ. *103.*)

884. தர்மத்திற்கு ஆதாரமாக இருப்பவள்.

885. செல்வத்திற்கு அதிதேவதை.

886. தனத்தையும் தானியத்தையும் விருத்தி செய்பவள்.

887. விப்ரரிடம் பிரியம் உள்ளவள். (ஒ. 'ஜன்மனா ப்ராஹ்மணோ ஜ்ஞேய: ஸம்ஸ்காரைர்-த்விஜ உச்யதே । வித்யயா யாதி விப்ரத்வம் த்ரிபி: ச்ரோத்ரிய உச்யதே.')

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

888. விப்ர-ரூபாயை
889. விச்வ-ப்ரமண-காரிண்யை
890. விச்வக்ராஸாயை
891. வித்ருமாபாயை
892. வைஷ்ணவ்யை
893. விஷ்ணுரூபிண்யை
894. அயோன்யை

888. விப்ரவடிவினள். (அ. 'அதவா விப்ரான் ரூபயதி பூர்வ-ரூபவத: கரோதி.' தேவியின் ஆராதனையால் ஓஜஸ்ஸுூம் தேஜஸ்ஸுூம் வளர்ந்து விப்ரனிடம் ஏற்படும் சக்திக் குறையைப் பூர்த்தி செய்து அவனைத் தகுதியுடையவனாய்ச் செய்கிறது.)

889. உலகைச் சுற்றிவரச் செய்பவள். (ஒ. 'ப்ராமயன் ஸர்வ பூதானி யந்த்ராரூடானி மாயயா'—கீ 18.61.)

890. உலகை ஒரு கவளமாக உண்பவள். (ஒ. 'யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ரஞ்ச உபே பவத ஓதன: ।' —கட. உப. 2.25.)

891. பவழம் போன்ற காந்தியுள்ளவள்.

892. விஷ்ணு சக்தியாக இருப்பவள்.

893. விஷ்ணுவாகவே இருப்பவள். (ஒ. ஆத்யா சக்திர்-மஹேசஸ்ய சதுர்த்தா-பின்ன-விக்ரஹா । போகே பவானீ ரூபா பும் ரூபா துர்கா ரூபா ச ஸங்கரே ॥ கேர்பே ச காளிகா ரூபா ஸா ச மதாத்மிகா ॥— லலிதோபாக்கியானத்தில் விஷ்ணு வசனம். ஒ. 'ஸஹஸ்ர-மூர்த்தான-மனந்த-சக்திம் ஸஹஸ்ர-பாஹுூம் புருஷம் புராணம் । சயான-மப்தெள லலிதே தவைவ நாராயணாக்யம் ப்ரணதோऽஸ்மி ரூபம் ।' — கூர்ம புராணத்தில் ஹிமவான் வசனம். ஒ. 'துர்காம் காத்யாயனீஞ் சைவ யஜன் வாக்தேவதாமபி । சேதஸா ஸுப்ரஸன்னேன விஷ்ணுலோக-மவாப்னுயாத்'— ப்ருஹத் பராசர ஸ்மிருதி.)

894. பிறப்பிடம் (காரணம்) இல்லாதவள் (பிறப்பு இல்லாத தால்).

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

895. யோநி-நிலயாயை
896. கூடஸ்தாயை
897. குலரூபிண்யை
898. வீரகோஷ்டீ-ப்ரியாயை
899. வீராயை
900. நைஷ்கர்ம்யாயை
901. நாத-ரூபிண்யை

---

895. (அனைத்துலகிற்கும் உலகைப் படைப்பவர்க்கும்) காரணமாகவும் உற்பத்தி ஸ்தானமாகவும் இருப்பவள். ஒ. 'யோனிச்ச ஹி கீயதே.'—பிரம்ம ஸூத்ரம். 1.4.27.)

896. கூடம்போல் அசையாது இருப்பவள். ஜீவ சைதன்யத்திற்கு அதிஷ்டானமான கூடஸ்த சைதன்யமாக இருப்பவள் அல்லது வாக்பவ கூடத்தில் இருப்பவள். ஒ. 'கூடஸ்த-மசலந் த்ருவம்'—கீ. 12.4. 'கூடஸ்தோ அக்ஷர உச்யதே'—கீ. 15.16. ஒ. 'கூடம் யந்த்ரே Sந்ருதே ராசௌ நிச்சலே லோஹ முத்கரே। மாயா Sத்ரி-ச்ருங்கயோஸ்-துச்சே ஸீராவயவ-தம்பயோ: ॥ புரத்வாரே ச சம்ஸந்தி விச்வ:' ॥)

897. குலரூபிணீ. (வம்சம், பாஹ்ய பூஜை, மூலாதாரம், கௌல மார்க்கம் முதலியவற்றில் இருப்பவள்.)

898. (ஞான) வீரர்களின் கோஷ்டியை விரும்புபவள்.

899. வீரியம் உள்ளவள், (வீரனான பதியையும் புத்திரனையும் உடையவள் 'வீரா'.)

900. கர்மத் தொடர்பு அற்றவள். (ஒ. 'யதா ஸர்வகதம் ஸௌக்ஷ்ம்யா-தாகாசம் நோபலிப்யதே।' கீ. 13.32.)

901. நாதரூபிணீ. (பிரணவத்தின் அந்தத்திலுள்ளது நாதம். ஒ. 'ஆனந்த-லக்ஷண-மநாஹத நாம்னி தேசே நாதாத்மனா பரிணதம் தவரூப-மீசே। ப்ரத்யங்-முகேன மனஸா பரிசீயமானம் சம்ஸந்தி நேத்ர-ஸலிலை: புலகைச்ச தன்யா: ॥'—அம்பாஸ்துதி. 19.—காளிதாஸன்.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

902. விஜ்ஞான-கலனாயை
903. கல்யாயை
904. விதக்தாயை
905. பைந்தவாஸனாயை
906. தத்வாதிகாயை
907. தத்வமய்யை
908. தத்வமர்த்த-ஸ்வரூபிண்யை

---

902. விஜ்ஞானத்தை உண்டாக்குபவள். (ஒ. 'சதுர்தசானாம் வித்யானாம் தாரணம் ஹி யதார்த்தத: | விஜ்ஞான-மிதி தத்வித்யாத்'.)

903. கலைகளில் திறமை வாய்ந்தவள்.

904. சாதுரியம் உடையவள்.

905. பிந்துவாகிய ஆஸனத்தில் இருப்பவள். (ஆஜ்ஞைக்கு மேல் உள்ள பிந்து அல்லது ஸஹஸ்ரார மத்திய பிந்து அல்லது ஹம்ஸ ரூபமான பிந்து வ்யூஹம். ஒ. 'பிந்து வ்யூஹம் ப்ரவக்ஷ்யாமி பீஜரூபம் வரானனே | ஹகாரம் பிந்து ரூபேண ப்ரஹ்மாணம் வித்திபார்வதி || ஸகாரம் பிந்து ஸர்காப்யாம் ஹரிஹராவிதி |—ஏவம் பிந்து த்ரயைர் யோகாத் த்ரிபுராநாம ரூபிணீ ||' —ஞானார்ணவ தந்த்ரம்.)

906. முப்பத்தாறு தத்துவங்களுக்கும் அப்பாற்பட்ட இயல்பான வடிவுடையவள். (ஒ. 'யுஷ்ம-தஸ்மத்-ப்ரத்யயாதீதம்.' பிரளய காலம் வரை இருந்து போகம் தருவது தத்வம். 'ஆப்ரலயம் யத்திஷ்டதி ஸர்வேஷாம் போகதாயி பூதானாம் | தத்-தத்வமிதி ப்ரோக்தம் ந சரீர கடாதி தத் ||')

907. தத்வரூபம் ஆனவள். (ஸத்-ஆத்ம தத்வம், சித்-வித்யா தத்வம், ஆனந்த-சிவதத்வம் என்ற மூன்று தத்வ வடிவானவள்.)

908. 'தத்'-'த்வம்' என்ற பரமாத்ம-ஜீவாத்ம ஐக்கிய வடிவானவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

909. ஸாமகான-ப்ரியாயை
910. ஸோம்யாயை
911. ஸதாசிவ-குடும்பின்யை
912. ஸவ்யாபஸவ்ய-மார்கஸ்தாயை
913. ஸர்வாபத்-விநிவாரிண்யை
914. ஸ்வஸ்தாயை

---

909. ஸாம கானத்தில் பிரியமுள்ளவள்.

910. சந்திரனைப்போல் அழகியவள். (உள்ளம் குளிர்ந்தவள். 'ஸௌம்யா' என்றும் பாடம்.)

911. ஸதாசிவ பத்தினி.

912. ஸவ்ய-அபஸவ்ய-மார்க்கங்களில் இருப்பவள். (ஸவ்யம் ஸ்ருஷ்டி, அபஸவ்யம் லயம், மார்க்கம் ஸ்திதி; ஸவ்யம் இடை, அபஸவ்யம் பிங்கலை, மார்க்கம் ஸுஷும்னை; அல்லது ஸவ்ய மார்க்கம் என்ற வைதிக உபாஸனை, அபஸவ்யம் என்ற வாமாசார தந்த்ர உபாஸனை எனவும் பொருள் கொள்ளலாம்.)

913. எல்லா ஆபத்துக்களையும் நீக்குபவள். (ஒ. 'சரணம் த்வாம் ப்ரபத்யந்தே யே தேவி பரமேச்வரி । ந தேஷாமாபத: காச்சிஜ் ஜாயந்தே க்வாபி ஸங்கடா: ॥' —வராஹ புராணம்.)

914. (ஸ்வஸ்தமாக) தன்னிடமே நிலை பெற்றிருப்பவள். (இரண்டாவதினின்றே துன்பமும் பயமும் வருவதால் தன்னிடமே நிலைத்திருத்தல் துன்பமற்ற நிலை. அதனால் தான் நோயற்ற நிலையை 'ஸ்வஸ்தம்' எனக் கூறுகிறோம். ஒ. 'ஸ பகவ: கஸ்மின் ப்ரதிஷ்ட்டித இதி ஸ்வே மஹிம்னி யதி வா ந மஹிம்னீதி' —சா. உப. 7.23.1.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

915. ஸ்வபாவ-மதுராயை
916. தீராயை
917. தீர-ஸமர்ச்சிதாயை
918. சைதன்யார்க்ய-ஸமாராத்யாயை
919. சைதன்யகுஸும-ப்ரியாயை
920. ஸதோதிதாயை
921. ஸதா-துஷ்டாயை

---

915. இயற்கையாகவே மதுரமாக இருப்பவள். (அல்லது மதுரையில் ஆலயங் கொண்டு விளங்கும் மீனாக்ஷி வடிவினள்.)

916. புத்திவன்மை வாய்ந்தவள். (அல்லது புத்தி வன்மையை அருள்பவள். அ. 'தியம் ராதி ததாதி இதி தீர:')

917. தீரர்களால் நன்கு பூஜிக்கப்பட்டவள்.

918. (விசேஷ அர்க்கியம் எனும்) சைதன்ய அர்க்கியத்தால் நன்கு ஆராதிக்கத் தக்கவள். (ஒ. 'ஜ்ஞானமர்க்யம்.'—பாவனோபநிஷத்து.)

919. சைதன்யமாகிற புஷ்பத்தை விரும்புபவள். (ஒ. 'ஜடானாம் சைதன்ய-ஸ்தபக-மகரந்த-ஸ்ருதி ஜரீ'—ஸௌ. ல 3. ஒ. 'அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம், இந்த்ரியாணாஞ்ச நிக்ரஹ: । க்ஷாந்தி: புஷ்பந் தயா புஷ்பம் ஜ்ஞாந-புஷ்பம் பரம் மதம் ॥ தப: புஷ்பம் ஸத்ய-புஷ்பம் பாவ-புஷ்ப-மதாஷ்டமம் ॥' அபியுக்தம். 'ஸத்' அரும்பு, 'சித்' புஷ்பம், 'ஆனந்தம்' கனி.)

920. (ஒரு பொழுதும் அஸ்தமிக்காமல்) எப்போதும் உதயமாகியிருப்பவள். (ஒ. 'உதுத்யம் ஜாத வேதஸம்.' ஒ. 'ந வை தத்ர ந நிம்லோச நோதியாய கதாசன'—சா உப. 3.11.2. அல்லது நல்லவர்களிடம் எப்பொழுதும் பிரகாசிப்பவள்.)

921. எப்போதும் ஸந்தோஷமாயிருப்பவள். (அல்லது நல்லவர்களிடம் ஸந்தோஷமாயிருப்பவள்.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

922. தருணாதித்ய-பாடலாயை
923. தக்ஷிணா-தக்ஷிணாராத்யாயை
924. தரஸ்மேர-முகாம்புஜாயை
925. கௌலிநீ-கேவலாயை
926. அனர்க்ய-கைவல்ய பத-தாயின்யை
927. ஸ்தோத்ர-ப்ரியாயை

---

922. யௌவன ஸூரியனைப் போன்று சிறிதே சிவந்த வெண்மை நிறத்துடன் பிரகாசிப்பவள். (உபாஸனைக் குத் தகுந்தபடி மூர்த்தி பேதமும் வர்ண பேதமும்.)

923. பண்டிதர்களாலும் பாமரர்களாலும் ஆராதிக்கப் பட்டவள். (வைதிக மார்க்கத்தாலும் அவைதிக மார்க் கத்தாலும் அல்லது கர்ம மார்க்கத்தாலும் ஞான மார்க் கத்தாலும் ஆராதிக்கப் பட்டவள். ஒ. 'வித்யயா ததாரோஹந்தி யத்ர காமா: பராகதா: । ந தத்ர தக்ஷிணா யந்தி நாவித்வாம்ஸஸ்-தபஸ்வின: ॥' ஒ. 'ப்ரஜாகாமா தக்ஷிணம் ப்ரதிபத்யந்தே' —ப்ரச்ன உப. 1.9.)

924. தாமரைப்பூ மலர்ந்தாற் போன்ற புன்சிரிப்பு முகம் உடையவள். (அல்லது பய காலத்திலும்—பிரளய காலத்திலுங்கூட—புன்சிரிப்புடையவள். ஒ. தரே பய காலேऽபி ஸ்மரமேவ முகாம்புஜம் யஸ்யா இதி வா ॥)

925. கௌல தர்மமும் கேவல ஞானதர்மமும் இசையப் பெற்றவள்.

926. அளவற்ற மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அருள்பவள்.

927. ஸ்தோத்திரத்தில் பிரியமுள்ளவள், (ஒ. 'ஸ்தோத்ரம் லௌகிகோ குணானுவாத: ஷட்வித: । நமஸ்காரஸ்-ததாசீச்ச ஸித்தாந்தோக்தி: பராக்ரம: । விபூதி: ப்ரார்த் தனா சேதி ஷட்-விதம் ஸ்தோத்ர-லக்ஷணம் ॥')

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

928. ஸ்துதி-மத்யை
929. ச்ருதி-ஸம்ஸ்துத-வைபவாயை
930. மனஸ்வின்யை
931. மானவத்யை
932. மஹேச்யை
933. மங்களாக்ருதயே
934. விச்வமாத்ரே
935. ஜகத்தாத்ர்யை
936. விசாலாக்ஷ்யை
937. விராகிண்யை
938. ப்ரகல்பாயை
939. பரமோதாராயை

928. துதிப்பவர்க்கு அறிவையும் ஐசுவரியத்தையும் அருள்பவள். (ஒ. 'ஸ்துத்யா மதிச்ச ஈச்ச யஸ்யா இதி வா। யத் ஸ்துத்யா ஜ்ஞானைச்வர்யே லப்யதே ஸேதி யாவத்')

929. வேதம் போற்றும் வைபவமுடையவள். (ச்ருதிபி: ஸம்யக் ஸ்துதம் பரிசிதம் வைபவம் விபுத்வம் யஸ்யா: ।'—பா.)

930. ஸ்வதந்திரமான மனத்தைக் கொண்டவள்.

931. பெருந்தன்மை உடையவள்.

932. மஹேசுவரி.

933. மங்கள வடிவை உடையவள்.

934. உலகீன்ற அன்னை.

935. உலகைத் தாங்குபவள்.

936. விசாலமான கண்ணைக் கொண்டவள். (காசியில் விசாலாக்ஷி மூர்த்தி, நேபாளம் தேவியின் நேத்ரஸ்தானமாகக் கூறப்பட்டிருப்பதால் 'விசாலா' என்னும் ஹிமாலய நேபாளப் பிரதேசத்தைக் கண்ணாக உடையவள் எனவும் பொருள் கொள்ளலாம்.)

937. வைராக்கிய சீலம் பொருந்தியவள்.

938. துணிச்சல் நிறைந்தவள்.

939. சிறந்த கொடையாளி.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

940. பராமோதாயை
941. மனோமய்யை
942. வ்யோம-கேச்யை
943. விமானஸ்தாயை
944. வஜ்ரிண்யை
945. வாமகேச்வர்யை
946. பஞ்சயஜ்ஞ-ப்ரியாயை
947. பஞ்சப்ரேத-மஞ்சாதி-சாயின்யை

---

940. பரம ஆனந்தத்தை உடையவள்.

941. மனோமயமானவள்.

942. வியோமகேசரான சிவ பத்னீ. (விராட் ரூபிக்கு ஆகாசமே கேசம்.)

943. விமானத்திலிருப்பவள். (அளவு கடந்த நிலையிலிருப்பவள். ஒ. 'விகதம் மானம் பரிமாணம் யஸ்ய ததபரிச் சின்னம் ப்ரஹ்ம தந்நிஷ்டா வா.'—பா.)

944. இந்திராணி வடிவினள். (ஒ. 'வஜ்ரிண இந்த்ரஸ்ய ஸ்த்ரீ சசி ரூபா'.)

945. வாமகர்களின் ஈசுவரி. (ஒ. வாமா வாமமார்க்க-ரதாஸ்-த ஏவ பஞ்ச-யஜ்ஞவிலோபகத்வாத் குத்ஸிதா இதி வாமகா:')

946. பஞ்ச மஹா யஜ்ஞத்தில் பிரியமுள்ளவள். (சுருதியில் கூறிய ஐந்து யஜ்ஞங்கள்: அக்னிஹோத்ரம், தர்சபூர்ண மாஸம், சாதுர்மாஸ்யம், பசுபந்தம், ஸோமயாகம். ஸ்மிருதியில் கூறியவை: தேவ-பித்ரு-மனுஷ்ய-பூத-வேத யஜ்ஞங்கள். பாஞ்சராத்ர ஆகமத்தில் கூறியவை: அபிகமனம்-உபாதானம்-இஜ்யா-ஸ்வாத்யாயம்-யோகம். அல்லது உபநிஷத்தில் கூறிய த்யு-பர்ஜன்ய-ப்ருத்வீ-புருஷ-யோஷித்-ரூப குண்டங்களில் ச்ரத்தா-ஸோம-வ்ருஷ்டி-அன்ன-ரேதஸ் ரூபமான ஆஹுதிகளால் செய்யப்படும் யஜ்ஞம்.)

947. ஐந்து ப்ரேத வடிவமான மஞ்சத்தில் வீற்றிருப்பவள். (ஒ. 'கதாஸ்-தே மஞ்சத்வம்'—ஸௌ. ல. 92.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

948. பஞ்சம்யை
949. பஞ்ச-பூதேச்யை
950. பஞ்ச-ஸங்க்யோப சாரிண்யை
951. சாச்வத்யை
952. சாச்வதைச்வர்யாயை
953. சர்மதாயை
954. சம்பு-மோஹின்யை
955. தராயை
956. தரஸுதாயை
957. தன்யாயை

948. பஞ்சப்ரம்மத்தில் ஐந்தாவதான ஸதாசிவ பத்னீ. (ஒ. 'த்ரிஷுருத்ரோ வரிஷ்ட: ஸ்யாத் தேஷுமாயீ பர: சிவ: । மாயா வசிஷ்டாத் ஸர்வஜ் ஞாத் ஸாம்ப: ஸத்யாதி லக்ஷண: ஸதாசிவோ வரிஷ்ட: ஸ்யாந்-நாத்ர கார்யா விசாரணா ॥' —ஸூத ஸம்ஹிதை.)
949. பஞ்ச மஹா பூதங்களின் அதீசுவரீ.
950. ஐந்து வகை உபசாரத்துடன் பூஜிக்கத்தக்கவள். (கந்தம்-புஷ்பம்-தூபம்-தீபம்-நைவேத்யம் என்ற ஐந்து உபசாரங்கள்.)
951. எப்போதும் இருப்பவள்.
952. அழியாத ஐசுவரியம் உடையவள்.
953. இன்பமளிப்பவள்.
954. சிவனை மோஹிக்கச் செய்தவள்.
955. பூதேவி வடிவானவள்.
956. பர்வதகுமாரீ.
957. ஸகல ஸம்பத்தும் நிறைந்தவள். (யோகிகளுக்கு 'தன்யா' என்னும் மனவடக்கத்தால் மகிழ்ச்சி பொங்கும் நிலையை அருள்பவள். ஒ. 'வேண்டாமையன்ன விழுச் செல்வம் ஈண்டில்லை, யாண்டும் அஃதொப்பதில்'—குறள் 362. பிராணப் பிரயாண ஸமயத்தில் ஏற்படும் 'தன்யா' எனும் தியான யோகமாக இருப்பவள். பவிஷ்யோத்தர புராணத்தில் மரண கால நினைவு நான்கு விதமாய் வகுத்துக் கூறப்படுகிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

958. தர்மிண்யை
959. தர்ம-வர்த்தின்யை
960. லோகாதீதாயை
961. குணாதீதாயை
962. ஸர்வாதீதாயை
963. சமாத்மிகாயை
964. பந்தூக-குஸும-ப்ரக்யாயை

(1) ஆர்த்தம்— போகங்களில் அளவு கடந்த ஆசையும் உலகை விட்டுப்பிரிய மனமின்றி வருந்துதலும்; இதனால் தாழ்ந்த பிறவி. (2) ரௌத்ரம்— உடலழியு மென்று நினைத்து வருந்தாமல் இருத்தல்; இதனால் உயர்ந்த மனிதப் பிறவி. (3) தன்யா என்பது தெளிவு, தயை, அடக்கம் இவற்றுடன் கூடியது; இதனால் தேவஜன்மம். ஒ. 'ஸூத்ரார்த்த-மார்கண மஹாவ்ரத-பாவனானி நிர்பந்த-மோக்ஷகமனாகதி-ஹேது-சிந்தா । பஞ்சேந்த்ரியாத்யுப-சமச்ச தயா ச பூதே த்யானந்து தன்யமிதி தத் ப்ரவதந்தி ஸந்த: ॥ (4) சுக்லம் என்பது தத்துவ நிஷ்டை. இதனால் பிறப்பின்மை.)

958. தர்மத்தில் மனம் கொண்டவள்.

959. தருமத்தை வளர்ப்பவள். (ஒ. ஜிதேந்த்ரியத்வம் சௌசஞ்ச மாங்கல்யம் பக்திரேவ ச । சங்கரே பாஸ்கரே தேவ்யாம் தர்மோऽயம் மானுஷ: ஸ்ம்ருத: । த்யாத: ஸாம்ப இமான் தர்மான் வ்ருத்திம் நயதி தேஹினாம் ॥'—வாமன புராணம்.)

960. உலகங்களைக் கடந்தவள்.

961. குணங்களைக் கடந்தவள்.

962. எல்லாவற்றையும் கடந்தவள்.

963. சாந்த ஸ்வரூபிணி. (ஒ. 'ப்ரபஞ்சோபசமம் சாந்தம் சிவ-மத்வைதம் சதுர்த்தம் மன்யந்தே'—மா. உப. 7.)

964. பந்தூக புஷ்பம் போன்ற காந்தியுடையவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

965. பாலாயை
966. லீலா-விநோதின்யை
967. ஸுமங்கல்யை
968. ஸுக-கர்யை
969. ஸுவேஷாட்யாயை
970. ஸுவாஸின்யை
971. ஸுவாஸின்யர்ச்சன-ப்ரீதாயை
972. ஆசோபனாயை
973. சுத்த-மானஸாயை
974. பிந்து-தர்ப்பண-ஸந்-துஷ்டாயை

---

965. பாலாம்பிகை வடிவினள். (கன்யாகுமரி பாலா தேவி.)

966. (பிரபஞ்ச) லீலையில் ரமிப்பவள்.

967. ஸுமங்கலி வடிவினள். அல்லது பிரம்ம வித்யா வடிவினள். (ஒ. 'அசுபானி நிராசஷ்டே தனோதி சுப ஸந்ததிம் । ஸ்ம்ருதி மாத்ரேண யத் பும்ஸாம் ப்ரஹ்ம தன்-மங்களம் விது: ॥'—விஷ்ணு புராணம்.)

968. சுகத்தை அருள்பவள்.

969. நன்கு அலங்கரிக்கப்பட்டவள்.

970. ஸுவாஸினி வடிவினள். (சிறந்த ஆடை ஆபரணங்களால் அலங்கரிக்கப் பெற்ற ஸுமங்கலி. பரமசிவன் எப்போதும் ஜீவித்திருப்பதால் தேவி என்றும் ஸுவாஸினியே.)

971. ஸுவாஸினி பூஜையால் திருப்தி அடைபவள். (அல்லது ஸுவாஸினிகள் செய்யும் அர்ச்சனையால் மகிழ்பவள்.)

972. பரிபூரணமான சோபையுள்ளவள்.

973. பரிசுத்தமான மனம் உடையவள்.

974. பிந்து தர்ப்பணத்தால் மகிழ்ச்சி அடைபவள். (ஆனந்தமய சக்கர பிந்துவில் பிராம்மணர் பாலாலும், க்ஷத்திரியர் நெய்யாலும், வைசியர் தேனாலும், ஏனையோர் மதுவாலும் செய்யும் தர்ப்பணம்.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

975. பூர்வஜாயை
976. த்ரிபுராம்பிகாயை
977. தசமுத்ராஸமாராத்யாயை
978. த்ரிபுராஸ்ரீவசங்கர்யை
979. ஜ்ஞானமுத்ராயை

---

975. *எல்லாவற்றிற்கும் முன்பு உண்டானவள். (ஒ. 'அஹமஸ்மி ப்ரதமஜா ருதஸ்ய'—தை. உப. 4.10.6.)*

976. *திரிபுராம்பிகை வடிவினள். (எட்டாவது ஆவரணத்தின் அதிதேவதை. ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண சரீரங்களுக்கும் ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்தி அவஸ்தைகளுக்கும் அதிதேவதை.)*

977. *ஸர்வஸம்க்ஷோபிணீ முதல் ஸர்வத்ரிகண்டா முடிய உள்ள பத்து முத்திரைகளால் நன்கு ஆராதிக்கப் பட்டவள். (ஐந்து விரல்கள் ஐம்பூதங்களையும் ஐந்து கிருத்யங்களையும் காட்டுபவை. வலது கை பிரகாச ரூபனான சிவனையும் இடதுகை விமர்சரூபியான தேவியையும் குறிக்கும். ஒ. 'அயம் மே ஹஸ்தோ பகவான் அயம் மே பகவத்தர:'—ருத்ரம்).*

978. *த்ரிபுராஸ்ரீயைத் தன்வசம் கொண்டவள். (த்ரிபுராஸ்ரீ ஐந்தாவது ஆவரணமான ஸர்வார்த்த ஸாதக சக்கரத்தின் அதிதேவதை.)*

979. *ஞானமுத்திரை வடிவினள். (இதுவே சின்முத்திரை எனப்படும். தக்ஷிணாமூர்த்தி வடிவில் பரமசிவன் இந்த முத்திரையினால் ஸநகாதிகளுக்கு மௌனமாய் உபதேசம் செய்கிறார். ஒ. 'மௌன வ்யாக்யா-ப்ரகடித -பரப்ரஹ்ம தத்வம் யுவானம் வர்ஷிஷ்டாந்தே வஸத்ருஷிகணை-ராவ்ருதம் ப்ரஹ்ம நிஷ்டை: । ஆசார்யேந்த்ரம்-கரகலித-சின்முத்ர-மானந்த ரூபம் ஸ்வாத்மாராமம் முதிதவதனம் தக்ஷிணாமூர்த்தி-மீடே' ॥)*

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

980. ஜ்ஞான-கம்யாயை
981. ஜ்ஞான-ஜ்ஞேய-ஸ்வரூபிண்யை
982. யோனி-முத்ராயை
983. த்ரிகண்டேச்யை
984. த்ரிகுணாயை
985. அம்பாயை
986. த்ரிகோணகாயை
987. அநகாயை
988. அத்புத-சாரித்ராயை

---

980. ஞானத்தால் அடையத்தக்கவள். (ஒ. 'யத் து மே நிஷ்கலம் ரூபம் சின்மாத்ரம் கேவலம் சிவம் | ஸர்வோபாதி-விநிர்முக்த-மனந்த-மம்ருதம் பரம் | ஜ்ஞானேனைகேன தல்லப்யம் க்லேசேன பரமம் பதம் | ஜ்ஞானமேவ ப்ரபச்யந்தோ மாமேவ ப்ரவிசந்தி தே ||'—கூர்மபுராணத்தில் தேவி வசனம்.)

981. ஞானமாவும் ஞேயமாகவும் இருப்பவள். (இதுவே த்ருக்-த்ருச்யம்.)

982. யோனி முத்திரை வடிவினள்.
(அ. 'முதம் ராதி இதி முத்ரா.)

983. த்ரிகண்டா முத்திரைக்கு ஈசுவரி. (இதில் எல்லா முத்திரைகளும் அடங்கும். இது மஹா யோனி முத்திரை. அல்லது ஸோம-சூரிய-அக்கினி என்ற மூன்று கண்டங்களுக்கும் ஈசுவரி.)

984. முக்குணவடிவினள். (ஒ. 'பதைஸ்-த்ரிபிர்-பலிர்-பத்த: ஸவர்க்காதி த்ரிபதான் கதா | உத்பத்தி-ஸ்திதி-நாசைச்ச ஸத்வாத்யைஸ்-த்ரிகுணோச்யதே'—தேவீ புராணம்.)

985. (முக்குணத்திற்கும்) தாய். (ஒ. 'ஈத்ருசஸ்ய குணத்ரயஸ்யாபி மாதா காரணபூதா'—பா.)

986. முக்கோணத்தை அடைந்திருப்பவள்.

987. பாவம் அணுகாதவள்.

988. ஆச்சரியமான சரித்திரம் உடையவள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

989. வாஞ்சிதார்த்த-ப்ரதாயின்யை
990. அப்யாஸாதிசய-ஜ்ஞாதாயை
991. ஷடத்வாதீத-ரூபிண்யை
992. அவ்யாஜ-கருணா-மூர்த்தயே
993. அஜ்ஞான-த்வாந்த-தீபிகாயை

---

989. விரும்பிய பொருளைத் தருபவள். (ஒ. த்வதன்ய:—ஸௌ ல. 4.)

990. (இனிச் சிவசக்தி ஐக்கிய வர்ணனை.) அப்பியாஸத்தின் பெருமையினால் அறியத்தக்கவள். (ஒ. 'ஆஸுப்தே-ராம்ருதே: காலம் நயேத்-வேதாந்த-சிந்தயா.' ஒ. 'ஆவ்ருத்தி-ரஸக்ரு-துபதேசாத்'—பிரம்ம ஸூத்ரம். 4.1.1.)

991. ஆறு அத்துவாக்களைக் கடந்த ரூபம் உள்ளவள். (அத்வாக்கள் அல்லது உபாஸனா மார்க்கங்கள் ஆறு. வர்ணம்-பதம்-மந்த்ரம்-கலை-தத்வம்-புவனம் என்பனவாம். முதல் மூன்றும் சப்தரூபம்: விமர்சம், சக்தி அம்சம்; பின் மூன்றும் அர்த்தரூபம்: பிரகாசம், சிவாம்சம். அல்லது சைவ வைஷ்ணவாதி ஆறு மார்க்கங்கள். 'ஷடத்வா' எனப்படும்.)

992. காரணம் பாராமல் கருணை செய்பவள்.

993. அஞ்ஞானமாகிய இருட்டைப் போக்கும் தீபம் போல் உள்ளவள். (ஒ. 'தேஷா-மேவானுகம்பார்த்த-மஹமஜ்ஞானஜந்தம:। நாசயாம்-யாத்ம - பாவஸ்தோ ஜ்ஞான - தீபேன பாஸ்வதா' ।। —கீ. 10.11 ஒ. 'அவித்யானாமந்தஸ்திமிர-மிஹிர-த்வீப-நகரீ'—ஸௌ ல. 3).

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

994. ஆபால-கோப-விதிதாயை
995. ஸர்வானுல்லங்க்ய-சாஸனாயை
996. ஸ்ரீசக்ரராஜ-நிலயாயை
997. ஸ்ரீமத்-த்ரிபுரஸுந்தர்யை
998. ஸ்ரீ சிவாயை
999. சிவசக்த்யைக்ய-ரூபிண்யை

---

994. சிறு குழந்தைகளும் இடையரும் உள்பட எல்லோரா லும் அறியப்பட்டவள். (ஒ. 'உதைனங்-கோபா அத்ருசன், அத்ருசன் - னுதஹார்ய:—ஸ்ரீருத்ரம்.)

995. எவராலும் மீறமுடியாத கட்டளைகளின் பிறப்பிடம். (ஒ. ஜகத் ஸூதே தாதா ஹரி-ரவதி—ஸௌ. ல. 24.)

996. ஸ்ரீசக்ரத்தை இருப்பிடமாக உடையவள் (ஒ. 'ஸ்ரீசக்ரம் சிவயோர்-வபு:')

997. ஸ்ரீமதியாகவும் திரிபுரரின் பத்தினியாகவும் இருப் பவள். (இயல்பான மோக்ஷ வடிவமாம் ஸ்வரூப விச்ராந்தி என்ற பேரானந்த நிறைவுடன் கூடியதும், ஜாக்கிரம் முதலிய மூன்று அவஸ்தைகளிலும் ஒரு படித்தான எழில் வடிவினதுமான ஸம்வித் வடிவினள்.)

998. பரமமங்கள ரூபிணியானவள். (அதுவே பரமமங்கள மான நிலை.)

999. சிவ-சக்தி-ஐக்ய ரூபிணீ. (விளக்கும் ஒளியும், வாக்கும் அர்த்தமும் போல் சிவனும் சக்தியும் ஒன்றே. ஸ்ரீசக்கரத்தில் மேல் நோக்கிய நாலு முக் கோணம் சிவ சக்கரம். கீழ் நோக்கியுள்ள ஐந்து முக் கோணம் சக்தி சக்கரம்; இவற்றின் ஐக்கிய

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

1000. ஓம் லலிதாம்- ஸ்ரீம் ஹ்ரீம் ஐம் ஓம்.
பிகாயை நம:

ரூபமானவள். ஓ. 'சதுர்ப்பி: ஸ்ரீ கண்டை: சிவயுவதிபி: பஞ்சபிரபி—ஸௌ. ல. 11. அல்லது ஹம்ஸ மந்திர ரூபமாயிருப்பவள்.)

1000. லலிதமான அம்பிகையாக விளங்குபவள். (அதுவே நித்திய ஸௌந்தர்ய நித்தியானந்த நிலை. விளை யாட்டுக் காட்டிக் குழந்தைகளை வளர்க்கும் தாய் போன்றவள் லலிதாம்பிகை. ஓ. 'சோபா விலாஸோ மாதுர்யம் காம்பீர்யம் ஸ்தைர்யதேஜஸீ। லாலித்யஞ் ச ததௌதார்யம்-இத்யஷ்டௌ பௌருஷா குணா:॥' இத்யபி-யுக்த-ப்ரஸித்தம் லலிதத்வம். 'லலிதம் ரதி சேஷ்டித' மிதி காம-சாஸ்த்ர-ப்ரஸித்தஞ் ச ॥ ஓ. 'லலிதேதி நாம யுக்தம் தவ கில திவ்யா நவாவ்ருதய: । தனுரைக்ஷவ-மஸ்த்ராண்யபி குஸுமானி ததாகிலம் லலிதம்' ॥ ஓ. 'லலிதேதி ஸுதாபூர-மாதுரீ-சோர-மம்பிகே। தவ நாமாஸ்தி யத் தேனஜிஹ்வா மே மதுமத்தமா ॥' வேதபாதஸ்தவம் — சங். 'அத்ராந்தேபி உச்சார்ய: ப்ரணவ:'—ஓம்.)

பாஷ்யம் முற்றும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

9642745434
Venkateswaran

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கும்பம்	மீனம்
3, 4, 5	6, 7

புதன்	பகல் இரவு	லாபம் உத்தி	தனம் அமிர்	சுகம் ரோகம்	விஷம் லாபம்	சோரம் சுகம்	அமிர் தனம்	உத்தி [illegible]
வியாழன்	பகல் இரவு	தனம் அமிர்	சுகம் ரோகம்	சோரம் விஷம்	அமிர் தனம்	உத்தி லாபம்	விஷம் சுகம்	ரோகம் சோரம்
வெள்ளி	பகல் இரவு	சுகம் ரோகம்	சோரம் லாபம்	உத்தி தனம்	விஷம் சுகம்	அமிர் சோரம்	தனம் உத்தி	லாபம் விஷம்
சனி	பகல் இரவு	சோரம் லாபம்	உத்தி தனம்	விஷம் சுகம்	அமிர் விஷம்	ரோகம் உத்தி	லாபம் சோரம்	சுகம் அமிர்

ஐந்தும் வெற்றிக்கு இன்றியமையாதவை

குமரன் தங்கமாளிகை
தங்கம் • வைரம் • பிளாட்டினம் • சில்வர்

...ச்சேரி, சென்னை - 600 042. ✆ : 044-22434888
- 602 001. ✆ : 044-27664555

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,